சந்தியாவந்தனம், ஏகாதசி விரதம், பஞ்சாயதன பூஜை முதலியவற்றைப் பலர் புதிதாக அனுஷ்டிக்க முற்பட்டனர்,

''அமரகலாவிலாஸினீஸபை'' என ஒன்றை நிறுவி, அதில் ஸ்ரீ சர்மா அவர்கள் இளைஞர் முதியோர் ஆகிய எல்லோருக்கும் இலவசமாகக் காவ்யபாடம் சொல்லி வந்தார். அத்துடன், சென்னை நகரிலே ஆங்காங்கு பல ஸம்ஸ்கிருத வகுப்புகள் நடத்தினர். இராஜாஜியவர்கள் கூட, சிறிதுகாலம் நமது சர்மாவிடம் ஸம்ஸ்கிருதம் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வைதிக ஸேவக ஸபை, வேத பாஷ்யபுராணஸபை, அஷ்டாதச புராணப்ரவசனஸபை, தெய்வ நெறிக் கழகம் இப்படிப் பல ஸபைகளைத் துவக்கி, ஆஸ்திகப் பிரசாரம் செய்தவர் ஸ்ரீஸோமதேவ சர்மா. அந்தக் காலத்தில் சென்னையிலே இவர் ஒரு ''ஸர்வ வேத மத மஹாநாடு'' கூட்டினர். 1938லே சென்னையில் நடைபெற்ற ''அகில இந்திய வித்வத் பரிஷத்'தின் வைதிகக் காரியதரிசியாகப் பணியாற்றினர். அத்துடன் பல இடங்களில் வேதகாவ்ய வகுப்புகளைத்துவக்கி வைத்தார்.

ஸோமதேவரின் வாக்குவன்மையைப் பற்றித் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகளே பாராட்டிப் பேசியிருக்கிறுர் என்றால், அதற்கு மேல் வேறு என்ன சொல்ல இருக்கிறது? காஞ்சிகாமகோடி ஆச்சார்யாள் அவருக்கு ''ஸாஹித்ய வாங்முக பூஷணம்'' என்ற பட்டத்தை அளித்திருக்கிறுர்கள், ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அவருக்கு 'தர்மஸேவா துரந்தரர்' என்ற பட்டத்தை வழங்கியிருக்கிறுர்கள். காசியிலுள்ள பாரத தர்ம மண்டலத்தார் அவருக்கு ''மஹாமஹோபதேசகர்'' என்ற பட்டத்தைக் கொடுத்திருக்கிறுர்கள், இவற்றைத் தவிர, 'பிரஸங்கவர' 'புராணஸாகர' 'புராணரத்ன' 'புராணப்ரவசன ப்ரவீண கீதா வாசஸ்பதி' 'தர்மவீர' 'பாகவதபூஷண' 'யஜ்ஞ ஸம்ரக்ஷக' போன்ற பெருமைக்குரிய பல பட்டங்களையும் இவர் பெற்றுள்ளார். அத்துடன் பொது மக்களே இவருக்கு ''வியாஸ சர்மா'' ''ஸூத சர்மா'' என்னும் பட்டங்களை நடைமுறையில் வழங்கியுள்ளனர்.

ஸோமதேவருக்கு இப்போது 76 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. ஆனல் இன்னும் அவருடைய சிந்தனையிலும் வாக்கிலும் இளமை ததும்புகிறது. ''வைதிக தர்ம வர்த்தனி'' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து, இன்றைக்கும் தலைசிறந்த ஆஸ்திகப் பணி புரிந்து வருகிறுர். இந்தத் தள்ளாத வயதிலும் அவருக்குத் தளராத ஆற்றலைத்தந்து கொண்டிருப்பது, அவர் சனிக்கிழமை தோறும் கடைப்பிடித்து

வருகிற மௌன விரதம் என்றே எண்ணுகிறேன்.

ஆஸ்திகத்திற்கும், இந்து தருமத்திற்கும் ஸ்ரீசர்மா அவர்கள் ஆற்றியிருக்கும் பணியை அளவிட முடியாது. அவர் எழுதியுள்ள பல அரிய நூல்கள் இப்போது கிடைப்பதாய் இல்லை. அவற்றுள் பதினெண்புராணங்கள் போன்ற ஒரு சிலவற்றையேனும் புதிய பதிப்பாக வெளியிட வேண்டும். ஸ்ரீசர்மா அவர்கள் பணத்தையே குறியாகக் கொண்டவர் அல்ல. ஆகையால் வசதி படைத்தவர்கள் அவரிடம் அனுமதி பெற்று அந்நூல்களை அச்சிட்டால், அதுவே ஆஸ்திக உலகத்துக்குச் செய்யப்படுகிற பெரும் பேருபகாரமாய் அமையும்.

ஸ்ரீசர்மா அவர்கள் நீடூழி வாழுமாறு, நாம் எல்லாம்வல்ல இறைவனை வணங்குவோமாக!

எது வறுமை?



ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார்

மிகவும் கொடியது வறுமை ஒன்றுதான். 'நெருப்பிலும் படுத்து உறங்கலாம்; வறுமையுடையவன் உறங்கமாட்டான்' என்கின்றார் திருவள்ளுவர்.

அதனாலேதான் அருந்தமிழன்னை ஔவையார், ''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்று கூறுகின்றார்.

இனி, பொருட்செல்வம் இல்லாத நிலையாகிய தரித்திரத்தையே வறுமை என உலகம் நினைக்கின்றது. பொருளுடையானைச் செல்வவான் என்றும் பாராட்டுகின்றார்கள். இது மேல்வாரியான கருத்து. ஆழமாகப் பார்க்கின்றபோது மாறுபடும்.

செல்வத்தின் பயன் யாது? இன்பம்.

வறுமையின் பயன் யாது? துன்பம்.

உள்ளபடியே செல்வம் இன்பத்தைத் தருகின்றதா? ஒருவனுக்குப் பத்து லட்சம் ரூபாய் சொத்துநிலபுலம், மாடமாளிகை சுழல் நாற்காலி. அவரைச் சுற்றி ஏவலர்கள் சுழல்கின்றார்கள். மேலே மின்சார விசிறி சுழல்கின்றது. அவர் மனம் கவலையினால் சுழல்கின்றது. வருமான வரியை நினைத்து வருந்துகின்றார். யாசகர்களைக் கண்டால் சீறுகின்றார். பணம் வெறுமனே பெட்டியிலிருந்தால், கள்ளர் வருவாரோ என்ற வாட்டம். வட்டி நஷ்டப்படுகின்றதே என்ற வருத்தம். வட்டிக்குத் தந்துவிட்டால், பணம் திரும்பி வர வேண்டுமே என்ற வேதனை. உடன் பிறந்தார் பங்கு கேட்கும் போது கவலை. பிள்ளைகள் சிறிது தாராளமாகச் செலவழித்தால் மனவருத்தம். தனக்குப் போட்டியாக ஒருவன் கடை வைத்தால் மனத்தில் புழுக்கம். தன்னினும் மேம்பட்ட தனவந்தனைக் கண்டு பொறாமைக் கனல். இப்படிப் பல்வேறு கவலைகள்!

நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது தனவந்தர்கள் கவலையின் வடிவங்களாகத்தான் காட்சியளிக்கின்றார்கள். அவர்களைக் கண்டால் நமக்கு இரக்கமாக

இருக்கின்றது. பாவம், அவர்கள் நரக வேதனையை இங்கேயே அனுபவிக்கின்றார்கள். ஒருகணம் அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி யில்லை; ஆறுதல் இல்லை; சாந்தி யில்லை; சௌக்யமில்லை. வேளையில் உண்கின்றார்களில்லை; உண்ணும் போதும் அமைதியோடு உண்கின் றார்களில்லை; அவர்கள் படுத்தால் உறக்கம் வருவதில்லை.

இன்பத்திற்குக்காரணம் செல்வ மாக இருந்தால், இவர்கள் இத்தனை வேதனை ஏன் படுகிறார் கள்?

இனி, அரசர்களும் அல்லல்படு கின்றார்கள். அளவற்ற நாடும் நகரமும், மாடமாளிகையும், கூட கோபுரமும், உயர்ந்த பஞ்சணையும், பொன்னும் மணி யும், பட்டும், பவளமும், அவர் கட்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. பரிதாபம்!

ஒரு அரசன். அவனுடைய பொன் மாளிகையின் மீதுகொடி பறக்கின்றது. வாயிலில் முரசு முழங்குகின்றது. கொற்ற வெண் குடை நிழற்றுகின்றார்கள். சிறப் பான செல்வங்கள் யாவும் நிரம்பி யிருக்கின்றன. அவனுடைய ஆணை எட்டுத் திசைகளிலும் செல்லுகின்றது. செவியினால் எதனையும்பார்க்கின்றான். கண்ணி னால் பேசுகின்றான். ஆயிரக் கணக் கில் ஏவலர்கள். ஆடையணி கலன்களுக்கு அளவேயில்லை.

இந்தப் பேரரசனுக்கு இன்பம் இல்லை? என்ன காரணம்? இந்தப் பெரிய அரசன் தன்னிலும் மிகுந்த பெருமையும் செல்வமும்படைத்த மற்றொரு அரசனைப் பற்றிக் கேட் டறிந்தான். அவனிலும் தன் செல்வம் சுருங்கித் தோன்றியது. உடனே,மேலும் பெருஞ் செல்வந் தேட முயலுகின்றான். சிறிதும் நிம்மதியில்லை. உணவு உள்ளே செல்ல மறுக்கின்றது. இமை பொருந்த மறுக்கின்றது!

மனிதனுக்கு இன்றியமை யாதவை உணவும் உறக்கமும். இந்தஇரண்டும் அந்த அரசனுக்கு இல்லாதொழிந்தன.

அழகின் கொழுந்தன்ன இளம் மனைவி வந்து, "என்ன வாட் டம்?" என்று வினவுகின்றாள்.

உடனே அவள் மீது சீறி விழு கின்றான். கொல்லன் உலையில் உள்ள தோல் துருத்தியின் வெப்ப மான காற்றுப்போல் பெருமூச்சு எறிகின்றான். பொறாமைத் தீ மூண்டு எரிகின்றது. கவலைக் கடலில் மூழ்கி அவல முறுகின் றான்!

என்னே பரிதாபம்! அந்தோ! அரசபோகம் அவனுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. இவன் இங்ஙனம் வேதனையுறுகின்றான். மற்றொரு இடத்தில் ஒரு நிகழ்ச்சி.

ஒரு வறியவன் விறகு வெட்டித் தலையில் சுமந்து, ஊர் ஊராகத் திரிந்து விற்றான். சிறுபணம் கிடைத்தது. அதனைக் கொணர்ந்து மனைவி கையில் தந் தான்.

அவள் புல்லரிசிக் கஞ்சி வைத் தாள். கீரையை வதக்கித் தாளிதம் புரிந்து சமைத்தாள். அவன் மனைவி படைக்க, மக்க ளுடன் இருந்து மிக்க மகிழ்ச்சி யோடு உண்டான். தன் மனைவி யையும் உண்ணச் செய்தான். இருவரும் அமர்ந்து வெற்றிலை பாக்குஅணிந்து கொண்டார்கள்.

"போனகம் என்பது தானுழந்து உண்டல்". ஆதலால் உழைத்து உண்பதுவே சிறப் புடையது. அடுத்த வீட்டில் முயற்சியும் உழைப்பும் இன்றி சோம்பலின் வடிவாக இருக்கும்

ஒருவனைக் கண்டு நகை செய்தான். நமக்கு நிகர் இல்லை என்று எண்ணி உவக்கின்றான். அவன் மனத்தில் நிரம்பிய அமைதி; ஆறுதல்; மகிழ்ச்சி.

முன்னே ஒரு அரசன் பற்பல செலவங்கள் சூழ இருந்தும் கவல்கின்றான். விறகு வெட்டி மகிழ்கின்றான். காரணம் யாது?

அவா என்ற ஒன்றால் அரசன் அவலமுறுகின்றான். போதும் என்ற சிந்தையின் நிறைவினால், விறகு வெட்டி மகிழ்ச்சியுறுகின்றான். எனவே, இன்பம் செல்வத்தில் இல்லை. கவலை வறுமையிலும் இல்லை. துன்பம் அவாவினாலும், இன்பம் சிந்தையின் செம்மையினாலும் விளைகின்றன.

''செல்வம் என்பது சிந்தையின்
நிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப்
படுமே.''

என்ற அழகிய பாடல் மூலம், இந்த அழகிய கருத்தை நமக்குக் குமரகுருபரர் உணர்த்துகின்றார். ஆகவே அவாவை விட்டவனே இன்புற்று இருப்பான். பெரிய வறுமை எது? அவா!

இந்தக் கட்டுரையைப் படித்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவாவை அறவே அகற்ற வேண்டும். சிந்தையில் போதும் என்று திருப்தி அடைய வேண்டும்.

●

இல்வாழ்வானது

கடமைகள்



பகவான்
ஸ்ரீ இராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

உலகம் இருப்பதும் மனத்தில்; அது ஒடுங்குவதும் மனத்தில்.

''ஐயனே, நீங்கள் ஏன்சாதனங்கள் பல புரிந்தீர்கள்? உங்களுக்கு அவைகளுக்கு அவசியமென்ன?''

பார்வதிதேவியே பரமசிவனைத் தன் பதியாகப் பெறுதற்குப் பஞ்ச தபசு புரிந்தாள். பின்பு நம் போன்றவர்கள் சாதனங்கள் புரியாது வேறு என்ன செய்வது?

பாலில் வெண்ணெய் இருக்கிறதென்று சொன்னால் போதாது. பாலைத் தயிராக்கிப்பிறகு அதைக் கடைந்தால்தான் வெண்ணெய் கிடைக்கும். அங்ஙனம் பகவத் விஷயத்தைப் பற்றி வெறுமனே பேசிக் கொண்டிருந்தால் போதாது. சாதனங்கள் செய்ய வேண்டும்.

காலில் பாதரக்ஷை அணிந்திருப்பவன், முள் நிறைந்துள்ள இடத்தில் தயங்காது நடக்கலாம். சாதனங்கள் புரிந்து அருளுக்குப் பாத்திரமாயிருக்கிறவன், உலகில் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

உலகம் அநித்தியமானதா?

ஆம், பகவானுக்குப் புறம்பாக வைத்து இவ்வுலகைப் பற்றிப் பிடிக்க நீ முயன்றால், அது அநித்தியமானதே.

பனிக்காலத்தில்ரோஜாச் செடியின் வேரில் பனி படியும்படி, தோட்டக்காரன் மண்ணைக்கிளறி வைக்கிறான். பனிபடுவதால் ரோஜாச்செடி செழித்துவளர்ந்து நல்ல புஷ்பங்களைத் தருகிறது. அதேவிதத்தில் ஆத்ம சாதகன் ஒருவனுக்குச் சில வேளைகளில் வருகின்ற நோய், அவனுடைய சரீரத்தை அருள் ஒளிக்கு மேலும் தகுதியுடைதாக மாற்றியமைத்து விடுகிறது.

நல்லபிராம்மணன் ஒருவனுக்கு சுயநலப்பற்று சிறிதேனும்இல்லா

திருக்குமாகில், தீண்டத் தகாத வர்கள் எனக் கருதப்படுபவர் களிடத்திருந்தும் அவன் சமைத்த உணவை ஏற்றுக் கொள்ளலாம். அதில் தோஷமில்லே. அத்தகைய உணவை அவன் தேடிப் போவ தில்லே. அது தானுக வந்து சேரு கிறது.

எல்லாம் ஈசன் மயம் என்ருல் பாபம் புண்ணியம் இல்லேயென ஆகின்றதல்லவா?

மனிதனிடத்து அகங்காரம் இருக்கிறபொழுது, வேற்றுமை புத்தியும் வருகிறது. வேற்றுமை புத்தி இருக்கிறவரையில் பாப புண்ணியமும்உண்டு. அகங்காரம் அற்றவிடத்து வேற்றுமையில்லே. பாபபுண்ணியமில்லே. எல்லாம் ஈசன் மயம்.

புற ஆசாரத்தில் அளவு கடந்த பித்துக்கொள்ள வேண்டாம். தாகம் கொண்டிருந்த சாது ஒருவர், ஒருவன் தோல் பையில் தண்ணீர் கொண்டு வருவதைப் பார்த்தார்.

அந்நீரை அருந்த விரும்பிய சாது 'அது சுத்தமான தோல் பையா?' என்று கேட்டார்.

நீரைச் சுமந்து வந்தவன் 'சுவாமி, நான் வைத்திருக்கும் தோல்பை சுத்தமானதே. ஆனுல் நீங்கள் தாங்கியுள்ள தோல் பைக்குள் எல்லாவித ஆபாசங் களும் அடைபட்டுக் கிடக்கின் றனவே!' என்ருன்.

சாதனத்தில் ஆரம்பதசையில் இருப்பவனுக்கு, நலம்கேடு ஆகிய வைகளேப் பற்றிய பாகுபாடு இருந்தேயாக வேண்டும். இல்லே யேல் அவன் ஒருவேளே நெறி பிறழ்ந்து போய்விடலாம்.

உலகப்பற்றில் உறைந்து கிடப் பவன், உய்வு அடைதல் அரிதி லும் அரிதாம்.

ஒருவன் பெறுகிற சம்ஸ்காரம் பல பிறவிகளில் அவனேத் தொடர்ந்து வருகிறது.

பூர்வ ஜன்மத்தில் வண்ணுனுக இருந்த ஒருவன், இந்த ஜன்மத் தில் ஒரு ராஜகுமாரனுகப் பிறந் தான்.

மற்றவர்களோடு விளேயாடிக் கொண்டிருந்தபொழுது "இந்த விளேயாட்டை நிறுத்துங்கள். நான் உங்களுக்குப் புதியதொரு விளேயாட்டைக் காட்டித் தரு கிறேன். நான் கல்பாறை போன்று குப்புறப் படுத்துக் கொள்கிறேன். உஸ் உஸ் என்று சொல்லிக்கொண்டு என் மீது நீங்கள் துணி துவையுங்கள்" என்ருன்!

ஒவ்வொருவனும் தன் கடி காரமே சரியாகக் காலம் காட்டு கிறது என்று எண்ணிக் கொள் கிருன். ஆனுல் ஒவ்வொரு கடி காரத்திலும் சிறிதளவாவது பிழை இருக்கிறது.

அதேவிதத்தில், ஒவ்வொரு மனிதனும் தான் அனுஷ்டிக்கிற

மதமே மேலான மதம் என எண்ணிக் கொள்கிருன். உண்மை யில் ஒவ்வொரு மதத்திலும் சிறிதளவாவது குறைபாடு இருக்கத்தான் செய்கிறது.

ஆனுல், இந்தக் குறைபாட்டால் சாதனத்துக்கு இடைஞ்சல் ஒன்றும் நேர்ந்து விடாது.

வேமுெரு சரியான கடிகாரத்தோடு சீர் தூக்கித் தன்கடிகாரத்தைத்திருத்தியமைத்துக்கொள்ளுதற்கு, ஒருவனுக்கு சந்தர்ப்பம் வாய்க்கிறது. அதே விதத்தில் சான்ருேர் கூட்டுறவால் சாதகன் ஒருவன் தன்னிடத்துள்ள குறைபாட்டைத் திருத்தியமைத்துக் கொள்ளலாம்.

ஒருவன் துறவறம் பூண எத்தனித்துக் கொண்டிருந்தான். அதை அறியவந்த அவன் மனைவி பகரலானுள்: ''தாங்கள் துறவியாய்ப் போய் புதிதாய் என்ன பெறப் போகின்றீர்கள்? பிக்ஷையின் பொருட்டு, எட்டுப் பத்து வீடுகளின் முன்போய் நின்ருக வேண்டும். இங்கு ஒரே இடத்தில் உங்களுக்கு வேண்டிய உணவு அகப்பட்டு விடுகிறது.''

யோகிகளுள் வியக்த யோகி, குப்தயோகி என இருதரத்தார் உளர். தன் யோக நிலையை உலகுக்குக் காட்டிக் கொள்ளாது இருப்பவன் குப்த யோகி. குடும்பஸ்தன் ஒருவன் குப்த யோகியாக முயலவேண்டும்.

ரிஷிகள் உலகுக்கு அளித்துள்ள சநாதனதர்மமே யாண்டும் நிலைத்திருக்கும். மற்றவைகள் அப்போதைக்கப்போது தோன்றி மறைந்து போய்விடுகின்றன.

சாஸ்திரங்களைக் கற்பதைவிட, அவைகளைச் சான்ருேர் விளக்கக் கேட்பது மேல். அதிலும் மேலானது அவ்வுண்மைகளை ஓர்தல்.

ஜயப்பூரில் கோவிந்தனுடைய ஆலயத்தில் அர்ச்சகர்களாக அமர்ந்திருந்தவர்கள், முதலில் பிரம்மசாரிகளாக இருந்தார்கள்.

ராஜா அவர்களைத் தம்மிடம் வரும்படி சொல்லியனுப்பிய பொழுது, அவர்கள் அங்கு செல்ல மறுத்துவிட்டனர். ராஜா தங்களிடம் வரட்டும் என்று சொல்லியனுப்பினுர்கள்.

பின்பு ராஜா மந்திரிகளோடு ஆலோசனை செய்து, அந்த பிரம்மசாரி அர்ச்சகர்களுக்கெல்லாம் விவாகம் செய்து வைத்துவிட்டார்.

அதன் பிறகு, அவர்கள் தாமாகவே ராஜாவிடம் இதை முன்னிட்டு — அதை முன்னிட்டு என்று ஓடிக் கொண்டிருந்தனர். போகும்பொழுதெல்லாம் பிரசாதத்தைக்கையில் எடுத்துச்சென்று அரசனுக்கு வழங்கினுர்கள்.

குடும்பிகள் ஆனபிறகு, பிள்ளைகளைப் பெற்றெடுத்தான பிறகு, அவர்களின் தேவைகள் அதிகரித்தன. சுதந்தர உணர்வும் அவர்களைவிட்டுப்போய்விட்டது.

ஆழ்வார்களும் அரனும்



ஜகத்குரு
ஸ்ரீகாமகோடி
பீடாதிபதிகள்

கவிகளில் சிரேஷ்டர் காளிதாஸன்.

ரகு வம்சத்தில், தேவதைகள் வைகுண்டத்திற்குப் போய் ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்தித்தார்கள் என்று அவர் சொல்லுகையிலும்;

குமார ஸம்பவத்தில், பிரம்மாவிடத்தில் தேவர்கள் போய் பிரார்த்தித்ததைச் சொல்லுகையிலும்;

கைலாயத்திற்குத் தேவர்கள் போய்ப்பரமசிவனைஸ்தோத்திரம் செய்ததைச் சொல்லுகையிலும்;

அந்த அந்த மூர்த்தியை உத்கிருஷ்டமாகச் சொல்லியிருக்கிறார்.

இப்படி ஒவ்வொரு மூர்த்தியையும் உத்கிருஷ்டமாகச் சொல்லிவிடில், எதுதான் உத்கிருஷ்டம் என்று கேட்கக் கூடியவர்களுக்கு,

''ஏகைவ மூர்த்திர்விபேதே
த்ரிதா ஸா
ஸாமாந்யமேஷாம்
ப்ரதமாவரத்வம்''

என்று அவர் பதில் சொல்லியிருக்கிறார்.

''ஒரு மூர்த்தி மூன்றாகப் பிரிந்தது. உயர்ந்தது, தாழ்ந்தது என்பது மூன்றுக்கும் பொது'' என்பது அதன் அர்த்தம்.

காகத்திற்கு ஒரு கண்தான் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள்; ஆனால் இரண்டுகண்களிலும் கண்மணி இருக்கிறது அதுஒன்று தான். இந்தக்கண்ணால் பார்க்கும் போது அது இங்கே ஓடிவந்து விடுகிறது. அந்தக்கண்ணால்பார்க்கும் போது அங்கே ஓடி விடுகிறது.

அப்படியே சிவனைப் பார்த்தால் விஷ்ணு அங்கே வந்து விடுவார், விஷ்ணுவாகப் பார்த்தால் சிவன் அங்கே வந்துவிடுவார்!

காதம்பரியைச் செய்தவராகிய பாணகவியும், மங்கள சுலோகத்தில், ''ஈசுவரன் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களாக இருக்கிறார். ஒவ்வொரு குணத்தை ஒவ்வொரு ஸமயத்தில் கிரஹிக்கிறார்'' என்று சொல்லியிருக்கிறார்.

தேவாரத்தில், அப்பர் ஸ்வாமிகள் திருவாரூர் க்ஷேத்திரத்தின் பழமையைச் சொல்லுகையில், "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ, ஓருருவே மூவுருவாய் ஆனநாளோ, திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே" என்று சொல்லியிருக்கிறார். ஒரு ரூபம் மூவுருவாயிற்று என்று அவர் சொல்லி யிருக்கிறார்.

திருவாய்மொழியில் நம்மாழ்வார், "முனியே, நான்முகனே, முக்கண்ணப்பா" என்று விஷ்ணுவைப் பாடியிருக்கிறார். விஷ்ணுவைஸ்துதிசெய்ய வந்தவர் அவரையே "முக்கண்ணப்பா" என்றுசொல்லியிருப்பதன்கருத்து தெளிவாக இருக்கிறது.

பேயாழ்வார் திருமலைக்குத் தரிசனத்துக்குப் போய்,

"தாழ்சடையும் நீள்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும்
தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவமொன்றா
யிசைந்து"

என்று சொல்லியிருப்பது பிரசித்தம்.

பொய்கை ஆழ்வார்,

"அரன்நாரணன்நாமம்
ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையும்
கோவில்—வரைநீர்
கருமம் அழிப்புஅளிப்புக்
கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி
யொன்று"

என்று பாடியிருக்கிறார்.

"உனக்கு அரன் என்றும் அரி என்றும் இரண்டு பெயர்களுண்டு; விருஷபம் என்றும் புள் என்றும் இரண்டு வாகனங்களுண்டு; மலை என்றும் கடலென்றும் இரண்டு இருப்பிடங்களுண்டு" என்பது இதன் பொருள்.

கம்பனாட்டார், "அரன் அதிகம் அரி அதிகம் என்றுரைப்போருக்கு பரகதியில்லை" என்று சொல்லிவிட்டார்.

விப்ரநாராயணன், பக்தாங்கிரிரேணு, தொண்டரடிப் பொடி ஆழ்வார் என்று பல பெயர்களையுடைய பக்தர், ஸ்ரீ ரங்கநாதனையேபாடுவதில்ஆர்வமுள்ளவர். மற்ற கோயில்களில் எழுந்தருளியிருக்கும் விஷ்ணு மூர்த்திகள் தங்களைப் பாடும்படி அவரைக் கேட்டபோது, "பாட மாட்டேன்" என்று சொன்னாராம். எல்லா மூர்த்திகளும் விஷ்ணு மூர்த்தி என்பது அவருக்குத் தெரியும். ஆனால் ஸ்ரீரங்கநாத மூர்த்தியிடம்தான் அவருடைய மனம் ஈடுபட்டிருந்தது.

இப்படியே ஹனுமாரைப்பற்றியும் கதை சொல்லுவதுண்டு. ஸ்ரீ கிருஷ்ணனும் ஸ்ரீ ராமனும் விஷ்ணுவின் அவதாரங்கள் என்று அவருக்குத் தெரியுமாயினும், கிருஷ்ணன் ராம உருவெடுத்துக் கொண்டால் தான், தான் வணங்க முடியுமென்று அவர் சொல்லி விட்டாராம்.

ஸ்ரீரங்கநாதனுடைய க்ஷேத்திரத்திற்கே வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் கோயில்என்றுபெயர்.

சைவ ஸம்பிரதாயத்தில், சிதம்பரத்திற்கே கோயில் என்று பெயர்.

கோ-அரசன், இல்-வீடு. ஆகையால் கோயில்-அரசன் வீடு.

எந்த அரசன்?

ஒரு ஊரில் ரங்கராஜன், ஒரு ஊரில் நடராஜன்.

ஒருவன் தூங்கிக் கொண்டு ஆநந்தத்தில் இருக்கின்றான், ஒருவன் விழித்துக்கொண்டு ஆநந்தத்தில் ஆடுகிறான்.

ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளில், ஜாக்ரத் அவஸ்தையிலும் ஸ்வப்ன அவஸ்தையிலும் கவலையுண்டு, பயமுண்டு. தூக்கத்தில் தான் ஆநந்தம். ஜாக்ரதவஸ்தையில் ஒருவன் எப்பொழுது கூத்தாடுவான்? ஒரு கவலையுமில்லாமல் ஆநந்தமாக இருக்கையிலேயேகூத்தாடுவான்.

கிருஷ்ணகர்ணாமிருதாசாரியார் தாம் சைவ பரம்பரையில் வந்து பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று அதை ஜபிப்பவராயினும், யசோதையின் குழந்தையாகிய மூர்த்தியிலேயே தனது மனம் லயித்துப் போய் விட்டதாகச் சொல்லியிருக்கிறார்.

அப்பைய தீக்ஷிதர் மகேசுவரனும் ஜனார்த்தனனும் ஒருவரேயாயினும், இளம்பிறையை ஜடையில் முடித்தரூபத்தில்தான் தனது மனம் லயித்து விட்டதாகச் சொல்லியிருக்கிறார்.

இரண்டும் ஸமமென்று சொல்லக் கூடாது. ஸமமென்றால் இரண்டிருப்பதாக ஏற்படும். இரண்டும் வெவ்வேறல்ல என்பதே ஸத்தியம். அவர்களுக்குள் பேதமில்லை.

மஹா மந்திரத்தின் மகிமை

மஹரிஷி ஸ்ரீ சிவானந்தர்

துவாபர யுகத்தின் கடைசியில், மகரிஷி நாரதர் பிரம்மாவிடம் சென்று "ஓ படைப்புக் கர்த்தாவே, பயங்கரம் நிறைந்த கலியுகத்தின்போது, நான் மண்ணுலகில் சுற்றித் திரிந்து கொண்டே எவ்வாறு மாயையாகிய மாபெரும் கடலைக்கடக்க முடியும்?" எனும் கேள்வியைக் கேட்டார்.

அதற்குப் பிரம்மா, "நன்கு கேட்டாய்! கலியுகத்தின்போது மாயை எனும் கடலைக் கடக்க வழியினைக் காட்டும் உபநிடதங்களின் விவேகம் நிறைந்த இந்த இரகசியத்தைக் காது கொடுத்துக் கேள். பகவான் நாராயணனின் திருநாமத்தை உச்சரித்தாலே போதும்; ஒருவன் கலியின் வலிமையினை உதறித்தள்ள முடியும். முழுமுதற் பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனின் திருநாமத்தை உச்சரித்தால் மட்டுமே ஒருவன் கலியின் ஆட்சியினின்று தப்ப முடியும்" என்று விடை கூறினார்.

மீண்டும் நாரதர், "அந்த திருப்பெயர் யாது?" என வினவினார்.

பின்னர் பிரம்மா பின்வரும் சூத்திரத்தை உச்சரித்தார் :

"ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே!

ஹரேகிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!"

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகவான் நாராயணனின் பதினாறு பெயர்களும் கலியின் அழுக்குகளைப் போக்குகின்றன. வேதங்கள் அனைத்திலும் இதைத்தவிர வேறு எந்த வழியும் சிறந்ததாகக் காணப்படுவதற்கு இல்லை.

தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த இம்மஹாமந்திரத்தின் பொருள் யாது?

இது எல்லோருக்கும் ஓர் பொதுத்தோழன், புகலிடம் தந்தருளும் புண்ணியன்.

வயது, சாதி, இனம், பிரிவு, நிறம், தேசியத் தன்மை ஆகியவற்றின் வேலிகளைத் தாண்டி, ஆணோ அல்லது பெண்ணோ, இளைஞரோ அல்லதுமுதியவரோ, உயர்ந்தோரோ அல்லது தாழ்ந்தோரோ, யாவரும் இம்மந்திரத்தை உச்சரிக்கலாம்.

இத்தூய மஹாமந்திரத்தை உச்சரிப்பதில் மறைந்து கிடக்கும் உண்மையாதெனில், உலகியல்

ஆன்மிகம்' ஆகிய இவ்விரண்டையும் ஒட்டிய பல்வகை நலன்களையடையும் பாக்கியத்தைப் பெறுவாய்.

இது உன் அன்புத் தந்தையையும், அருமைத் தாயையும்விட உயிருக்கு உயிரானது. உன் வாழ்நாள் முழுவதும் கட்டிக் காக்கும் காவலன்.

இப்பாரினில் எல்லாப்பொருள்களும், எல்லாப் பேர்வழிகளும் உன்னைக் கைவிடலாம். ஆனால் இம்மஹாமந்திரம் மட்டும் உன்னை ஒருபோதும் நட்டாற்றில் விடாது.

எந்நிலையிலும் இணைபிரியாத் தோழன், ஒளிதரும் வழிகாட்டி, எல்லோரையும் பேணிவளர்க்கும் பெருந்தகையாளன் இந்த மஹா மந்திரம்.

ஆகவே, இன்றே, இன்னே, பதினாறு திருப்பெயர்களடங்கிய இம்மாபெரும் தெய்விக மந்திரத்தைப் பன்னிப்பன்னிப் பாடுவாயாக!

★

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரத ஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

வீணாகாத கோப சந்தோஷங்களை உடையவனும், தானே செய்து பின்னும்பார்க்கிறவனும், தன்னால் அறியப்பட்ட பொக்கிஷ சாலையை உடையவனுமாய் இருப்பவனுக்கு, பூமியானது செல்வங்களை அளித்துக்கொண்டே இருக்கிறது.

அரசனானவன் அரசனென்கிற பேர் மாத்திரத்தினாலும், குடையினாலும்தான் சந்தோஷத்தை அடையவேண்டும். திரவியங்களை வேலைக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒருவனாகவே எல்லாவற்றையும்கிரஹித்துக்கொள்கிறவனாக இருக்கக் கூடாது.

பிராமணனை பிராமணனே அறிவான். ஸ்திரீயைக் கணவன் அறிவான். மந்திரியை அரசனே அறிவான்.

தெய்வங்கள், அரசர்கள், பிராமணர்கள், வயதானவர்கள், குழந்தைகள், நோயாளிகள் இவர்கள் விஷயத்தில், கோபத்தை எப்பொழுதும் முயற்சியுடன் அடக்கவேண்டும்.

அறிவுள்ளவன், மூடர்கள் செய்யும் பயனற்ற கலகத்தை

விலக்க வேண்டும். அதனால் உலகத்தில் கீர்த்தியை அடைவான். அவனுக்கு எல்லாக் காரியங்களும் சித்திக்கும்.

மூடனானவன், வித்தையால் சிறந்தவர்களையும், தனத்தால் பெரியவர்களையும், குலத்தால் மேலானவர்களையும் எப்பொழுதும் அவமதிப்பான்.

இழிவான செய்கை உடையவனையும், அறிவில்லாதவனையும், அஸூயை உடையவனையும், தர்மம் செய்யாதவனையும், கடூரமாகப் பேசுகிறவனையும், கோபமுடையவனையும் அனர்த்தங்கள் சீக்கிரம் வந்து அடைகின்றன.

தான்சொன்னசொல் தவறாமல் கொடுப்பதும், கூறிய காலத்தை மீறாமல் இருப்பதும், இனிமையாகப் பேசுவதும், யாவரையும் தன்னிடம் வரும்படி செய்யும்.

சொன்ன சொல்தவறாதவனும், ஸமர்த்தனும், நன்றியறிந்தவனும், புத்திமானும், நேர்மையுள்ளவனுமான மனிதன், பொக்கிஷம் நசித்தாலும் பரிவாரத்தை அடைகிறான். (அதாவது, ஜனங்கள் யாவரும் அவனிடத்தில் அன்புகொண்டு வருவார்கள்).

தைர்யம், மனத்தை அடக்குதல், வெளியிலுள்ள கண் முதலிய இந்திரியங்களை அடக்குதல், சரீர சுத்தி, தயை, கடூரமில்லாத வார்த்தை, மித்ரர்களுக்கு துரோகம் செய்யாமை, இந்த ஏழும் செல்வத்தை நன்குவிருத்தி செய்கின்றவைகள்.

ஓ அரசனே, யாவரும் அனுபவிக்கும்படி பொருளைப் பிரித்துக் கொடாதவனும், கெட்ட மனமுடையவனும், நன்றி மறந்தவனும், லஜ்ஜை அற்றவனுமான அரசன், உலகத்தில் விலக்கத் தக்கவன்.

எவன் குற்றமுள்ளவனாய் இருந்துகொண்டு தன்னிடமுள்ள குற்றமில்லாத மனிதனைக் கோபமடையச் செய்கிறானோ, அவன் பாம்புடன் கூடிய வீட்டில் வசிப்பவன் போல, இரவில் சுகமாகத் தூங்குவதில்லை.

எவர்கள் மனவருத்தமடைந்தால் யோக க்ஷேமத்திற்கு தீங்கு ஏற்படுமோ, அவர்கள் விஷயத்தில், தேவதைகளுக்குச் செய்வது போல் எப்பொழுதும்சந்தோஷம் வரும்படி நடக்க வேண்டும்.

ஸ்திரீகளிடத்திலும், கள் முதலியவற்றால் மதம் கொண்டவர்களிடத்திலும், ஒழுக்கமில்லாதவர்களிடத்திலும், இழிவானவர்களிடத்திலும் வைக்கப் பட்டிருக்கிற பொருள், சந்தேஹத்தை அடைந்தவைகளே. (அதாவது, அவர்கள் நம்பி யாரிடமாவது கொடுத்து, பொருள் ரக்ஷிக்கப்படாமல் போய் விடுமெனக் கருத்து.)

எந்தக் குடும்பத்தில் ஸ்திரீயும் சூதாடியும் சிறுவனும் அதிகாரம் செலுத்துகிறார்களோ, அந்தக் குடும்பத்தினர், கல்தோணியால் நதியில முழுகுவது போல் சுதந்திரமற்றவர்களாகி முழுகி விடுவார்கள்.

எவனை சூதாட்டக்காரர்கள் புகழ்கின்றனரோ, எவனைக் கூத்தாடிகள் புகழ்கின்றனரோ, எவனை வியபிசாரிகள் புகழ்கின்றனரோ, அவன் உயிருடன் நல் வாழ்க்கை நடத்த முடியாது.

ஓ பாரதரே, சிறந்த வில்லை உடையவர்களும், அளவற்ற பராக்ரமம் உடையவர்களுமான பாண்டவர்களை விட்டு, உம்மால் துரியோதனனிடத்தில் பெரிய ஐச்வர்யம் வைக்கப்பட்டிருக் கிறது.

ஐச்வர்ய மதத்தால் புத்தி மயங்கி இருக்கின்ற அவன், அந்த ஐச்வர்யத்திலிருந்து, மூவுலகங் களிலிருந்தும் மஹாபலி நழு வினதுபோல் நழுவி வருத்தப்படு வதைப் பார்ப்பீர்.

திருதராஷ்டிரன் சொல்லு கிறார்:

''மனிதன் பிரம்மாவினுல் முன் வினைப்பயனை அனுசரித்துபடைக் கப்பட்டு இருப்பதால், பொருள் உடையவனுகவும் பொருள் இல் லாதவனுகவும், கயிற்றில் கோக் கப்பட்டதும் மரத்தால் செய்யப் பட்டதுமான பொம்மை போல அசக்தனுக இருக்கிறன். ஆகை யால் நீ அதைச் செய்-இதைச் செய் எனக்கூறுகிறுயே, எப்படிச் செய்ய முடியும்? நீ கோபித்துக் கொள்ளாமல் சொல்லு; நான் உறுதியுடன் கேட்கிறேன்.''

விதுரர் சொல்லுகிறுர்:

ஓ அரசனே, ஸமயம் தவறி வார்த்தை சொல்லுகிறவன் பிரு ஹஸ்பதியாக இருந்தாலும், புத் திக் குறைவையும் அவமானத்தை யும் அடைகிறுன்.

ஒருவன் தானத்திஞல் பிரியனு கிறுன். மற்ருெருவன் இனிமை யாகப் பேசுவதிஞல் பிரியனு கிறுன். வேறு ஒருவன் நல்ல ஆலோசனையைக் கூறுவதிஞல் பிரியனுகிறுன். எவன் இயற்கை யாகவே பிரியனுக இருக்கிறுனே, அவன் எப்பொழுதும் பிரிய முள்ளவன்.

வேண்டாதவன் நல்லவனுக இருந்தாலும், நல்லவனெனத் தோன்றுது. அதேபோல் புத்தி மானும் புத்திமானுகத் தோன்று வதில்லை. பிடித்த மனிதன் காரிய மெல்லாம் நல்லதென்றே தோன் றும். வேண்டாதவன் செய்த காரியமெல்லாம்கெட்டதென்றே தோன்றும்.

ஓ அரசரே, துர்யோதனன் பிறந்தவுடன் அவனை விட்டுவிடும் படியும், அந்தப்பிள்ளையை விடுவ தால் மற்ற நூறு குழந்தைகள் விருத்தி அடைவார்கள் என்றும், அவனை விடாவிடில் மற்ற எல் லோருக்கும் நாசம் எனவும் நான் கூறினேன்.

எந்த விருத்தியானது பின்பு நாசத்தை அளிக்குமோ, அந்த விருத்தியைப் பெரிதென நினைக் கக் கூடாது. குறைவாக இருந் தாலும், எந்தக் குறைவானது பின்பு விருத்தியை அளிக்குமோ, அதையே பெரிதாக நினைக்க வேண்டும்.

ஓ திருதராஷ்டிரரே, சிலர் குணங்களால் பூர்ணர்களாக இருக்கிறுர்கள். சிலர் தனத்தால் நிறைந்தவர்களாக இருக்கிறுர் கள். தனத்திஞல் நிறைந்திருந் தாலும், குணத்திஞல் குறைந்த வர்களை விட்டு விடவேண்டும்.

வினா விடை

வினா-1:- யோகிக்கும் ஞானிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

விடை:- யோகி என்பவர், இறைவனோடு ஒன்றுபட்டு இருப்பவர். ஞானி என்பவர், தானே இறைவனாக ஆகி விட்டவர். சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு யோகி. மாணிக்கவாசகர் ஒரு ஞானி.

வினா-2 :- விதியை வெல்ல முடியுமா?

விடை:- உலகியல் இன்பங்களிலே நமக்கு வேட்கை இருக்கும் வரையில், நம்மால் விதியை ஒரு நாளும் வெல்ல முடியாது. உலகியல் இன்பங்களில் விரக்தி ஏற்பட்டு, ஆன்மிக நாட்டம் வலுவடைந்து விடுமானால், அப்போதே விதியும் வெல்லப்பட்டதாகி விடுகிறது.

வினா-3 :- இந்து மதம் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கிறது அல்லவா?

விடை:- ஏற்றத் தாழ்வுகளை மதம் கற்பிக்கவில்லை. மனிதன் தான் அவற்றைத் தனக்குத் தானே கற்பித்துக் கொள்கிறான்

ஆத்மாவே தன்னுடைய உண்மையான ஸ்வரூபம் என்று அறியாமல், சரீரம், மனம், புத்தி இவற்றை அவன் தன்னுடைய ஸ்வரூபங்களாக எண்ணிக்கொள்கிறான். பிறரையும் அவ்வாறே நோக்குகிறான்.

சரீரங்களுக்குள்ளே பலமுடையவை-பலமற்றவை, அழகுடையவை – அழகற்றவை என்பன போன்ற ஏற்றத்தாழ்வுகள் உண்டு. மனங்களுக்குள்ளே நற்குணம் உள்ளவை - துர்குணம் உள்ளவை என்ற ஏற்றத்தாழ்வுகள் உண்டு. புத்திகளுக்குள்ளே நுட்பமானவை — மந்தமானவை என்ற ஏற்றத்தாழ்வுகள் உண்டு. இவ்வாறு ஏற்றத்தாழ்வுகளுக்கு நிலைக்களனாக விளங்குகிற உடலைக் கொண்டோ, உள்ளத்தைக் கொண்டோ, அறிவைக் கொண்டோ ஒரு மனிதனை மதிப்பிடுவது என்பது, உலகத்தில் இந்துக்கள் மட்டுமே செய்துகொண்டிருக்கிற ஒரு குற்றம் அல்ல. எல்லா மதத்தினரும் தான் அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

உடல் மனம் புத்தி இவற்றையெல்லாம் கடந்த ஆத்மஸ்வரூபமாகவே, மனிதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது, இந்து மதத்தின் கோட்பாடு. தூய்மையான ஆத்மஸ்வரூபத்தில், ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமே கிடையாது. ஆகையால், ஆத்மஸ்வரூமாகப் பார்க்கும் போது, ஸமத்துவ நோக்குத் தானாகவே உண்டாகிறது. இந்த ஸமத்துவ நோக்கைப் பெறுவதற்கே ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும் என்கிறது பகவத் கீதை.

எனவே, இந்து மதம் மக்களிடையே ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கிறது என்பது, மிகமிகத் தவறான ஒரு கருத்தாகும். மக்களிடையே மட்டுமல்ல, மனிதர்கள் மிருகங்கள் பறவைகள் போன்ற

சகல ஜீவராசிகளிடையேயும் காணப்படுகிற ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கும், சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கும், உண்மையில் இந்து மதம் ஒன்றுதான் வழி வகுத்துக் கொடுப்பதாய் இருக்கிறது. பகவத்கீதையின் ஐந்தாம் அத்தியாயத்திலுள்ள பதினெட்டாவது சுலோகமே அதற்குச் சான்றாகும்.

அந்த சுலோகத்தின் பொருள் வருமாறு:

''கல்வியும் அடக்கமும் வாய்ந்த பிராமணனையும், பசுவையும், யானையையும், நாயையும், அந்த நாயை உண்ணுகின்ற ஒருவனையும், ஆத்மஞானிகள் சமமாகவே கருதுவார்கள்.''

இத்தகைய ஓர் உத்தமமான கோட்பாட்டைப் போதிக்கின்ற இந்து மதம், மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கிறது என்று கூறப்படுவது அறியாமையின் விளைவேயன்றி வேறல்ல.

வினா-4 :- ஸம்ஸ்கிருதம் ஒரு செத்தபாஷை என்று சொல்லுகிறார்களே? அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

விடை:- ஒரு காலத்தில் உலக வழக்கில் இருந்து (அதாவது, பொது மக்களால் பேசப்பட்டு வந்து), பிறிதொரு காலத்தில் அந்த வழக்கிலிருந்து மறைந்து போய்விட்ட பாஷைதான், செத்தபாஷை எனப்படுவது.

ஸம்ஸ்கிருதம் எந்தக் காலத்திலும் உலகவழக்கில் இருந்ததில்லை. ஆனால், ''மனோன்மணீயம்'' ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள், ''ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து'' என்றுசொல்லுகிறார். ஆகவே, அவர் குறிப்பிடுகிற ஆரியம், ஸம்ஸ்கிருதமாயிருக்கமுடியாது.

அந்தக் காலத்தில், ஸம்ஸ்கிருதத்தைப் போலவே பிராகிருதம் என்று ஒரு பாஷை இருந்தது. பொது மக்களால் பேசப்பட்டு வந்த ஒரு கொச்சையான பாஷை அது.

காளிதாஸனது ''சாகுந்தலம்'' போன்ற ஸம்ஸ்கிருத நாடக இலக்கியங்களைப் படித்துப் பார்த்தால், அவற்றில் வருகிற உயர்ந்த பாத்திரங்கள் எல்லாம் ஸ்மஸ்கிருதத்திலும், சேவகன் தாதி போன்ற கீழான பாத்திரங்கள் எல்லாம் பிராகிருத பாஷையிலும் பேசுவதை நாம் காணலாம்.

அந்தப் பிராகிருதம்தான், ஒரு காலத்தில் உலகவழக்கில் இருந்து பிற்காலத்தில் இல்லாமல் போய்விட்டது. எனவே அதுதான் செத்த பாஷை. பேராசிரியர் சுந்தரம் பிள்ளைவர்கள் ''ஆரியம்'' என்ற சொல்லால் குறிப்பிட்டு இருப்பது, அந்த பாஷையாகத்தான் இருக்கவேண்டும்.

ஸம்ஸ்கிருதம் வேதபாஷை; ஆகமபாஷை; சாஸ்திரபாஷை; புராண பாஷை; இதிஹாஸ பாஷை; இலக்கிய பாஷை. ஆனால், அது எந்த ஓர் இனத்தாருக்கும் தாய் பாஷை அல்ல.

பள்ளியில் போய்ப் படிக்காமலே, தாய் தந்தையரின் உரையாடல்களைக் கேட்டுக் கேட்டு, ஒரு குழந்தையானது தானும் அவர்களைப் போலவே ஒரு பாஷையைப் பேசக் கற்றுக் கொள்ளுமானால், அந்தப் பாஷை தான் அந்தக் குழந்தைக்குத் தாய் பாஷை எனப்படுவது.

தமிழ் பேசும் பெற்றோர்களின் குழந்தைகள், பள்ளிக்குச் செல்லாமலே தாமும் தமிழ் பேசக் கற்றுக்கொண்டு விடுகின்றன. அதே போல் தெலுங்கர் வீட்டுக் குழந்தைகள் தெலுங்கு பேசுவதற்கும், பஞ்சாபியர் வீட்டுக் குழந்தைகள் பஞ்சாபி மொழியைப் பேசுவதற்கும், வங்காளியர் வீட்டுக் குழந்தைகள் வங்க மொழியைப் பேசுவதற்கும், பள்ளி செல்லாமலே பழகிக் கொண்டு விடுகின்றன. ஸம்ஸ்கிருதத்தை அம்மாதிரி பழகிக் கொள்ளும் குழந்தைகள் எங்குமே காணப்படுவதில்லை. ஸம்ஸ்கிருதத்தை அம்மாதிரி பழகிக் கொள்ளவும் முடியாது.

நன்கு கற்றறிந்த பண்டிதர்களால் மட்டுமே, ஸம்ஸ்கிருதத்தில் உரையாட முடியும். அவர்களும், யாகம் முதலிய சில புனிதமான நிகழ்ச்சிகளின் போதுதான் அவ்வாறு உரையாடுவர். மற்ற சமயங்களில் தத்தம் தாய்மொழிகளிலேயே பேசிக்கொள்வார்கள்.

ஒரு பாஷை எவ்வளவுதான் தூய்மை பொருந்தியதாக இருந்தாலும், அது பொது மக்கள் எல்லோராலும் பேசப்படுவதாக ஆகிவிடுமானால், ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே அது உலக வழக்கில் கொச்சைத் தன்மையை எய்திவிடும். ஸம்ஸ்கிருத பாஷை அத்தகைய கொச்சைத் தன்மையை அடைந்து விடக் கூடாது என்பதற்காகவே, அதன் புனிதத் தன்மையைக் காப்பாற்றுதவற்கான ஒரு தற்காப்பு நடவடிக்கையாக, நம் முன்னோர்கள் அதை உலக வழக்கில் நடமாட விடாமல், இலக்கிய வழக்கில் மட்டுமே பயன்படுத்தி வந்தார்கள்.

எனவே, என்றுமே உலக வழக்கில் இருந்திராத ஒரு பாஷையைச் செத்த பாஷை என்று சொல்லுவது, தேர்தலுக்கே நிற்காத ஒருவரைத் ''தோல்வி அடைந்தவர்'' என்று சொல்லுவதற்கு நிகராகும்!

வினா-5 :- உத்தமமான மந்திர சித்தியின் அடையாளம் என்ன?

விடை:- ஒருவர் மந்திர சித்தி அடைந்துவிட்டார் என்பதற்கு, சாஸ்திரங்களில் பல அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், முக்கியமான இரண்டு அடையாளங்கள் இருந்தால்தான், அதை நாம் உத்தமமான மந்திர சித்தியெனக் கொள்ளமுடியும். முதலாவது, காந்த ஊசியானது இயல்பாகவே வடதிசையை நோக்கித் திரும்பி நிற்பது போல, உபாஸகருடைய உள்ளமானது எப்போதும் இயல்பாகவே இறைவனை (அதாவது, அவர் வழிபடும் தெய்வத்தை) நோக்கித் திரும்பி நிற்க வேண்டும். இரண்டாவது, அந்த உள்ளத்தில் எப்போதுமே திருப்தியும் சாந்தியும் குடிகொண்டிருக்க வேண்டும். திருப்தியும் சாந்தியும் அடையாமல் ஒருவர் ஆயிரம் சித்திகளை அடைந்திருந்தாலும், அந்த சித்திகள் அவரிடம் நீடித்து நிலைத்து நிற்கமாட்டா!

வினா-6 :- தகுதிவாய்ந்த பெரியோர்களின் இயல்பு என்ன?

விடை:- தமக்கு ஒரு தகுதியுமே கிடையாது என்று எண்ணிக் கொண்டிருப்பது தான், உயரிய தகுதிகளைப் பெற்ற பெரியோர்களின் இயல்பு.

●

புகழ்படைத்த புண்ணியன்

வேதவேதாந்த வித்வரத்னம் பிரம்மஸ்ரீ
ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

ஒருவனுடைய நற்காரியங்களை பூமண்டலத்தில் உள்ளவர்கள் ஸ்மரிக்கும்வரை அவன் சுவர்க்கத்திலேயே வசிப்பான் என்பதற்கு உதாரணமாக, மகாபாரதம் வனபர்வத்தில் இந்திரத்யும்ந உபாக்யானம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது,—

இந்திரத்யும்நன் என்ற அரசன் சுவர்க்கபோகங்களை அனுபவித்துவிட்டு, அவனுடைய புண்ணியம் முடிவடைந்ததெனக் கருதிக் கீழே தள்ளப்பட்டான்.

அவன் மார்க்கண்டேயரை அணுகி, "என்னைப்பற்றித் தங்களுக்குத் தெரியுமா?" என வினவினான்.

"நான் எப்பொழுதும் கர்மானுஷ்டானத்திலேயே ஈடுபட்டிருந்தபடியால், உன்னைப்பற்றி அறிந்துகொள்ளவில்லை. இமயமலையில் என்னைவிட வயதான பிராவாரகர்ணன் என்ற ஒரு கோட்டான் வாழ்ந்துகொண்டிருக்கிறது. அதைக் கேட்போம்" என மார்க்கண்டேயர் கூறவே, அவ்விருவர்களும் இமயமலைக்குச் சென்று அந்தக் கோட்டானைக் கேட்டனர்.

அது, "எனக்கு உன்னைப்பற்றி ஞாபகமில்லை. இந்திரத்யும்நம் என்று பெயர்கொண்ட ஓர் குளமிருக்கின்றது. அங்கு நாடீஜங்கன் என்று பெயருள்ள, என்னைவிட வயதான கொக்கு ஒன்று வசித்துக் கொண்டிருக்கிறது. அதைக் கேட்போம்" எனக் கூறவே, அம்மூவரும் அங்கு சென்று அதைக் கேட்டனர்.

அது, "எனக்கு இந்திரத்யும்நனைப்பற்றி ஒன்றும் தெரியாது. இதே குளத்தில் அகூபாரன் என்ற ஓர் ஆமை வசிக்கிறது. அது என்னைவிட வயதானது. அதைக் கேட்போம்" எனக்கூற, அனைவரும் அதனிடம் சென்று, "இந்திரத்யும்நனைப்பற்றி உனக்குத்தெரியுமா?" என வினவினர்.

உடனே அது எழுந்திருந்து, சிறிதுநேரம் சிந்தனை செய்தபின் கண்ணும் கண்ணீருமாய், நடுங்கும் உடலுடன் கூறலாயிற்று. "நான் அந்த மகாநுபாவனை எப்படி மறக்கமுடியும்? அக்காலத்

தில் அவன் ஆயிரக் கணக்கான யாகங்களையல்லவோ செய்திருக்கின்றான்.? அவன் தக்ஷிணையாகக் கொடுத்த பசுக்கள் நின்ற இடந்தான் இக்குளம். ஆதலால்தான் இதற்கும் இந்திரத்யும்நம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. அக்காலம்முதல் நான் இவ்விடத்திலேயே வசித்து வருகிறேன்'' என்றது.

உடனே தேவலோகத்திலிருந்து ஒரு திவ்யமான விமானம் அவ்விடம் வந்தது. அடியிற் கண்ட அசரீரியான சில வார்த்தைகளும் அனைவராலும் கேட்கப்பட்டன:

''ஏ இந்திரத்யும்ந! பூமண்டலத்தில் உன் புகழ் இன்னும் மங்கவில்லை. ஆதலால் நீ சுவர்க்கத்தில் இன்னும் சுகமாக வாழலாம். சுவர்க்கத்தில் உனக்கு விருப்பமான இடத்திற்கு இந்த விமானத்தில் ஏறிக்கொண்டு சாவதானமாகச் செல்.''

உடனே அந்தக் கோட்டானையும், மார்க்கண்டேயரையும் அவரவர்களுடைய இடங்களுக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு, இந்திரத்யும்நன் மறுபடியும் அந்த விமானத்தில் ஏறிக் கொண்டு சுவர்க்கத்திற்குச் சென்றான்.

●

பாகவதபுராணம் பாடிய அருளாளதாசர்

இலக்கணவிளக்கப் பரம்பரை

திரு. ச. சோமசுந்தர தேசிகர்

பாண்டி நாட்டுக்குத் திலகம் போன்றது தென் பாண்டி நாடு. அந்த நாட்டிலும், அதனைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலும், பலபல புலவர்கள் பதினாறும் நூற்றாண்டிலே தோன்றினர். அவர்களுள்ளே அருளாளதாசரும் ஒருவராவர்.

அருளாளதாசர் நெல்லி நகரிலே ஒரு வைணவக் குடும்பத்திலே பிறந்தவர். இவரது பிள்ளைத் திருநாமம் வரதனென்பது. இவர் தம் குலத்துக்கேற்பப் பஞ்ச சம்ஸ்காரங்களும் பெற்று, கல்வியில் வடமொழியோடு தென்மொழியிலும் பாண்டித்தியமடைந்தார். அக் காலத்திலே வைணவ சமயத்தார்க்குப் பெரிதும் வேண்டற்பாலதான பாகவதம் எல்லோராலும் கற்பிக்கப் பட்டு வந்தது.

பாகவதம் ஏழு திறத்தனவென்று புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றது. அவை இதிஹாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விஷ்ணுரகசியம், விஷ்ணு யாமளம், கௌதம சம்மிதை என்னும் ஏழினின்றும் போந்தனவாம். அவைகளெல்லாம் வடமொழியிலே யுள்ளவை.

'அவற்றுள் முதலாவதான இதிஹாச பாகவதம் 18000சுலோகங்களாக வியாசமகரிஷியால் செய்யப்பட்டது. அதில் சுருதிகீதை முதலாய 12 கீதைகளும், எம்பெருமான் திருவவதாரங்களில் விஸ்தாரமாக நான்கு திருவவதாரங்களின் சரிதங்களும் அடங்கியுள்ளன.

'இப் பாகவதம் சூர்ணிகைகளாலும், விருத்தங்களாலும், பத்தியங்களாலும், வாக்கியங்களாலும், தண்டகங்களாலும் நிறைந்த 200 அத்தியாயங்களாகப் பிரிந்த 12 ஸ்கந்தங்களையுடையது. ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலும், மத்தியிலும், பெரும்பாலும் அத்தியாய முடிவிலும், பகவத் ஸ்துதிகளுண்டு.

'நான்கு அரிபக்தர்கள்கதைகள் இதில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வக்தா சுகமுனீந்திரர், சுரோதா பரீக்ஷித்து ராஜன். இந்நூல் புலவர் திலகராகிய செவ்வைச் சூடுவாரால் 4970 திருவிருத்தங்களாகத் தமிழில் மொழி பெயர்த்தருளப் பெற்றுளது. இது ஞானத்தை யளிக்கவல்லது.'

உ

திருச்சிற்றம்பலம்

வாட்டமும் துயரும் அச்சமும் தவிர்த்(து)என்
வடிவமும் வண்ணமும் உயிரும்
வேட்டமும் நீயே கொண்டுநின் கருணைத்
தேகமும் உருவுமெய்ச் சிவமும்
ஈட்டமும் எல்லாம் வல்லநின் அருட்பே
ரின்பமும் அன்புமெய்ஞ் ஞான
நாட்டமும் கொடுத்துக் காப்பதுன் கடனும்
நம்பினேன் கைவிடேல் எனையே!

வம்பனேன் பிறர்போல் வையமும் வானும்
மற்றவும் மதித்திலேன் மதஞ்சார்
உம்பல்தோர் அகங்கா ரந்தவிர்ந்(து) எல்லா
உலகமும் வாழ்கவென்(று) இருந்தேன்;
செம்பொனே கருணைத் தெய்வமே எல்லாம்
செயவல்ல சித்தனே சிவனே!
நம்பனே ஞான நாதனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே!

—திருவருட்பா

2. புராண பாகவதம், 36000 சுலோகமுடையது. இதுவும் வியாச பகவானால் செய்யப் பட்டதே. இதற்கு மகா பாகவத மென்று பெயர். இதில் 25 கீதைகளடக்கம். எம்பெருமான் திருவவதாரங்களில் ஆறு திருவவதாரங்களின் சரித்திரங் கள் விஸ்தாரமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

"ஒவ்வொரு அத்தியாயத்திலும் பகவத்ஸ்துதி உண்டு. பெரும்பா லும் அநுஷ்டுப்புச் சுலோகங்களா லும் பிறவற்றாலுமமைந்த அறு நூறு அத்தியாயங்களையுடையது. ஸ்கந்தம் என்னும் பகுப்பு இதில் இல்லை. தசாவதாரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வக்தா நாரத பகவான், சுரோதா உருக்குமணிப் பிராட்டி யார். இதுவே அட்டாதச மகா புராணங்களுள் ஒன்றாகிய பாக வதம். இது பாவத்தை நீக்கும்.'

3. சம்மிதா பாகவதம் 'பத்தி யங்களாலும் அனுஷ்டுப்புச் சுலோகங்களாலும் நிறைந்த 50000 கிரந்தமுடையது. இது ஞான பூரிதமாயுள்ள 30 கீதை களையும், 80 திருவவதாரங்களின் சரித்திரங்களையும், விசேஷமாய் 22 திருவவதாரங்களின் கதை களையுமுடையதாய், வைராக்கிய ரசமே நிறைந்த 1100 அத்தியா யங்களாய் விரிந்த 18 காண்டங்க ளாகப் பகுக்கப்பட்டது. ஒவ் வொரு அத்தியாயத்தின் ஆரம் பத்திலும் திவ்யமான பகவத் ஸ்துதிகளுண்டு. இதற்கு வக்தா வைசம்பாயன முனிவர். சுரோதா ஜனமேஜயன். இது பக்தியைக் கொடுக்கும்."

4. உபசம்மிதா பாகவதம். 'பலவகை விருத்தங்களாகிய 70000 சுலோகங்கள் நிறைந்த 2000 அத்தியாயங்க ளடங்கிய நூறு பரிச்சேதங்களாகப் பிரிக் கப்பட்டுள்ளது. இதில் 82 கீதை களும், 100 பாகவதர்கள் சரித்தி ரமும், மகாத்மாவாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருவவதா ரங்களின் சரித்திரங்களும் சொல் லப்பட்டிருக்கின்றன. பஞ்சபாத கங்களையும் நாசஞ் செய்யத்தக்க எம் பெருமான் ஸ்தோத்திரங்க ளும் அனந்தமுண்டு. இதற்கு வக்தா அகஸ்திய மகரிஷி. சுரோதா சுதர்சனர். இதன்பயன் ரோகத்தைப் போக்குவது.'

5. விஷ்ணுரகசிய பாகவதம், 'தண்டகங்கள் இடையிடையே கலந்த இலட்சம் சுலோகமுடை யது. இது ஆயிரம் அங்கங்களாய், பகவத்ஸ்துதியே நிறைந்த 10000 அத்தியாயங்களாய் விரிந்தது. இதில் 50 கீதைகளும், 25 திருவ வதாரங்களின் சரித்திரங்களும் உண்டு. விஷ்ணு சித்தாந்த சோபிதமான நூறு பாகவதர் களின் சரித்திரங்களும் அடங்கி யிருக்கின்றன. இதற்குப் பரிசுத்த மாகிய விஷ்ணு பாகவதமென் றும் பெயர். இதற்கு வக்தா ஹாரீதமுனி, சுரோதா காசி பரிஷி. இதனைப் படிப்பதால் விரும்பிய பொருள் சித்திக்கும்.'

6. விஷ்ணு யாமள பாகவதப் '80000 சுலோகங்களையுடையது இதில் பிரமகீதை, அயகீதை' ஹரிகீதை, சங்கரகீதை என்னும் பெயருள்ள 4 கீதைகளும், விஸ்தாரமாய்த் தசாவதாரங்களின் கதைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. தருக்கசாத்திரமும் விசித்திரவித்தைகள் செய்யத் தக்க சாத்திரமும், மந்திர சாத்திரமும் வாக்கியரூபமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன இது 8 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்ட 800 அத்தியாயங்களையுடையது. இதற்கு வக்தா பராசர மகரிஷி. சுரோதா மைத்திரேயர். இந்நூல் பக்தியை விளைவிக்கும்'.

7. கௌதமசம்மிதாபாகவதம். '10000சுலோகங்களடங்கிய நூறு அத்தியாயங்களையுடையது இதில் மோட்சமளிக்கத்தக்க கிருஷ்ண சரித்திர மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்குக்கிருஷ்ண சித்தாந்தமென்று பெயர். இதற்கு வக்தா கௌதமரிஷி. சுரோதா கௌசிகரிஷி. இந்நூல் மோக்ஷத்தையளிக்கும்'.

'இவ்விதமாக 400000 சுலோகமுள்ள கௌதம சம்மிதையில், கிரந்த லட்சணகண்டத்தில், பாகவதலட்சணம் என்னும் பெயருள்ள முதலத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது' என்று பாகவத முகவுரை கூறும்.

முதலிரண்டு பாகவதமேயன்றி மற்றவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவற்றுள் வரதனுகிய அருளாளதாசர் பாடியது புராண பாகவதமாகும்.

எதுகுலத்து வருமிறையோன்
சரிதையைநற் சுகனிசையால்
உதவுசொலைத்தமிழினுலுரைத்
தான்வண் டிருவரங்கம்
பதியமர்வேத் திரக்கரத்தோன்
பழமறையோன் வரதனெல்லிக்
கதிபதியா யுயர்ந்திருபே
ரருளாள நாதனரோ
என்று பாயிரம்கூறும்.
இந்நூலினை இயற்றிய காலத்
தைக் குறித்து,
ஆயுமறை யோரெண்ண
வருஞ்ச காத்த
மாயிரத்து நானூற்றே
டறுபத் தஞ்சாந்
தாயசுப கிருதுதனின்
முதன்மா தத்தில்

துலங்குகுரு வாரத்துத்
திராட நாளில்
நேயமுட னெல்லி நகர்
வரத ராச
நிகரிலரங் கத்திலர
வணையினோங்கு
நாயகன்முன் னறிஞர்மகிழ்ந்
திடவே வாசு
தேவகதை யரங்கேற்றி
நலனுற் றனே

என்று இந்நூலிலே காணப்படு கிறது. ஆகவே இந்நூல் சகம் 1465-க்குச் சரியான சுபகிருது ஆண்டு சித்திரை மாதம் குரு வாரம் உத்திராட நாளில் அரங் கேற்றப்பட்டது.

இந்தத் தமிழ்ப் புராண பாக வதம், நூற்று முப்பத்திரண்டு படலங்களையும், ஒன்பதினாயிரத்து நூற்றைம்பத்தொரு திருவிருத் தங்களையுமுடையது. இந்தப் பாகவதம் திருமாலின் தசாவ தாரங்களையும் கூறினும், கண்ண பிரானுடைய சரிதங்களை மிக விரிவாக உரைக்கும். அருளாள தாசர் இந்தப் பாகவதத்தைச் சகம் 1465-க்குச் சரியான கி. பி. 1543-ல் அரங்கேற்றினாராத லாலே, இவர் பதினாறும் நூற் றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவராவார்.

வறுமையைப் போக்கும் வழி!

மனிதன் தன்னை வறுமையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக, பல உபாசனை மார்க்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனால் அவையெல்லாம் ஒரு தகுதி வாய்ந்த குருவின் மூலமாகத் தெரிந்து கொண்டு, அதன் பின் அனுஷ்டிக்கப்பட வேண்டிய விஷயங்கள். அவற்றை இப்பத்திரிகையில் எழுதுதற்கு இயலாது.

விஷயங்களை குருமுகமாகத் தெரிந்து கொண்டாலும் கூட, அவை நமக்கு உண்மையிலேயே பலன் அளிக்க வேண்டுமானால், நம் உள்ளத்தில் சிரத்தை யிருக்க வேண்டும். நம்பிக்கை, ஆர்வம் இவ்விரண்டும் பரிபூர்ணமாக நிறைந்துள்ள ஓர் உயரிய மனோநிலையே சிரத்தை எனப்படுவது. பூர்வ புண்ணியமும் இறைவனுடைய திருவருளும் இருந்தாலன்றி, அத்தகைய சிரத்தை நமக்கு உண்டாகமாட்டாது.

சிரத்தை உண்டாகி விட்டதாகவே வைத்துக் கொள்வோம்.

பிரச்னை

"நான் பல ஆண்டுகளாக வறுமையில் உழன்று கொண்டிருக்கிறேன். என்னுடைய தரித்திரத்தைப் போக்கிக் கொள்வதற்கு, ஆத்மிக ரீதியாகத் தாங்கள் ஏதேனும் வழி சொல்ல முடியுமா?" என்று கேட்டிருக்கிறார் ஓர் அன்பர்.

வறுமை என்னும் குறைபாடு, இந்த ஓர் அன்பருக்கு மட்டுமே உரியதாக இல்லை. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும், இந்தக் குறைபாடு ஏதேனும் ஓர் அளவில் அல்லது வடிவத்தில் இருக்கத்தான் செய்கிறது. பெரிய கோடீஸ்வரர்களும் கூட இதற்கு விதி விலக்கு அல்ல என்பது குறிப்பிடத் தக்கது. பல்லாயிரம் கோடி வருமானம் உள்ள பெரிய அரசாங்கங்களே பற்றுக்குறை பட்ஜெட் போடும்போது, நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

அப்போதும் கூட, ஓர் உலகியற் பயனைக் கருதி நாம் கடைப்பிடிக் கிற உபாஸனை முதலியவைகள், வெறும் காம்ய கர்மாக்களாகவே ஆகி விடுகின்றன. காம்ய கர்மாக் களால் அடையப்படுகிற பலன் எவ்வளவுதான் அற்புதமான தாய் இருந்தாலும், அதை ஒரு வன் அனுபவிக்க அனுபவிக்க, அது தேய்ந்து கொண்டே வரும். கடைசியில் ஒரு நாள், அது அழிந்தும் போய்விடும். அது அப்படி அழிந்து போகும்போது அந்த மனிதன் தன்னுடைய பழைய வறுமைக் கோலத்தி லேயே மறுபடியும் வந்து நின்று கொண்டிருப்பான். சுவர்க்க போகங்களில் நெடுங்காலம் திளைத்துக் கொண்டிருந்த ஜீவர் கள் கூட, தமது புண்ணியங்கள் பலன் கொடுத்து முடிந்தவுடன், மீண்டும் பூலோகத்தில் வந்து மனிதர்களாய்ப் பிறந்து விடு வார்கள் என்னும் சாஸ்திர வச னங்கள், இங்கு நினைவு கூரத் தக்கவை.

ஆகையால், வறுமையி லிருந்து ஒரு மனிதன் நிலையான விடுதலை பெறுவதற்கு, காம்யகர் மாக்கள் சரியான உபாயங்கள் அல்ல. எப்படியேனும் சித்தபரி பாகத்தைப் பெறுவதே, அதற் குரிய சரியான உபாயம் ஆகும். எனவே, சித்த பரிபாகம் பெறுவ தற்கு, எல்லோரும் எளிதில் கையாளக் கூடிய வழி யாது என் பதை, இப்போது நாம் ஆலோ சிக்க வேண்டும்.

ஆலோசனை

வறுமையிலிருந்து நாம் அறவே விடுபட வேண்டுமானால், முதலில் வறுமையின் ஸ்வரூபத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

"எனக்கு அது போதாது, இது போதாது!...எனக்கு அது இல் லையே, இது இல்லையே!...எனக்கு அது வேண்டும், இது வேண் டும்!" என்றெல்லாம், நம் உள் ளத்திலே எண்ணங்கள் இடை யறாது எழுந்துகொண்டிருக்கின் றன அல்லவா? இந்த எண்ணங் கள் தாம் வறுமையின் உண்மை யான ஸ்வரூபம்!

நமக்கு எது போதாது என்று நினைத்தோமோ, அது போது மான அளவில் நமக்கு வந்து விட் டது என்று வைத்துக் கொள் வோம். நமக்கு எது இல்லை யென்று நினைத்தோமோ, அது இப்போது கிடைத்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். நமக்கு எது வேண்டும் என்று நினைத்தோமோ, அதை இப் போது பெற்றுவிட்டோமென்று வைத்துக்கொள்வோம். அவ் வாறு ஒன்றை நாம் பெற்றுவிட்ட புதிதில் நம் உள்ளத்தில் ஒரு நிறைவு — ஒரு திருப்தி — ஓர் அமைதி உண்டாகிறது அல் லவா? அதுதான் உண்மையான ஐஸ்வர்யத்தின் ஸ்வரூபம்.

இந்த ஐஸ்வர்யத்தையே, நாம் முதலில் தேடிக் கொள்ளவேண் டும். இதைத் தேடிக்கொண்டு விட்டால், தனம் தான்யம் ஆடை ஆபரணம் போன்ற மற்ற ஐஸ்வர்யங்கள் எல்லாம், தாமா கவே நம்மைத் தேடி வந்தடை யும்.

அதாவது, நாம் அடைய ஆசைப்படுகிற ஒரு பொருளை அல்லது நிலையை அடையாமலே, அதை அடைந்து விட்டாற் போன்ற ஒரு மனநிறைவை, ஒரு திருப்தியை, நம் உள்ளத்தில் உருவாக்கிக் கொள்வதற்கு நாம் பழக வேண்டும். அந்த பழக்கம்

எந்த அளவுக்கு நமக்கு சித்தியா கிறதோ, அந்த அளவுக்கு நம் வறுமையும் நம்மை விட்டு வில கிச் செல்லும்!

நாம் ஒரு நிலைக்கண்ணாடியின் எதிரே நின்றால், அந்த கண்ணா டிக்குள்ளே நம்முடைய பிரதிபிம்பம் தெரிகிறது. நமது சொந்த உட லாகிய பிமபமே, கண்ணாடிக்குள் பிரதிபிம்பமாகக் காட்சியளிக் கிறது. அதே போல், நம்முடைய ஆத்மா என்ற பிம்பமே, உலகம் என்ற கண்ணாடியில் ஐஸ்வர்யம் என்ற பிரதிபிம்பமாகக் காட்சி யளிக்கிறது.

அதாவது, உலகில் நாம் காணு கிற தனம், தான்யம், ஆடை, ஆபரணம், பட்டம், பதவி போன் றவைகள் எல்லாம், நம்முடைய ஆத்மாவின் பிரதிபிம்பங்களே அன்றி, வேறல்ல. நம்முடைய ஆத்மாதான் உண்மையான ஐஸ் வர்யம்.

ஆத்மா எல்லாரிடத்திலும் இருக்கிறது. அதைக் கள்வர் களால் கவர்ந்து கொள்ள முடி யாது. அரசாங்கத்தால் அதைப் பறிமுதல் செய்ய முடியாது. நெருப்பால் எரிக்கமுடியாது. நீரால் கரைக்க முடியாது. எல் லாம் வல்ல இறைவனால்கூட, நம் முடைய ஆத்மாவை அழித்துவிட முடியாது.

அந்த இறைவனைப் போலவே ஆத்மாவும் நித்தியவஸ்து. அதுவே உண்மையான ஐஸ்வர்ய ஸ்வரூபம். அப்படியிருக்கும் போது, மனிதன் ஏன் வறுமைக்கு ஆளாக வேண்டும்?

காரணம் வேறொன்றும் இல்லை. சூரியனை மேகங்கள் மறைப்பது போல், நம்முடைய மனத்தின் சஞ்சலங்கள் ஆத்மாவை மறைக் கின்றன. அதனால், வாழ்க்கையில் நாம் அடைதற்குரிய ஐஸ்வர்யங் களும் மறைபட்டுப் போகின்றன.

மனத்தில் சஞ்சலங்கள் தோன் றாமல் அமைதி நிலவுமானால், நம் முள்ளே உள்ள ஆத்ம ஒளியா னது மறைவுபடாமல் விளங்கிக் கொண்டிருக்கும். அப்போது, நம் வாழ்க்கையும் ஐஸ்வர்யங்கள் நிரம்பியதாக அமைந்திருக்கும்.

எனவே, மனத்தின் சஞ்சலங் கள்தான் நம் வறுமைக்குக் காரணமாகின்றன. வறுமை ஒழிய வேண்டுமானால், முதலில் நம் மனத்தின் சஞ்சலங்கள் ஒழிய வேண்டும்.

மனம் எதனால் சஞ்சலம் அடை கிறது? நமக்கு உண்மையிலேயே தேவையில்லாத பலபொருள் களின் மீது நாம் ஆசைப்படுவ தால், மனம் சஞ்சலத்துக்கு உள் ளாகிறது. அந்த ஆசை ஒழிந் தால், சஞ்சலமும் தானாகவே ஒழிந்து போய்விடும்.

''பால் நினைந்தூட்டும் தாயி னும் சாலப் பரிந்து'' என்கிறார் மாணிக்கவாசகர். அதாவது, குழந்தை அழாமல் இருக்கை யிலேயே, அதற்குப் பசி வருகிற நேரம் ஆயிற்றே யென்று தானா கவே நினைத்துக் கொண்டு, பரிந்து ஓடிவந்து பால் ஊட்டுகிற தாயைக் காட்டிலும், உயிர்களி டத்திலே தயை நிறைந்தவன் இறைவன் என்பது, அந்தத் திரு வாசகத்தின் கருத்து.

நம்முடைய உண்மையான தேவைகளை, நாம் கேட்காமலே, அவை எப்போது நிறைவேற வேண்டுமோ அப்போது, எந்த முறையில் நிறைவேற வேண் டுமோ அந்த முறையில், இறை

வன் தானாகவே நிறைவேற்றி வைப்பான் என்பது, எல்லாச் சமயங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஓர் அடிப்படைக் கொள்கை. இந்தக் கொள்கையில் நமக்கு எந்த அளவுக்கு நம்பிக்கையிருக்கிறதோ, அந்த அளவுக்கு நம் உள்ளத்தில் சாந்தியிருக்கும். உள்ளத்தில் சாந்தியிருக்கும் அளவுக்கு, நம் வாழ்க்கையிலும் வளம் நிறைந்திருக்கும்.

ஆனால், நமக்குத் தேவையில்லாத ஆசைகளுக்கு நாம் ஆளாகும் போது, ''இந்த ஆசைகள் நமக்குத் தேவையில்லாதவைகள் ஆயிற்றே? இவை எப்படி நிறைவேறும்?'' என்ற சம்சயம், நம்மையும் அறியாமல் நம் உள்ளுணர்வில் உண்டாகிவிடுகிறது. அந்த சம்சயமே சஞ்சலமாக வடிவெடுக்கிறது. அந்த சஞ்சலமே, வாழ்வில் நமக்கு வறுமையைத் தோற்றுவிக்கிறது!

ஆகையால், நாம் வறுமையிலிருந்து விடுபட வேண்டுமாயின், நம் உள்ளத்தைப் பீடித்துக் கொண்டிருக்கிற தேவையில்லாத ஆசைகளிலிருந்து நாம் முதலில் விடுபடவேண்டும். ஆனால், நம் உள்ளத்திலே ஓர் ஆசை எழும்போது, அது உண்மையிலேயே நமக்குத் தேவையான ஆசைதானா, அல்லது தேவையில்லாத ஆசையா என்பதை, நாம் எப்படித் தெரிந்து கொள்வது?

நம்முடைய உள்ளுணர்வையே நாம் கருத்தூன்றிக் கவனித்துப் பார்த்தால், நம் கேள்விக்கு ஒரு சரியான விடை கிடைக்கக்கூடும். எனினும், அப்படிக் கவனித்துப் பார்க்கும் ஆற்றல், நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது?

தவறான ஆசைகளின் காரணமாக அடிக்கடி சஞ்சலப் பட்டுப் பழக்கமாகி விட்ட மனத்துக்கு, ஒரு நியாயமான ஆசையின் விஷயத்திலே கூட, சம்சயங்களும் சஞ்சலங்களும் ஏற்படுவது இயல்பு. ஆகையால், அவற்றைக் கொண்டும் நம்முடைய ஆசையின் தன்மையை நாம் உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ள முடியாமல் போய்விடலாம்.

ஒரு விதத்தில் பார்த்தால், அதை நாம் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமும் கிடையாது. ஏனென்றால், நமக்கு எது தேவை- எதுதேவையில்லை யென்பது, இறைவனுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், ''நம்முடைய ஆசை நியாயமானதாய் இருந்தால், இறைவன் அதைக் கட்டாயம் நிறைவேற்றி வைப்பான். அது நிறைவேறாமல் போய்விடுமாயின், அந்த ஆசை நமக்குத் தேவையில்லாதது என்பதைத் தெரிந்து கொள்வோமாக!'' என்ற மனப்பான்மையுடன், நம்முடைய காரியங்களிலும் முயற்சிகளிலும் நாம் எப்போதும் தீவிரமாக ஈடுபட்டிருக்க வேண்டும். அப்படி ஈடுபட்டிருந்தால், வெற்றி தோல்விகளைப் பற்றிய கவலைகளே நம் உள்ளத்தில் எழமாட்டா. உள்ளத்தில் கவலையில்லாத போது வாழ்க்கையிலும் வறுமையிருக்கமாட்டாது.

''வறுமை தீர்ந்தால் கவலை தீரும்; வறுமை தீர்ந்தால் சஞ்சலம் தீரும்'' என்றுதான் பொதுவாக நாம் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அது தவறு. கவலை தீர்ந்தால்தான் வறுமை தீரும். சஞ்சலம் தீர்ந்தால்தான் வறுமைதீரும். இந்த உண்மையை, நவீன மன இயல்

நிபுணர்கள்கூட இப்போது உணரத்தொடங்கி விட்டார்கள்'

சஞ்சலங்கள், சந்தேகங்கள், கவலைகள் இவையெல்லாம் வறுமையின் வளர்ப்புத்தாய்கள். அதிருப்தியே (அதாவது, போதாது என்னும் உணர்வே) வறுமையின் சொந்தத்தாய்!

அதே போல்,ஊக்கம், முயற்சி, நம்பிக்கை இவையெல்லாம் ஐஸ்வர்யத்தின் வளர்ப்புத்தாய்கள். திருப்தியே (அதாவது, போதும் என்னும் உணர்வே) ஐஸ்வர்யத்தின் சொந்தத்தாய்!

இந்தக்கருத்தில்தான்''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்னும் பழமொழி எழலாயிற்று.

ஆகையால், நாம் உண்மையிலேயே ஐஸ்வர்யவான்களாக விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், எப்போதுமே திருப்தியோடு இருக்கும் பழக்கத்தை, நம்முடைய மனத்திலே உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதாவது நம்மிடத்தில் இல்லாதவற்றைப் பற்றியே எண்ணியெண்ணி, அதிருப்தி அடையக்கூடாது. அதற்கு மாறாக,இறைவனருளால் நமக்கு இப்போது கிடைத்திருக்கிற சௌகர்யங்களை மட்டுமே எண்ணியெண்ணி, நாம் எப்போதும் திருப்தியோடு இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

சௌகர்யம், அசௌகர்யம் இரண்டும் கலந்ததே உலகியல் வாழ்க்கை. பெரிய இலட்சாதிபதிக்கும்கூட, இறைவன் சில அசௌகர்யங்களைக்கொடுத்திருப்பான். அதேபோல் மிகவும் இழிவான ஒரு பிச்சைக்காரனுக்கும்கூட, இறைவன் சில சௌகர்யங்களைக் கொடுத்திருப்பான்.

மனித உள்ளத்திற்கு ஓர் அற்புதமான சக்தி உண்டு. அதாவது, நாம் எதைப்பற்றி அடிக்கடி எண்ணிக்கொண்டிருக்கிறோமோ, அது மேலும் 'மேலும் வளர்ச்சியடைந்து கொண்டே வரும்.

அந்த முறையில், ஒரு இலட்சாதிபதி தன்னுடைய அசௌகர்யங்களைப்பற்றியே சதாஎண்ணிக் கொண்டிருப்பானாயின், அந்த அசௌகர்யங்கள் மேலும்மேலும் வளர்ச்சியடைந்து, நாளடைவில் அவன் கொடிய வறுமைக்கே ஆளாகி விடுவான்.

அவ்வாறே, ஒருபிச்சைக்காரன் தனக்கு இறைவனால் அளிக்கப்பட்டுள்ள ஒரு சில சொற்ப சௌகர்யங்களைப் பற்றியே சதா எண்ணிக் கொண்டிருப்பானாயின், அந்த சௌகர்யங்கள் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து, நாளடைவில் அவன் ஒரு பெரிய ஐஸ்வர்யவானாகவே ஆகிவிடுவான்.

ஆகையால், நம்மைக்காட்டிலும் செல்வந்தர்களோடு, நம்மை நாம் எப்போதுமே ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளக் கூடாது. அப்படிப் பார்த்துக் கொண்டால், நம்முடைய

ஏழ்மைதான் நம் கண்ணுக்குத் தெரியும்.

அதற்குமாருக, நம்மைக்காட்டிலும் ஏழைகளோடேயே நம்மை நாம் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்துக் கொண்டால், நம்முடைய வளமை நம் கண்ணுக்குத் தெரியும். அந்த வளமையை எண்ணி நாம் திருப்தி அடைய அடைய, நம் வாழ்வானது மேலும் மேலும் வளமுடையதாக வளர்ச்சி அடைந்து கொண்டு வரும்.

வறுமையைப் போக்கிக் கொள்வதற்கு, இதுவே தலை சிறந்த வழியாகும். இந்த வழியைக் கடைப் பிடிப்பதால் ஏற்படுகிற மனப்பரிபாகம் ஒன்றே, நமக்கு என்றென்றைக்கும் அழியாத ஐஸ்வர்யமாக அமையும். அதுவே எந்நாளும் நமக்கு வளமான வாழ்வைத் தந்துகொண்டிருக்கும்.

★



உ

திருச்சிற்றம்பலம்

நீட்டுக் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகீதப்
பாட்டுக் கொடியே இறைவரிடம்
பாகக் கொடியே பரநாத
நாட்டுக் கொடியே எனையீன்ற
ஞானக் கொடியே என்னுறவாங்
கூட்டுக் கொடியே சிவகாமக்
கொடியே அடியேற்(கு) அருளுகவே!

மாலக் கொடியேன் குற்றமெலாம்
மன்னித் தருளி மரணமெனும்
சாலக் கொடியை ஒடித்தெனக்குள்
சார்ந்து விளங்கும் தவக்கொடியே
காலக் கருவைக் கடந்தொளிர்வான்
கருதும் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக்
கொடியே அடியேற்(கு) அருளுகவே!

—திருவருட்பா

காமேஸ்வரன் காட்சியளித்தான்

ஸ்ரீவித்யாமார்த்தாண்ட பிரம்மஸ்ரீ

C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

இந்திராதி தேவர்களின் ஸ்தோத்திரத்தைக் கேட்டு, ஸ்ரீ லலிதாம்பிகை அவர்கள்பால் மனங்கனிந்து மகிழ்ச்சியுற்றிருந்த சமயத்தில்;

பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூன்று தேவர்களும், நாரதர் முதலான தேவரிஷிகளும் அப்ஸரஸ் கூட்டங்களும், விஸ்வாவசு முதலான கந்தர்வர்களும், யக்ஷர்களும், ஸர்வமந்திரங்களுக்கும் அதிதேவையான ஸ்ரீ துர்காதேவியும், எல்லாவித்தைகளுக்கும் அதிதேவதையான ஸ்ரீ சியாமளாதேவியும், பிராஹ்மீ முதலான அஷ்டமாத்ருக்களும், அணிமாதிஸித்திகளும், கோடிக் கணக்கான யோகினீகணங்களும், பைரவர்களும், க்ஷேத்ரபாலர்களும், எல்லாகணங்களுக்கும் அதிபதியான சாஸ்தாவும், மஹாகணபதி, ஸ்கந்தன், வடுகன், வீரபத்திரன் ஆகியோரும்;

அங்கு வந்து ஸ்ரீலலிதாம்பிகையை வணங்கினார்கள்.

உடனே விஸ்வகர்மாவும், பிரம்ம தேவரின் உத்தரவுப்படி ஸ்ரீ லலிதாம்பிகைக்காக ஓர் உத்தமமான நகரத்தை நிர்மாணம் செய்தான்.

பிராகாரங்கள், தோரணங்கள் கஜசாலைகள், அஸ்வசாலைகள், ரதசாலைகள், இராஜவீதிகள் இவற்றால் பொலிவுற்று விளங்கிய அந்த நகரத்திலே;

ஸாமந்தர்கள், மந்திரிகள் ஸைன்யங்கள், த்விஜர்கள், வைதாளிகர்கள், தாஸர்கள், கிங்கரிகள் இவர்களுக்கெல்லாம், அழகிய மாளிகைகள் தனித்தனியாக நிர்மாணம் செய்யப்பட்டிருந்தன.

இந்த மாளிகைகளுக்கு மத்தியில், த்வாரம், கோபுரம் இவைகளுடன் சோபிதமுற்று விளங்கிய ஓர் அரண்மனை நிர்மாணிக்கப் பட்டிருந்தது.

அந்த அரண்மனையின் மத்தியிலே நவரத்ன மயமான ஒரு ஸபையும்;

அந்த ஸபையின் நடுவிலே சிந்தாமணி ரத்னத்தால் ஆக்கப் பட்டு, உதய சூரியனைப்போன்ற ஒளியுடன் ஸ்வயம்பிரகாசமாய் விளங்கிக் கொண்டிருந்த ஓர் ஒப்பற்ற சிம்மாசனமும்;

காட்சியளித்தன.

அந்த சிம்மாசனத்தைப்பார்த்ததும், பிரம்மதேவருக்கு ஓர் ஆலோசனை ஏற்பட்டது.

''அகில உலகங்களுக்கும் ஆதிபத்தியத்தை அளிக்கக் கூடிய ஓர் உத்தமமான சிம்மாசனம் இது. புருஷன் இல்லாத ஸ்த்ரியும், ஸ்த்ரீ இல்லாதபுருஷனும், இராஜ்யத்தை ஆளத் தகுதியுடையவர்கள அல்ல. மங்களமான ஆசாரங்களை உடையவனும், மனத்துக்கு உகந்த பத்னியோடு கூடியவனுமான ஒரு மஹாபுருஷனுக்கே பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்று ஸ்மிருதி கூறுகிறது. ஸ்ரீலலிதாம்பிகையோ, உத்தமமானலக்ஷணங்கள் அனைத்தும் பொருந்தியவளாய், சிருங்காரரஸமே ஒரு வடிவெடுத்து வந்தாற் போல் காட்சியளிக்கிறாள். இவளுக்குத் தகுந்தகணவன் சங்கரனே அன்றி வேறு யாரும் இல்லை.

''ஆனால் அந்த சங்கரனோ. ஜடாதாரியாகவும், முண்டமாலை அணிந்தவனாகவும், சாம்பலைப் பூசியவனாகவும், கபாலத்தை ஏந்தியவனாகவும், சுடுகாட்டில் வசிப்பவனாகவும், பயங்கரமான தோற்றமுடையவனாகவும் விளங்குகிறான். இப்படிப்பட்ட சங்கரனை, ஸர்வமங்களையான பரதேவதை எப்படித் தன் பர்த்தாவாக ஏற்றுக் கொள்வாள்?''

என்ற சிந்தனையில் ஆழ்ந்தார் பிரம்மதேவர்.

அப்போது, சங்கரன் எனும் பெயர் படைத்த அந்தப் பரசிவப் பொருளே, ஒரு மனோஹரமான குமாரன் வடிவத்தில், பிரம்மதேவரின் எதிரே வந்து நின்றது.

கோடி மன்மதர்களின் பேரழகை ஒருங்கே உமிழ்ந்து நின்ற திவ்ய சரீரம் உடையவனாய், உத்தமமான வஸ்திரங்கள், மலர் மாலைகள், சுகந்தங்கள் இவற்றை அணிந்தவனாய், கிரீடம் முத்து மாலை, தோள்வளைகள், குண்டலங்கள் இவற்றைத்தரித்தவனாய், ஜகன்மோஹன சுந்தரனாய்க் காட்சியளித்த அந்தக் குமாரனை, பிரம்மதேவர் மிகவும் ஆர்வத்தோடு கட்டித் தழுவிக்கொண்டார். அவனுக்குக் காமேஸ்வரன் என்ற திருநாமமும் சூட்டினார்.

பிறகு, அவர் அந்தக் குமாரனுடன் ஸ்ரீ லலிதாம்பிகையைப் போய்த் தரிசித்தார். தரிசித்து, விஷ்ணு ருத்ரன் ஆகிய இருவருடனும் சேர்ந்து, பரதேவதையை ஸ்தோத்திரம் செய்தார்.

காமேஸ்வரனும் லலிதாதேவியும் ஒருவரையொருவர் பார்த்தனர். உடனே இருவரது உள்ளத்திலும் பிரேமைவெள்ளம் பொங்கியெழுந்தது. அப்போது பிரம்மதேவர் அம்பிகையைப் பார்த்து, ''தாயே! இங்கு கூடியிருக்கும் தேவர்கள், ரிஷிகள் சித்தகணங்கள், கந்தர்வர்கள், அப்சர மங்கையர்கள் ஆகிய நாங்கள் எல்லோருமே, உன்னை இந்த சிம்மாசனத்தில் அமர்த்திப் பார்க்க ஆசைப்படுகிறோம். இந்தக் காமேஸ்வரனையே நீ உன் கணவராக ஏற்றுக் கொண்டு, சகல உலகங்களுக்கும் சக்ரவர்த்தினியாக முடி சூட்டிக் கொள்ள வேண்டும். அந்தத் திருக்கோலத்தை நாங்கள் கண்டு மகிழவேண்டும்!'' என்று பிரார்த்தித்துக்கொண்டார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் T. ராமனாதன் 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

ருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை



அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

நமது குறிக்கோள்

"அருள் பத்திரிகையின் குறிக்கோள் யாது?" என்று பல அன்பர்கள் நம்மைக் கேட்கின்றனர்.

மக்களின் உள்ளத்தில் ஆத்மிக வேட்கையை எழுப்புவதே, "அருள்" பத்திரிகையின் தலையாய குறிக்கோள்.

சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் போன்ற சமயங்கள் அனைத்தையும்; துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் போன்ற சித்தாந்தங்கள் அனைத்தையும்; என்றும் நாம் சமத்துவ நோக்குடனேயே அணுகி வருவோம்.

மக்களிடையே தெய்வபக்தி, அறவொழுக்கம், சாதனையில் ஆர்வம் இவை வளரவேண்டும் என்பதே, எமது ஆசை. அத்துறையில் சிறப்பான பணிபுரிவதற்கான வாய்ப்பையும் ஆற்றலையும், இறைவன் எமக்கு அன்பர்களின் வாயிலாக அருள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	மே
கருணை 8	சந்தா	15-5-70
வைகாசி, சாதாரண	ரூ. 3-60	விலை 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, "அருள்"
4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

சிவபிரான் வணக்கம்

பட்டினத்து அடிகள்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்
கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி
ஏகம்பனே!

சொல்லால் வருங்குற்றம் சிந்தனை யால்வரும்
தோடம் செய்த
பொல்லாத தீவினை பார்வையில் பாவங்கள்
புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடும் தீங்குகள்
ஆயவுமற்(று)
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி
ஏகம்பனே!

திருச்சிற்றம்பலம்

ஹரிகதா ரத்ஞகர பிரம்மஸ்ரீ

டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்

வேலவன்

சோழவள நாட்டிலுள்ள சிவஸ்தலங்களுக்கெல்லாம் நடு நாயகமாக விளங்குவது திருவிடை மருதூர். அந்த திவ்ய க்ஷேத்திரத்திலே, ஐந்நூறு ஆண்டுகளாகப் பல மஹான்களும் மஹாபண்டிதர்களும் தோன்றிய ஒரு புகழ்மிக்க வம்சத்திலே, சாம்பமூர்த்திகனபாடிகள் என்னும் ஒரு பிரவசன சிகாமணி வாழ்ந்து வந்தார். அவரது மூத்த புதல்வர்தான் ஹரிகதா ரத்ஞகர பிரம்மஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

அந்தக் காலத்தில், திருவிடைமருதூர் ஸ்ரீ மஹாலிங்கேஸ்வரரது திருக்கோயில் மண்டபத்திலே, நாள்தவறுமல் கதைகளும் கச்சேரிகளும் நடந்து கொண்டிருக்குமாம். கீர்த்திமிக்க பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகளின் இராமாயண உபன்யாசம், அங்கு அடிக்கடி நடக்குமாம். அவருடைய உபன்யாசங்களுக்கு, திருக்கோடிக்கா கிருஷ்ணஐயர் போன்ற மஹாவித்வான்கள், தாமே வலிய வந்து பிடில் வாசிப்பார்களாம்! அவற்றைக் கேட்டுக் கேட்டு உள்ளம் உருகி, அந்த மாமேதையைப் போலவே தாமும் இராமாயணப் பிரவசனம் செய்ய வேண்டும் என்று, தம் இளம் வயதிலேயே ஆசைப்பட்டாராம் சாம்பமூர்த்தி கனபாடிகள்.

ஈஸ்வரக்ருபையால், அந்த ஆசை நிறைவேறியது.

1915'ம் ஆண்டிலிருந்து 1935'ம் ஆண்டுவரையில், சென்னைமா நகரத்திலே ஒரு தன்னிகரற்ற தனிப்பெரும் உபன்யாசகராகத் திகழ்ந்தார் பிரம்மஸ்ரீ சாம்பமூர்த்தி கனபாடிகள். தம்மைப் போலவே தம்முடைய புதல்வரும் ஒரு மஹா உபன்யாசகராக மலர்ச்சியடைய வேண்டும் என்று, அவர் அவாவுற்ருர். தந்தையின் அந்த அவாவைப் பரிபூர்ணமாக நிறைவேற்றிவைத்தார் ஸ்ரீமான் பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

பதினைந்து அல்லது பதினறு வயதுக்குள், சாஸ்திரிகள் தம் தந்தையிடமிருந்தே காவிய பாடங்கள், சாஸ்திர பாடங்கள் போன்ற பல வித்யைகளேயும் கற்

றறிந்தார். கிருஷ்ணயஜுர்வேத அத்யயனமும் செய்து முடித்தார். அத்துடன், தியாகப்ரம்மத்தின் சிஷ்யரான தோடி சீதாராமை யரின் புதல்வர் மஹாவித்வான் வசிஷ்டபாரதியிடமும், வித்வான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை யவர்களிடமும் தமிழ்க் கல்வி பயின்றார். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளை யும், அவற்றிற்குரிய ஆசிரியர் களிடம் கற்றுத் தேர்ந்தார். ஸங்கீத லக்ஷண வித்வான் ஸ்ரீ விஸ்வநாத தர்வாடி என்னும் ஒரு பெரியாரின் தொடர்பால், இவருக்கு மராத்திய மொழி யிலும் ஓரளவு பயிற்சி கிடைத் தது. இவற்றோடு கூட, சங்கீத வித்வான் முடி கொண்டான் சபாபதி ஐயரிடம், மூன்று ஆண்டு காலம் முறைப்படி சங் கீதம் பயின்று, அந்த வித்யை யிலும் அவர் நல்ல தேர்ச்சியைத் தேடிக் கொண்டார்.

இத்தனை சிறப்புக்களிருந்தும், சாஸ்திரிகள் எடுத்த எடுப் பிலேயே ஓர் உபன்யாசகரா கவோ, அல்லது ஹரிகதா கால க்ஷேப பாகவதராகவோ, தம் வாழ்க்கையைத் தொடங்கிவிட வில்லை. இப்போது 'ஸ்டேட் பாங்க்' என்று அழைக்கப்படுகிற அக்காலத்திய இம்பீரியல் பாங் கில், ஒரு குமாஸ்தாவாக அவர் தம் வாழ்க்கையைத் தொடங் கினார்.

இன்றைக்கும் அந்த பாங்கில் தான் அவர் பணியாற்றி வரு கிறார்; ஆனால் குமாஸ்தாவாக அல்ல, ஓர் ஆபீசராக! சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலே, பழைய காலத்து இன்டர்மீடியட் வகுப்பு வரை அவர் சென்று வந் தவர். ஆங்கிலக் கல்விபயிலும் போதே, கிறிஸ்தவவேதமாகிய பைபிளையும் அவர் கருத்தூன்றிப் படித்து வந்தார். பைபிளின் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகிய இரண்டு ஏற்பாடுகளிலும், அவருக்குத் தெளிவான புலமை உண்டு.

சித்தத்தில் அத்வைத வாசனை உடையவர்களுக்கே உரிய ஒரு தனியான சிறப்பு என்னவென் றால், அவர்கள் எத்தனை வகை யான மதக்கிரந்தங்களைப் படித் தாலும், அத்தனை மதங்களிலும் பேசப்படுகிற உயர்பரம் பொருள் ஒன்றே என்னும் உணர் விலிருந்து, அவர்கள் இம்மியும் நழுவி விடமாட்டார்கள்.

ஆகையால், அவர்கள் படிக்கும் பரமதக் கிரந்தங்கள் அனைத்தும், அவர்களுடைய வழிபடு கடவு ளின் பால் பக்தியை மேலும் மேலும் வளர்த்து விடுவதற்கே உதவி புரிவனவாய் அமையும்.

மலரின் வாசனை அந்த மலருக் குள்ளேயே அடங்கி நிற்காமல் வெளிப்பட்டு விளங்குகிறது அல்லவா? பக்தியும் அப்படித் தான். உள்ளத்தில் பக்தியிருக்கு மானால், எத்தகைய முரண்பட்ட சூழ்நிலையிலும் அதுமணம் வீசிக் கொண்டுதான் இருக்கும்.

பாங்கில் பணி ஏற்றுக் கொண்ட துவக்க நாளிலிருந்தே, தம் இல்லத்தில் சனிக் கிழமை தோறும் ஒரு பஜனை நிகழ்ச்சியை நடத்தி வந்தார் பாலகிருஷ்ண சாஸ்திரிகள். இப்படி ஓராண்டு நடத்தியபின், அதன் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற் காக, பாங்கில் தம்மோடு பணி யாற்றுகிற முப்பது நாற்பது தோழர்களையும் உடனழைத்துக் கொண்டு, அவர் திருநீர்மலை

என்னும் க்ஷேத்திரத்துக்குச் சென்றார். சென்ற இடத்தில், அந்தத் தோழர்கள் அளித்த உற்சாகத்தின் காரணமாக, விளையாட்டுப் போல் அவர் ஒரு கதாகால க்ஷேபம் செய்தார். அன்று அவர் சொன்ன கதை கருட கர்வ பங்கம்.

சிறிதும் முன் தயாரிப்பு இன்றி நிகழ்த்தப்பட்ட அந்தக் கால க்ஷேபம், கேட்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. அதைக் கண்டு, அந்த நண்பர்களெல்லாம் வியப்பு அடைந்தனர். சாஸ்திரிகளுக்கும், உள்ளத்தில் அது ஒரு புதிய ஊக்கத்தை உண்டு பண்ணியது.

அந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டார் அவருடைய தர்மபத்னியின் தந்தையாகிய ஒரு பெரியார். அவர் வேறு யாரும் அல்லர்; அவர் தான் சென்ற "அருள்" இதழின் அட்டைப் படத்திலே கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீவத்ஸஸோம்தேவசர்மா!

பாலகிருஷ்ண சாஸ்திரிகள் தம் தந்தையைப் போலவே உபன்யாசத்துறையில் ஈடுபடவேண்டும் என்பது, ஸ்ரீ சர்மா அவர்களின் நெடு நாளைய ஆசை. அந்த ஆசை நிறைவேறுவதற்கான காலம் வந்து விட்டது என்பதை அறிந்து, அவர் உள்ளம் குளிர்ந்தது. தம் வீட்டிலேயே, பல பிரமுகர்களின் முன்னிலையில், சாஸ்திரிகளைக் கொண்டு ஒரு கதா காலக்ஷேபம் நடத்த அவர் ஏற்பாடு செய்தார். அன்று நடந்தது கண்ணப்ப நாயனார் கதை. அதுவே சாஸ்திரிகளின் கதாகால க்ஷேப அரங்கேற்றமாகவும் அமைந்து விட்டது.

1940'ல் தொடங்கிய அந்தக் கதாகாலக்ஷேப கைங்கர்யத்தை, சாஸ்திரிகள் இன்று வரை மிகவும் சிறப்போடு செய்து கொண்டு வருகிறார். இராமாயணம், பாரதம், பாகவதம், ஸ்காந்தம், தேவீ பாகவதம், நாயன்மார் சரித்திரங்கள் ஆகிய கதாமிருதங்களை, சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகள் உள்பட எல்லா இடங்களிலும் மழையாகப் பொழிந்து வருகிறார். எந்தக் கதை சொன்னாலும் செவிகுளிரும், உள்ளம் உருகும் எனினும், அவருடைய தியாகராஜ ராமாயணத்துக்கு இணையாக, வேறு எதையுமே சொல்ல முடியாது என்று எண்ணுகிறேன்.

ஸ்ரீசாஸ்திரிகளுக்கு, தியாகராஜ கீர்த்தனைகளில் 365 உருப்படிகளுக்கு மேல் நல்லபாடம் உண்டு. இன்று உள்ள பல பெரிய சங்கீத வித்வான்களுக்குக் கூட, இத்தனை உருப்படிகள் பாடம் இருக்குமா என்பது சந்தேகமே! இந்தக் கீர்த்தனைகளில், இராமாயணக் கதையிலே வருகிற பல்வேறு நிகழ்ச்சிகளும், அந்த நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையான உயரிய தத்துவங்களும், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளால் பக்திச் சுவையோடு விளக்கப்பட்டுள்ளன. அந்த விளக்கங்களை யெல்லாம் செவ்வனே தொகுத்து, மிகவும் அழகாகக் கோவைப்படுத்தி, வால்மீகி ராமாயணத்திடையேயும் கம்பராமாயணத்திடையேயும் அதை மணியிடை பவளம் போல் கலந்து, தியாகராஜ ராமாயணம் என்ற ஒரு புதிய வடிவத்தை உருவாக்கி, நம் சிந்தைக்கும் செவிக்கும் தெவிட்டாத விருந்தளித்து வருகிறார் ஸ்ரீமான் பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

கம்பீரமான சாரீரம், சங்கதிகளை அனுயாசமாகப் பொழிய

வல்ல சங்கீதசாதனை, சபையோரின் உள்ளத்தைத் தொடக்கூடிய உருக்கமான பேச்சு, இவையெல்லாம் ஸ்ரீசாஸ்திரிகளின் கதாகாலக்ஷேபத்துக்குத் தனிச் சிறப்பை அளிக்கின்ற முக்கியமான அம்சங்களாகும். இந்த அம்சங்களின் காரணமாக, ஹரிகதா காலக்ஷேப பாகவதர்களிடையே, அவர் ஓர் உன்னதமான ஸ்தானத்தைத் தேடிக் கொண்டு விட்டார் என்பதில் சந்தேகமில்லை.

சாஸ்திரிகளுக்கு இப்போது ஐம்பத்து மூன்று வயது ஆகிறது. நம் இளந்தலை முறையினரிடையே, பக்தியும் பண்பாடும் ஓங்கி வளரவேண்டும் என்று அவர் உளமார ஆசைப்படுகிறார். அந்த ஆசை நிறைவேறுவதற்கான நற்பணியில் அவர் நெடுங்காலம் ஈடுபட்டிருக்குமாறு, இறைவன் அவருக்கு நீடூழி நல்வாழ்வை நல்குவாராக!

ஈஸ்வரனும் அவனுடைய ஐஸ்வர்யமும்



பகவான்
ஸ்ரீ இராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

ஈசுவரனையும் அவருடைய விபூதியையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வுலகம் அவருடைய விபூதி. அவருடைய விபூதியில் மக்கள் மயங்கி விடுகின்றனர். இந்த விபூதிக்குச் சொந்தக்காரனாகிய ஈசனை அவர்கள் நாடுவதில்லை.

கடவுளுக்கு எட்ட இருந்து அவரைக் காண்பவர்களும் காண முயலுபவர்களும், அவருடைய விபூதிகளையே பெரிதும் காண்கிறார்கள். கடவுளுக்கு அருகில் வரவர, விபூதிகளெல்லாம் மறைந்து போய் விடுகின்றன. இறுதியில் வெறும் ஜோதி சொரூபமாக அவர் காணப்படுகிறார்.

ஈசனே உலகில் யாவுமாக விளையாடுகிறார். சௌபாக்கியமும் அவர் சொரூபம்; தௌர்பாக்கியமும் அவர் சொரூபம். சௌபாக்கியத்தைப் போற்றுவது போன்று, பக்தன் ஒருவன் தௌர்பாக்கியத்தையும் போற்ற வேண்டும்.

ஏதேனும் ஒரு கலையில் ஒருவன் நிபுணன் ஆகிவிடுவானாகில், அக்கலையானது அவனிடத்துத் திகழும் தெய்வ சம்பத்தாம். ஒருவன் கட்டழகே வடிவெடுத்தவனாயிருப்பானாகில், அக் கட்டழகும் தெய்வ சம்பத்தாம்.

மழைக் காலத்தில் நிலம் முழுதும் நீரில் ஊறிக் கிடப்பது போன்று, பிரபஞ்சம் முழுதும் ஈசனுடைய பேரறிவில் ஊறிக் கிடக்கிறது.

நலம் கேடு, பாப புண்ணியம் ஆகிய அனைத்தும், ஈசுவரனுடைய மகிமைகள் எனப் பரமஹம்ஸன் காண்கின்றான். கேடும் பகவானுடைய மகிமை என்பது, மற்றவர்களுக்கு விளங்காது.

உள்ளது ஒரு பொருள். அது சச்சிதானந்தம். அதை விஷ்ணு என்கிறது வைஷ்ணவம்; சிவம் என்கிறது சைவம்; கிருஷ்ணன் என்கிறது பாகவதம்.

நரேந்திரனைக் காணுந்தோறும் எனக்கு ஆனந்த பரவசம் வந்து விடுகிறது. அவனுடைய உற்றார்

ஈசனே அனைத்துமாய் இலங்குகின்றார். ஆனால் அவருடைய சொரூபம் மானிட வடிவத்தில் தெளிவுற விளங்குகிறது. மக்களுள் தூய உள்ளம் படைத்திருப்பவர்களிடத்து, அவருடைய சாந்நித்தியம் சிறப்புற்று விளங்குகிறது. தூய உள்ளம் படைத்தவர்கள் ஆனந்த பரவசமடைந்து ஆடுவதும் பாடுவதும் உண்டு.

தீபவெளிச்சத்தில் சிலர் சமைக்கின்றனர்; சிலர் பாகவதம் படிக்கின்றனர். வேறு சிலர் பொய்ப் பத்திரம் ஆயத்தப்படுத்துகின்றனர். இவர்களுடைய நல்ல செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் தீபவெளிச்சம் பயன்பட்டது எனினும், செயல்களின் நலம் கேடுகள் தீபவெளிச்சத்தைசாரா.

அதே விதத்தில், பகவானுடைய அருளை முக்திக்காகச் சிலர் பயன் படுத்துகின்றனர். வேறு சிலர் திருடுதலில் வெற்றியடைதற்குப் பயன்படுத்துகின்றனர். எல்லாச் செயல்களுக்கும் ஈசனிடமிருந்து வருகிற அருள் சக்தி பயன்படுகிறது எனினும், செயல்களின் குண தோஷங்கள் பகவானைச் சாரா.

●

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

நிரம்பிய குணமுள்ளவனும், வணக்கத்துடன் இருப்பவனுமான மனிதன், பிராணிகளுக்கு ஏற்படும் சிறிய நாசத்தைக்கூடப் பொறுக்கமாட்டான்.

இழிவானவனிடத்தில் ஸ்நேஹம் விலகும்போது, அன்பும், அவனால் ஏற்படும் உதவியும், ஸ்நேஹத்தால் ஏற்பட்ட ஸுகமும் அழியும். அப்படிப்பட்டவனை விட்டுவிட வேண்டும்.

எவன் அபவாதம் சொல்லுவதிலும், நாசம் செய்வதிலும் முயலுவானோ, அறியாமல் சிறிது அபகாரம் செய்தாலும் பொறுமையாக எவன் இருப்பதில்லையோ, அப்படிப்பட்ட நீசர்களை புத்தியினால் நன்கு ஆராய்ந்து, புத்திமான் தூரத்தில் விலக்கிவிட வேண்டும்.

எவன் பங்காளியையும், ஏழையையும், மனக்கவலை உள்ளவனையும், நோயாளியையும் உபகரித்துப் பாதுகாக்கிறானோ, அவன் புத்ரர்களாலும் பசுக்களாலும் அபிவிருத்தியையும், அளவுகடந்த க்ஷேமத்தையும் அடைவான்.

எவர்கள் தமக்கு நன்மையையும், குலத்திற்கு அபிவிருத்தியையும் விரும்புகிறார்களோ, அவர்கள் ஞாதிகளை விருத்தி அடையச் செய்யவேண்டும். ஆகையால் நன்மையைச் செய்யும் ஞாதிகளைப் பூஜிப்பவன், க்ஷேமத்தை அடைவான்.

ஞாதிகள் கெட்ட குணங்கள் உள்ளவர்களாக இருந்தாலும், நன்கு ரக்ஷிக்கத் தகுந்தவர்கள். குணவான்களும், உனது அனுக்ரஹத்தை விரும்புகின்றவர்களுமான பாண்டவர்கள் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமா?

ஓ ராஜனே, வீரர்களான பாண்டவர்களுக்கு அனுக்ரஹம் செய்யும். அவர்களுடைய ஜீவனத்திற்காகச் சில கிராமங்களைக் கொடும்.

இப்படிச் செய்தால், உலகில் உமக்குக் கீர்த்தி ஏற்படும். வயது முதிர்ந்த நீர் புத்ரர்களுக்கு உத்தரவு போடவேண்டும். நான் உமக்கு நன்மையைக் கூறக் கடமைப்பட்டவன். நான் உமது நன்மையைக் கோருகிறவன்.

மங்களத்தை விரும்புகிறவன் பங்காளிகளுடன் சண்டையிடக் கூடாது. ஞாதிகளோடு கூடத்தான் சுகங்களை அனுபவிக்க வேண்டும்.

ஞாதிகளுடன் கூடி, ஒருவரிடத்தில் ஒருவர் நல்ல போஜனம், நல்ல பேச்சுக்கள், நல்ல அன்பும் செய்ய வேண்டும். ஒருபொழுதும் விரோதம் செய்யத்தக்கதன்று.

ஞாதிகள் ஆபத்துக்களைத் தாண்டுவிப்பார்கள். ஞாதிகள் ஆபத்துக்களில் முழுகும்படியும் செய்வார்கள். நல்ல குணமுள்ளவர்கள் தாண்டுவிப்பார்கள். தீய குணமுள்ளவர்கள் முழுகச் செய்வார்கள்.

எந்த ஞாதியானவன் பொருளுள்ள தனது ஞாதியை அடைந்தும் நன்மையை அடையவில்லையோ, அந்த ஞாதியின் துன்பமானது, விஷம் பூசிய பாணத்தால் மானைக் கொன்ற பாவம் வேடனை வந்து அடைவதுபோல், ஸ்ரீமானான ஞாதியை அடையும்.

ஓ அரசனே, யுத்தத்தில் உமது பிள்ளைகள் மடிந்தாலும், பாண்டவர்கள் மடிந்தாலும், உமக்குத் தாபம் நிச்சயமேற்படும். அதை இப்பொழுதே யோசியும்.

உயிர் நிலையில்லாதது. எந்தக் காரியத்தைச் செய்தால் பின்பு கட்டிலில் படுத்து மனம் தவிக்குமோ, அந்தக் காரியத்தை முன்னமேயே யோசித்துச் செய்யாமல் இருக்க வேண்டும்.

துரியோதனனால் முன்பு தவறு செய்யப்பட்டு விட்டது என்றாலும், குலவிருத்தரான நீர் அதைச் சீர் திருத்தி, அக்குற்றத்தை நீக்கி விடும்.

ஓ அரசனே, நீர் அவர்களை ஓரிடத்தில் நிலைக்கச்செய்து, உலகில்

உமக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்கிக்கொண்டு, புத்திமான்களால் பூஜிக்கத்தக்கவராவீர்.

எவன் தீரர்களுடைய நல் வார்த்தையைக் கேட்டு, பயனேற்படும்வரை ஆலோசித்து, காரியங்களில் நிச்சயத்தைஅடைகிருனே, அவன் நீண்டகாலம் புகழுடன் விளங்குவான்.

மிகவும் ஸமர்த்தர்களாக இருந்தாலும், அறியவேண்டியதை அறியாமலும், அறிந்ததைச் செய்யாமலும் இருப்பவர்களாகில், அவர்கள் தங்கள் அறிவை நல்லதில் உபயோகப்படுத்தினவர்களாக ஆக மாட்டார்கள்.

எவன் பாபத்தை அளிக்கும் காரியத்தை அறிந்து ஆரம்பிக்காமல் இருக்கிருனே, அவன் விருத்தி அடைவான்.

எவன் முன்பு செய்த பாபத்தைத் தொடர்ந்து யோசியாமல் பின்பும் செய்கிருனே, அவன் ஆழமான சேற்றில் தள்ளப்படுவான். (துன்பமான நரகங்களை அனுபவிப்பான் எனக் கருத்து.)

பிருஹஸ்பதிக்கு ஸமானமான புத்தியுள்ளவர்களாக இருந்த போதிலும், சாஸ்திரத்தை அறியாமலும், பெரியோர்களை ஸேவிக்காமலும், தர்மார்த்தங்களை அறியமாட்டார்கள்.

கடலில் விழுந்த பொருள் வீணே! கேளாதவனிடத்தில் நல்லதை கூறுவதும் வீணுனதே! மனத்தை அடக்காதவனிடத்தில் இருக்கும் சாஸ்திரமும் வீணுனதே! சாம்பலில் செய்த ஹோமமும் வீணே!

அடக்கமானது அபகீர்த்தியைப் போக்கும்; பராக்ரமம் கஷ்டத்தைப் போக்கும். பொறுமை எப்பொழுதும் கோபத்தைப் போக்கும். ஆசாரமானது அழகின்மையைப் போக்கும்.

அனுபவிக்கும் பொருள்களாலும், பிறப்புக்குக் காரணமான தாய் தந்தையராலும், வஸிக்கும் வீட்டினுலும், ஆசாரத்தாலும், ஆஹாரத்தாலும், வஸ்திரத்தாலும், குலத்தைக் கண்டு அறிய வேண்டும்.

சரீரத்தில் அபிமானத்தை விட்டவனுக்குக் கூட, காமமேற்பட்டால் அதைத் தடுக்கமுடியாது. சரீர அபிமான முள்ளவனுக்குக் காமமேற்பட்டால், கேட்கவும் வேண்டுமா?

புத்திமான்களை ஸேவிக்கின்றவனும், வித்வானும், தர்மிஷ்டனும், கண்ணுக்கு அழகாக இருப்பவனும், நல்ல ஸ்நேஹிதர்களை உடையவனும், நல்ல வார்த்தை பேசுகிறவனும் ஆன நண்பனைப் பரிபாலிக்க வேண்டும்.

கெட்ட குலத்தில் பிறந்தவனுலும் நல்ல குலத்தில் பிறந்தவனுலும், எவன் மரியாதையை (முன்னேர்களின் ஆசாரத்தை)த் தாண்டாமல் இருக்கிருனே, தர்மத்தை விரும்புகிறவனும் வெட்கப்படுகிறவனும் அடக்கமுள்ளவனுமான அவன், நற்குலத்தோர்கள் நூறு பேர்களைக் காட்டிலும் சிறந்தவன்.

எந்த இருவர்களுக்கு எண்ணத்தோடு எண்ணமும் ரஹஸ்யத்தோடு ரஹஸ்யமும் அறிவோடு அறிவும் ஒத்துப் போகிறதோ, அவர்களுடைய ஸ்நேஹமானது கெடுவதில்லை.

மேதாவியானவன், கெட்ட புத்தி உடையவனையும், படிப்பில்லாமல் அறிவற்றவனுய் இருப்பவனையும், புல்லினுல் மூடப்பட்ட காட்டிலுள்ள கிணற்றைப்போல் விலக்க வேண்டும். அவனிடத்தில் செய்யும் ஸ்நேஹம் கெட்டுவிடும்.

பண்டிதனானவன், கர்வம் கொண்டவர்களிடத்திலும், மூடர்களிடத்திலும், கோபமுள்ளவர்களிடத்திலும், ஆலோசிக்காமல் செய்கிறவர்களிடத்திலும், தர்மம் விலகினவர்களிடத்திலும் ஸ்நேஹம் செய்யக்கூடாது.

நன்றி அறிந்தவனும், தர்மம் செய்பவனும், ஸத்யமுள்ளவனும், அற்பத்தனமில்லாதவனும், உறுதியான பக்தி உடையவனும், இந்திரியங்களை ஜெயித்தவனும், இருக்கவேண்டிய முறையில் இருப்பவனுமான மனிதனை, வித்வான் மித்ரனாக விரும்பவேண்டும்.

எல்லாப்பிராணிகளும் அண்டும்படி அடக்கத்துடன் இருக்கும் குணம், அஸூயை இல்லாமை, பொறுமை, தைர்யம், மித்ரர்களை அவமதியாமல் இருத்தல் இவைகளை, பண்டிதர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பதற்குக் காரணமெனக் கூறுகிறார்கள்.

எவன் அநீதியால் கெடுக்கப்பட்ட பொருளை நியாயமான முறையில் மறுபடி திருப்ப விரும்புகிறானோ, அவனுடைய அச்செய்கை உத்தம புருஷர்களின் விரதமாகிறது.

மேலே வரப்போகும் துக்கத்தைப் போக்குவதற்கு பரிஹாரத்தை அறிந்தவனும், இப்பொழுது நடக்கிற உறுதியான நிச்சயமுள்ளவனும், தவறு நடந்தபின் மீதமுள்ள காரியத்தைச் செய்ய அறிந்தவனுமான மனிதனை, பொருள்கள் விடுவதில்லை.

செய்கையினாலும் மனஸினாலும் வாக்கினாலும் எதை அடிக்கடி ஸேவிக்கிறானோ, அது அவனைக் கவருகிறது. (திரிகரணத்தாலும் அடிக்கடி ஸேவிக்கும் வஸ்துவானது, இவனை வசப்படுத்துகிறது எனக் கருத்து). ஆதலால் நல்ல காரியத்தையே செய்ய வேண்டும்.

எது நலம்?



ஸ்ரீ திருமுருக
கிருபானந்த வாரியார்

நாம் எல்லோரும் நலமாகத் தான் வாழ விரும்புகின்றோம். நலம் வேண்டாம் என்று எவனாவது விரும்புவானா? எந்த உயிராவது விரும்புமா? எல்லா உயிர்களும் நலத்தையே நாடுகின்றன.

கடிதம் எழுதும்போது கூட 'இவ்விடம் நலம்; அவ்விடம் நலம் எழுதவும்' என்றுதான் எழுதுகின்றோம்.

ஆனால் எது நலம் என்று நாம் நன்கு உணர்கின்றோமா? இல்லை. உண்பது நலம் என்றால், எந்த விலங்குதான் உண்ணாமல் இருக்கின்றது? குழந்தைகளைப் பெறுவதா நலம்? பன்றி, நாய், பூனை முதலிய உயிர்கள் நிரம்பக் குட்டிகளை யீனுகின்றன. ஆகவே உணவு, உறக்கம், குழந்தை முதலியவைகளைப் பெறுவதும் நலம் அன்று.

சிறுவர்கள், உடைந்து போன கண்ணாடித் துண்டுகளையும் வளையல் துண்டுகளையும் பொறுக்கி எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு, பெரிய ஐஸ்வரியம் என்று எண்ணி மகிழ்கின்றனர். அதனைக் கண்டு நாம் நகைக்கின்றோம்; ஆனால் சிறு குழந்தைகள் அவற்றை உயர்ந்த பொருட்களாகவே கருதுகின்றன. அறிவு முதிர்ந்த பின் அவற்றை மதிப்பதில்லை. இது போல் இப்போது நாம் பொன்னையும் பொருளையும் பட்டையும் பெரிதாகக் கருதி, அவற்றைப் பேணி மகிழ்கின்றோம்.

அப்பர் பெருமான் திருப்புகலூரில் உழவாரப்பணி செய்தனர்.

செம்பொன்னும் நவமணியும்
சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில்
உருள்பருக்கை யுடன் ஒக்க

எம்பெருமான் வாகீசர்
உழவாரத் தினிலேந்தி
வம்பலர்மென் பூங்கமல
வாவியினில் புகஎறிந்தார்.

பொன்னையும் நவமணிகளையும் அப் பெருமானார் மதித்தாரில்லை. உழவாரப் படையில் எடுத்துக் குளத்தினில் எறிந்தார். புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும் சொல்லோடும் வேறுபாடில்லாத நிலையில் அவர் விளங்கினார்.

பொன்னைக் கண்டு மயங்காத அவர், விண்ணிலிருந்து மின்னற் கொடிபோல் இறங்கிய பெண்ணைக் கண்டும் மயங்கினாரில்லை.

ஆகவே, பொன்னோடு வாழ்வதும் பெண்ணோடு வாழ்வதும் நலமன்று. பொன்னும் பெண்ணும் பெருந் துன்பங்களைத் தருவதைக் கண்கூடாகக் காணலாம். பதினாயிரம் பொன்னைச் சட்டையில் வைத்தவனுக்கு உறக்கமேது? அமைதி ஏது?

இனி, அநுபவ அறிவுபெற்ற ஆன்றோர்கள் எது நலம் என்று கூறுகின்றார்கள் என்பதனைச்சற்று சிந்திப்போம்.

வீடு, நிலம், புலம், பொன், பொருள், பட்டம், பதவி, துணிமணி முதலியவைகளைப்பெறுவது நலம் என்று நாம் பிறழ உணர்கின்றோம்.

இவற்றையெல்லாம் இழப்பதுவே நலம் என்கின்றார் அருணகிரிநாதர் கந்தரநுபூதியில்.

'எல்லாம் அற என்னையிழந்த
நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே'

"எனக்கு உரியன எல்லாவற்றையும் இழந்துவிடுவது மட்டும் அன்று; என்னையும் இழந்துவிட வேண்டும் என்கின்றார் அவர்!

நமது மனோநிலைக்கும் அதற்கும் எத்தனை தூரம்! நன்கு எண்ணிப் பாருங்கள்!

சிறு குழந்தைகள் வெடித்துப் போன பட்டாசுத் துண்டுகளைப் பொறுக்கிவைத்து மகிழ்வது போல், நாம் இருக்கின்றோம்.

"யாதனின் யாதனின்
நீங்கியான் நோதல்
அதனில் அதனில் இலன்" என்கின்றார் திருவள்ளுவர்.

ஆகவே, பொன் பொருள் இவற்றையெல்லாம் இழப்பதுவே நலம் எனக் கூறுகின்றார் அநுபவ ஞானி அருணகிரியார்.

இப்படிச் சொன்னால் யாராவது இந்த உபதேசத்தைக் கேட்பார்களா? "என்னவோ இது ஒரு பைத்தியம் கூறுகின்றது" என்பார்கள். ஆனால் அருணகிரியார் சென்றநிலையில் சென்று நின்றால், அது விளங்கும்.

பொன்னோடும் பொருளோடும் இருக்கின்றவர்களும், அதனோடு மனம் பற்றாமல், அவைகட்கும்

தமக்கும் தொடர்பு இல்லையென்று, தாமரை இலைத்தண்ணீர் போல் இருக்கவேண்டும்.

எல்லாம் இழந்த இடமே நலம் என்கின்றார். இது எப்படி? நமக்கு நன்கு தெரிந்த ஒன்றின் மூலம் கூறுகின்றேன்.

எல்லாவற்றையும் மறந்து உறங்கும்போது, நமக்கு ஆறுதல் கிடைப்பதைக் கண்கூடாக அறிகின்றோம். எத்தனையோ வேதனைகட்கு இடையே நின்று வெயிலிடைப் புழுவைப்போல் துடிக்கின்ற ஒருவன், சற்று கண்ணயர்ந்து உறங்கியபோது ஆறுதல் பெறுகின்றான்.

ஆனால் உறக்கத்தில் தன்னையும் மறந்து தலைவனையும் மறந்துவிடுகின்றான். அதனால் அந்த நலம் உயர்ந்ததன்று.

இனி எல்லாவற்றையும் மறந்து தன்னுள் தலைவனைக் கண்டு அசைவற நிற்கும் போது, எல்லையற்ற இன்பம் உண்டாகும்.

அங்கே இரவும் பகலும் இல்லை. யானும் எனதும் இல்லை. அகமும் புறமும் இல்லை. ஒரே இன்பமயம்.

'யாளுகிய என்னை விழுங்கி
வெறுந்
தானாய் நிலைநின்றது தற்பரமே'

என்கின்ற அநுபவம் அங்கே நிகழும்.

இதனையேபட்டினத்துச் சுவாமிகளும் பின்வருமாறு கூறுகின்றார்:

"அட்டாங்க யோகமும் ஆதார
மாறும் அவத்தைதையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே
வியப்பொன்று கண்டேன்

மட்டாகிச் செம்மதிப்
பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை
விழுங்கி இருக்கின்றதே!"

ஆகவே நமக்கு உரியன என்று உள்ளன எல்லாவற்றையும் இறைவனுடையவை என்று எண்ணி, எல்லாம் அவனுக்கே என்று அர்ப்பணம் புரிந்து, இறுதியில் தன்னையும் அர்ப்பணம் புரிந்து நலம் பெற வேண்டும்.

அங்கே, அவனை நினைந்து உருகும் அருள் நலம் விளையும். இதனையே மணிவாசகர்,

"கலந்த அன்பாகிக் கசிந்து
உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு
நல்கி"

என்கின்றார்.

அவ்வாறு எல்லாம் இழந்து சும்மா இருக்கும் சுகத்தை, இத்துணைத்து என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. அது அநுபவத்திலேயே விளங்குவது.

"சொல்லுகைக் கில்லை யென்
றெல்லாம் இழந்து சும்மா
இருக்கும்
எல்லையுட் செல்ல எனை
விட்டவா!"

என்கின்றார் அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில்.

ஆகவே, நாம் நமது புறத்தேயுள்ள பொருட்கள், அகத்தேயுள்ள எண்ணங்கள், கருவி கரணங்கள் ஆகிய அனைத்தையும் இழந்து, அவன் திருவடியில் ஒப்புவித்துவிட்டு, ஒப்புவித்தோம் என்ற எண்ணத்தையுந் துறந்து, அவனடிக்கே அன்பு செய்து, வழிபாடு ஒன்றே நமது நலம் என்று கருதி, அதில் நிலைத்து நிற்க வேண்டும்.

திருநீலகண்ட நாயனார் அங்ஙனம் நின்றார். அதனால் அவரைப் பற்றித் தெய்வச் சேக்கிழார் கூறுகின்றார்:

"வேதியர் தில்லை மூதூர்
வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னு
சிற்றம் பலத்தே
ஆதியு முடிவும் இல்லா அற்புதத்
தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின் மிக்கார்!"

வழிபாடே நலம் என்கின்றார். வழிபாட்டில் எல்லாம் கரைந்து விடுகின்றன. உப்புப் பொம்மை தண்ணீரில் கரைவதுபோல், "நான்" "எனது" என்பவை, ஆண்டவன் அருள் வெள்ளத்தில் கரைந்துவிட வேண்டும்.

சென்றுசென் றணுதாய்த்
தேய்ந்து தேய்ந்து ஒன்றாய்த்
திருவருளுடன் கலந்து திகழும்
நலமே நலம்.

பெண்கள் ஏன் அம்பாளை உபாஸிக்கவேண்டும்?



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

விவாஹ காலத்தில் அம்பாளை அவசியம் ஆராதிக்க வேண்டும்.

ருக்மிணி, பகவான் பர்த்தாவாக வரவேண்டுமென்று அம்பிகையை ஆராதித்தாள். கௌரீ பூஜை பண்ணி அந்த பாக்கியத்தை அடைந்தாள். ஸரஸ்வதி, லக்ஷ்மீ பூஜைகளைப் பண்ணக்கூடாதா? அம்பிகை பூஜைதான் பண்ணினாள். அதன் காரணம் என்ன? கௌரீ பூஜையை ருக்மிணி ஏன் பண்ண வேண்டும்?

விவாஹமாகாத கன்னிகைகள், விவாஹமான பின்பு பாதிவிரத்தியத்தோடு இருக்க வேண்டும். பர்த்தா எப்படி இருக்கிறானோ அப்படியே இருக்க வேண்டும். அப்படி இருப்பதானால் சித்தம் திடமாக இருக்க வேண்டும். அப்படி இருப்பதற்கு, யார் ஸதியோ, யார் பதிவிரதையோ, யார் பாதிவிரத்தியத்தையே ஒரு ரூபமாக வைத்துக்கொண்டிருக்கிறாளோ, அந்த அம்பிகையை ஆராதனம் பண்ணினால் நல்லது.

உத்தரதேசத்திலும் ஆந்திரதேசத்திலும், கன்னிகைகள் கௌரீபூஜை செய்யும் ஸம்பிரதாயம் இருக்கிறது. அதை அநுசரித்துப் பாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அம்பிகைக்குப் பாதிவிரத்தியம் இருப்பதற்கு அடையாளம் இருக்கிறதா? இருக்கிறது. தாக்ஷாயணியாக அவதரித்த பொழுது, பதி தூஷணம் பண்ணின தக்ஷனுக்குப் புத்திரியாக வந்த சரீரம் கூடாதென்று தியாகம் பண்ணி விட்டு, பர்வதராஜனுக்குப் புத்திரியாக ஆனாள்.

பர்த்தாவின் தூஷணையைக் கேட்ட காது இருக்கக் கூடாது,

அந்தக் காதையுடைய சரீரமே இருக்கக் கூடாது என்று சரீரத் தியாகம் பண்ணினது மட்டும் அம்பாளுடைய பாதிவிரத்திய அடையாளமன்று. மற்ற அடையாளங்களும் இருக்கின்றன.

லக்ஷ்மிக்குப் பாதிவிரத்யம் இருப்பது ஒரு விசேஷம் இல்லை. அழகு, அலங்காரம் முதலியவைகளெல்லாம் மஹாவிஷ்ணுவினிடத்தில் இருக்கின்றன. அப்படிப் பட்ட பதியினிடத்தில் பாதி விரத்திய முடையவளாக இருப்பது ஒரு பிரமாதம் அல்ல.

அம்பிகையினுடைய பர்த்தா எப்படிப்பட்டவர்? மயானவாஸி. பாம்பு, சடை, எலும்பு முதலியவைகளை வைத்துக் கொண்டிருக்கிறார். அகோரஸ்வரூபம் உடையவர். மஹாகோரமான ஸ்வரூபியாகவும் அவர் இருக்கிறார். இப்படிப்பட்டவரிடத்தில் பாதி விரத்தியத்தை அநுஷ்டித்து, அந்தப்பதியினுடைய தூஷண சப்தத்தைக் கேட்டதற்காகச் சரீரத் தியாகம் பண்ணிவிட்டு, மறுபடியும் அந்தப் பதியையே அடைய வேண்டுமென்று தபஸ் பண்ணி அடைந்த ஒரு ஸதியை ஆராதித்தால், எப்பொழுதும் பாதிவிரத்தியம் ஸ்திரமாக இருக்கும்படியான அநுக்கிரஹம் கிடைக்கும் அல்லவா?

புருஷர்களுக்கு ஆசார்யரிடத்தில் ஸ்திரமான பக்தி இருக்க வேண்டும். காளிதாஸன் அம்பிகையை ஸ்தோத்திரம் செய்திருக்கிற ஒரு சுலோகத்திலே, ஆசாரிய ஸ்வரூபம் ஸாக்ஷாத் அம்பிகையே என்று சொல்லப் பட்டிருக்கிறது.

மற்றொரு சுலோகத்தில், ''அம்பிகையை'' தாலீபலாச தாடங்கா'' என்று அவன் வர்ணிக்கிறான். தாலீபலாசம் என்பது பனையோலை. அதுதான் அம்பாளுக்குத் தாடங்கமாக இருக்கிறது. அதனால் அம்பிகை பூஜையில் கருகுமணி பச்சோலை கொடுக்கிறார்கள்.

கல்யாணம் பண்ணிக் கொள்ளும் ஸ்திரீகள் நித்தியமங்களமாக இருக்க, ஸர்வமங்களையாகிய அம்பிகையைப் பூஜை செய்ய வேண்டும். அவளே மங்கள ஸ்வரூபிணி. ஆகையால் வேறொரு வஸ்துவை எடுத்துத்தரவேண்டும் என்பது இல்லை.

அம்பிகையின் ஆராதனத்தால் பதிபக்தியும் குருபக்தியும் உண்டாகும். அதற்காகத்தான் ருக்மிணி பூஜை செய்தாள்.

அம்பிகையினுடைய தாடங்கத்தில் நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்களாகிய பகவத் பாதாளுக்கும் பிரீதி அதிகம். ஜம்புகேசுவரத்தில் உள்ள அகிலாண்டேசுவரியினுடைய சக்தியை கலியுகத்தில் பொறுக்க முடியவில்லை. அதனால் அதை சாந்தப்படுத்துவதற்காக, அந்த அம்பிகைக்குத் தாடங்கப் பிரதிஷ்டை செய்தார்கள்.

அம்பிகையினுடைய சக்தி மிகவும் அதிகம். அவளுடைய கோயிலின் ஒன்பதாவது வாயிலுக்கு அணிமாதி அஷ்டஸித்திகள் காவல். அந்த வாயிலுக்கு வெளியில் வந்துநின்ற தேவர்கள்கூட, அஷ்டமாஸித்தியை அடைகிறார்கள்.

அம்பாளுக்குரிய சக்ரம் ஸ்ரீ சக்ரம். அது மஹாமேரு ஸ்வரூபமானது. அதில் பலஆவரணங்கள் உண்டு. ஒவ்வோர் ஆவரணத்துக்கும் பல அதிதேவதைகள் இருக்

கிறார்கள். பிந்துஸ்தானம் பராசக்தி. எல்லாவற்றிற்கும் மேலானது பராசக்திஸ்வரூபம். அதற்குக் கீழே இருப்பவைகளெல்லாம் ஆவரணசக்திகள்.

அம்பிகை இருக்கும் சிந்தாமணி கிருஹத்தில் ஒன்பது ஆரவணங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று கோடிகோடி யோஜனை தூரத்தில் இருக்கிறது.

கடைசித் துவாரம் அணிமாதி அஷ்டஸித்திகளுக்கு ஏற்பட்டது. அந்தத்துவாரத்துக்கும் அம்பிகை இருக்கும் இடத்துக்கும் எவ்வளவோ தூரம் இருக்கிறது. ஆனாலும், அதற்கு வெளியிலே நிற்கும் பொழுதே, அணிமாதிகளின் அநுக்கிரஹத்தால் ஐசுவரியத்தை அடைகிறார்கள்.

இந்திராதி தேவதைகள் ஒன்பதாவது வாயிற்படியில் இருந்து கொண்டே, அஷ்டவிபூதி சக்திகளின் அநுக்கிரஹம் பெற்றுப் போகிறார்கள். இந்திராதிகளுக்குப் பரதேவதையை அணுகத் தக்க இந்திரிய நிக்கிரஹம் இல்லை. ஸனகாதி யோகிகளுக்கே கிடையாது. அந்தப் புரத்துக்குள் போவதற்கு எவ்வளவு இந்திரிய நிக்கிரஹம் வேண்டும்!

அப்படிப்பட்ட சக்தியை உடைய அம்பிகையின் பூர்ண சைதன்யம் ஏற்பட்டால் கலியில் தாங்க முடியாதென்று எண்ணி, ஜம்புகேசுவரத்துக்கு ஸ்ரீ சங்கராசாரியர்கள் போகும்போது அம்பிகையைப் பிரார்த்தித்தார்கள். ஸௌம்ய ஸ்வரூபமாக இருக்கவேண்டுமென்று சக்தியை ஆகர்ஷித்து, ரத்னமயமான ஸ்ரீ சக்ரம், பஞ்சாக்ஷரயந்திரம் இரண்டையும் சேர்த்து இரண்டு சக்ரம்பண்ணி, அம்பாள் கர்ணத்தில் ஸ்தாபனம் பண்ணினார்கள்.

அந்தத் தடாங்கத்தைப்பற்றி ஸ்ரீசங்கராசாரியர்கள் "உன்னுடைய தடாங்கத்தின் மஹிமையால் தான் பரமேசுவரனுக்கு இவ்வளவு மஹிமை ஏற்பட்டிருக்கிறது" என்று ஸௌந்தர்யலஹரியில் சொல்லியிருக்கிறார்கள்.

தேவதைகள் அமிருதபானம் பண்ணினார்கள். அமிருதம் ஜராமரணங்கள் இல்லாமற்பண்ணும். அவர்கள்கூட பிரளய காலத்தில் இல்லாமற் போய் விடுகிறார்கள்; பயம் அடைகிறார்கள். பரமேசுவரர் எதைச் சாப்பிட்டார்? அந்த ஆகாரத்தை நினைத்தாலே மரண பயம் உண்டாகிறது! அப்படியே எடுத்துச் சாப்பிட்டு விட்டார்: மிச்சம் வைக்காமல் சாப்பிட்டார். அப்படிச் சாப்பிட்டும் அவருக்குக் காலக்கணக்கேஇல்லை. அவர் கால காலராக இருக்கிறார். காலனை உதைக்கிறார். விஷத்தைச் சாப்பிட்டுக்கூட இப்படி இருக்கிறார். மற்றவர்களோ அமிருதத்தைச் சாப்பிட்டுக்கூட மரணமடைகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? எது இதற்கு மூலம்? "உன்னுடைய தாடங்க மஹிமை தான் காரணம்" என்று அம்பிகையைப் பார்த்து ஸ்ரீ சங்கராச்சாரியர்கள் சொல்லுகிறார்கள்.

அந்தத் தாடங்கமானது அம்பிகையின் காதைவிட்டுக் கீழே இறங்காமல் இருக்க வேண்டும். அவர் எதைச் சாப்பிட்டாலும் ஒன்றும் பண்ணவிட்டால், அது அப்படி இருக்கும். அதனால் தாடங்கந்தான் காரணம் என்று சொல்லுகிறார். ஸ்ரீ ஆசார்யர்களுடைய வாக்காகிய இது ஸ்மிருதி. ஸ்மிருதிக்கு சுருதி மூலம் இருக்கும். ஈசுவரனைச் சொன்னது சுருதி. அதை அநுஸரித்துப்

பெரிய மஹான்கள் சொன்னது ஸ்மிருதி.

'ஹே பரமேசுவரா! நீ பிழைத்திருக்கின்றாயே! உனக்கு யார் மருந்து கொடுத்தார்கள்? உனக்கு இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று கோரமானது. மற்றொன்று மங்களகரமானது. கோரஸ்வரூபம் உன்னுடையது. சிவ என்பதை, சிவா என்று நீட்டினால் அம்பிகைக்கு ஆகும். அம்பிகைக்குப் பாதி உண்டு. அவள் ஸ்வரூபம் பரமமங்களகரமானது. லோகம் முழுவதற்கும் மருந்து அதுதான். அம்பாள் கடாக்ஷம் இருந்தால் அகாலமரணம் லோகத்தில் இராது. உனக்கும் மருந்து பண்ணுவது அந்த ஒரு சரீரம். ஸர்வமங்கள சரீரந்தான் மருந்து. அதனால் எங்கள் அம்பிகையால் தான் நீ பிழைத்திருக்கிறாய்' என்ற கருத்து சுருதியில் இருக்கிறது.

இது மூல சுருதி. ஸௌந்தர்ய லகரி முதல் சுலோகத்திலும் இதே கருத்து வந்திருக்கிறது.

'சிவன் சக்தியோடு இருந்தால் தான் இருக்கமுடியும். இல்லாவிட்டால் அசையக்கூட முடியாது' என்று அந்த சுலோகம் சொல்லுகிறது. இப்படிப்பட்ட அம்பிகையை ஆராதிக்க எவ்வளவோ புண்ணியம் பண்ணியிருக்கவேண்டும்.

பார்த்தாவினுடைய கோரஸ்வரூபத்தால் அம்பிகையினுடைய பாதிவிரத்தியம் அதிகமாகிறது. பாதிவிரத்தியத்துக்காகத் தேஹபரித்தியாகம் செய்த அந்த அம்பிகையைக் கல்யாணத்துக்கு முன்பு ஆராதித்தால், அவளுடைய அநுக்கிரஹத்தால் பாதிவிரத்தியமும் ஸர்வமங்களங்களும் திடமான சித்தமும் உண்டாகும்.

○

நமது பல முயற்சிகள் பலன் அளிக்காமல் போவது ஏன்?

பிரச்னை

''முயற்சி திருவினை ஆக்கும்! முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்! என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இந்த முதுரைகளில் அவ்வளவு சாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், நான் செய்து வருகிற பெரும்பாலான முயற்சிகள், தோல்வியிலேயே முடிவடைகின்றன. அப்படிக்கு இல்லாமல், என் முயற்சிகள் அனைத்திலுமே வெற்றி பெறுவதென்றால், அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

இப்படி நமக்கு எழுதியிருக்கிறார் ஓர் அன்பர்.

ஆலோசனை

இந்த இடத்தில், நாம் ஓர் அடிப்படை உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, எந்த முயற்சியும் தானாகவே நமக்கு வெற்றி அளித்து விடுவதில்லை. ''நாம் நம்மால் முடிந்த வரையில் உளமார முயற்சி செய்தோம்'' என்ற மனநிறைவுதான், நமக்கு உண்மையிலேயே வெற்றியைத் தருகிறது.

எப்படியென்றால்,—

மனத்தில் நிறைவு ஏற்படும் போது, நம் ஆன்மா தற்காலிகமாக வேனும் சற்று சாந்தி அடைகிறது. சாந்தி என்பது, ஈஸ்வரனுடைய ஸ்வரூபம், எனவே, மனநிறைவின் வாயிலாக நாம் ஈஸ்வரனோடு ஒன்றிய நிலையை, அந்த நேரத்திற்கேனும் அடைந்து விடுகிறோம்.

ஈஸ்வரனுக்குக் கர்மபலதாதா என்று ஒரு பெயர் உண்டு. அதாவது, நம்முயற்சிகளுக் கெல்லாம் அவரே பலன் அளிப்பவர் என்பது, அதன் பொருள். அவ்வாறு பலன் அளிக்கின்ற ஈஸ்வரனும், பலனைப் பெறுகின்ற ஜீவனும் ஒருவரோடொருவர் ஒன்றி நிற்கும் போது, கொடுப்பவனும் வாங்குபவனும் ஒன்றாகிவிட்ட அந்த உயரிய நிலையில், நம்முடைய முயற்சிகளுக்கு நாமே பலன் கொடுத்துக் கொள்பவர்களைப் போன்று ஆகிவிடுகிறோம். அதனால், நாம் எதிர் பார்த்த பலன்கள், நம்முயற்சிகளுக்கு எளிதில் கிடைத்து விடுகின்றன.

ஆனால், ''நாம் நம்மால் முடிந்தவரையில் முயற்சி செய்து விட்டோம்'' என்ற மனநிறைவைப் பெறாமல்,—

''நாம் இன்னும் சிறிது தீவிரமாக முயற்சி செய்திருக்கலாம்.

நாம் செய்த காரியத்தை இன்னும் சிறிது திருத்தமாகச் செய்திருக்கலாம்'' என்பன போன்ற மனக்குறைகளுக்கு இடம் ஏற்படும் வகையில் நாம் நடந்து கொண்டிருந்தோமானால்;

அல்லது, ''நாம் நம்மால் முடிந்த வரையில் முயற்சி செய்து விட்டோம் என்பது உண்மைதான். இருந்தாலும், அந்த முயற்சிக்கு நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்?'' என்னும் சம்சயத்துக்கு நம் உள்ளத்தில் இடம் கொடுத்தோமானால்;

நமது முயற்சிகள் அவ்வளவாக வெற்றி அளிப்பதில்லை.

காரணம், சம்சயங்களும் மனக்குறைகளும், நம் உள்ளத்தில் சாந்தி உண்டாகாதவாறு தடுத்து நிற்கும் இயல்பு உடையவை. சாந்தி உண்டாகாத போது, கர்மபலதாதாவாகிய ஈஸ்வரனை விட்டு நாம் வெகு தூரம் விலகி நிற்பவர்கள் ஆகிறோம். நாம் அப்படி விலகி நிற்கும் வரையில், நம் முயற்சிகள் வெற்றி அளிக்க மாட்டா!

ஆகையால், முயற்சியில் வெற்றி பெற விரும்புகிறவர்கள், தம் உள்ளத்தில் சம்சயங்களுக்கு இடம் கொடுக்கலாகாது, மனக்குறைகளுக்கு இடம் ஏற்படும் வகையிலும் நடந்து கொள்ளக் கூடாது.

நம்முடைய சக்திக்கு இயன்ற வரையில், உள்ளத்தில் வஞ்சனையோ அசிரத்தையோ இல்லாமல், நம்முடைய மனச்சாட்சிக்குத் திருப்தி ஏற்படும் வகையில், உண்மையான ஆர்வத்தோடும் அக்கறையோடும் நாம் ஒரு காரியத்தைச் செய்வோமாயின், அதற்கு அப்புறம் நமக்கு யாதொரு மனக்குறையும் ஏற்படமாட்டாது. ''நம்மால் முடிந்தவரை செய்துவிட்டோம்'' என்ற மனநிறைவே, அப்போது நம்மிடத்தில்மேலோங்கி நிற்கும்.

ஆனால், நம்முடைய முயற்சியைப் பற்றி நமக்கு மனநிறைவு ஏற்பட்டாலும் கூட, அதனுடைய பலனைப் பற்றி நமக்கு சந்தேகம் வந்துவிடுமானால், அந்த மனநிறைவு பங்கப்பட்டுவிடும். அதனால், நமக்குக் கிட்டவேண்டிய வெற்றியும் எட்டப் போய் விடும்.

ஆகையால், பலனைப் பற்றிய சந்தேகம் வராமல் காத்துக் கொள்ளவேண்டுவது, அந்தப் பலனை அடைவதற்காக நம்மால் செய்யப்படுகிற முயற்சியைக் காட்டிலும் முக்கியமானது ஆகும்!

சந்தேகம் எப்போது ஏற்படுகிறது? நாம் பலனைப்பற்றி நினைக்கும் போதுதான், அதுகிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகமும் கூடவே தோன்றிவிடுகிறது. ஆகவே, பலனைப் பற்றிய எண்ணமே இல்லாமல் இருப்பதுதான், சந்தேகம் வராமல் காத்துக்கொள்வதற்குரிய சரியான வழியாகும். பலனை பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிடச் சொல்லுகிற பகவத்கீதா வாக்கியம், இந்தக் கருத்தினையே அடிப்படையாய்க் கொண்டதாகும்.

பலனைப் பற்றி எண்ணிக் கொண்டே நாம் ஒரு முயற்சியில் ஈடுபடுவோமாயின், அந்த முயற்சியை நாம் எவ்வளவுதான் சிரத்தையாகவும் சிறப்பாகவும் செய்து முடித்தாலும், நாம் எதிர்பார்கும் பலன் கைகூடும் வரையில் நமக்கு மன நிறைவு உண்டாக மாட்டாது. ஆனால், மன

நிறைவு உண்டானல்தான் பலன் கிடைக்கும் என்பதை நாம் முன்னமேயே கண்டுள்ளோம். இது, "கல்யாணம் நடந்தால் பைத்தியம் தீரும்—ஆனல், பைத்தியம் தீர்ந்தால்தான் கல்யாணம் நடக்கும்" என்னும் கதையைப் போன்ற ஒரு நிலையே ஆகும்.

குதிரை முன்னலும், அதனல் இழுத்துச் செல்லப்படுகிற வண்டி பின்னலும் செல்வதுதானே முறை?

மனநிறைவு என்பது, குதிரையைப் போன்றது. நமது முயற்சியின் பலன் என்பது, வண்டியைப் போன்றது. முதலில் மனநிறைவு ஏற்பட்டால்தான், பிறகு பலன் கிடைக்கும். "நான் எதிர்பார்த்த பலன் கிடைத்தபிறகே நான் மன நிறைவு பெறுவேன்" என்ற நிலையை மேற்கொள்வது, குதிரைக்கு முன்னல் வண்டி செல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிற பேதைமைச் செயலுக்கு நிகராகும்!

சுருக்கமாகச் சொன்னல், பலனைப்பற்றிய எண்ணம் ஒன்றே தான், நாம் அப்பலனை அடைய விடாமல் தடைசெய்கின்ற இடையூருய் அமைகின்றது. ஆகையால் எந்த முயற்சியையும், அதன் வெற்றி தோல்விகளைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், நாம் சிரத்தையோடு செய்து முடிக்க வேண்டும். அப்படி செய்து முடித்தால், "நாம் செய்து முடித்துவிட்டோம்" என்ற மன நிறைவே, நாம் எதிர்பார்த்த வெற்றியைத் தவருமல் தந்து விடுகிறது!

திருக்கோவலூர் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்

ஸ்ரீ ச. கு. கணபதிஐயர்

ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமித் திருநாள் ஓர் ஆசிரியப் பெருமானின் ஆராதனை நாள். அந்தப் பெருமான் யார்? அவரை ஆராதனை செய்யும் ஏற்பாடுகளைத் தோற்றுவித்து நடத்தி வருபவர் யார்? இந்த வினாக்களுக்கு விடை கீழே இருக்கிறது.

வட கன்னடம் மாவட்டத்தைச் சேர்ந்த மங்களகிரி என்ற கிராமத்தில், ஒரு மகான் (கி. பி. 1814-ல்) ஸ்மார்த்த அந்தண குலத்தில், ஸ்ரீ வெங்கோப கனபாடிகள் என்ற அறிஞருக்குத் தவப் புதல்வராக, முருகன் திருவருளால் தைத் திங்கள் கிருத்திகை நாளில் அவதரித்தார். அந்தத் திருநாளில் அவதரித்த தால சுப்ரமணியம் என்ற பெயர் சூட்டப் பெற்றார்.

கருவிலே ஆன்மீகத் திருவைப் பெற்ற ஸ்ரீ சுப்ரமணியம், இளமையிலேயே தம் பெற்றோரை இழந்து, தம் ஏழாம் வயதிலே ஊரைவிட்டுக் கால்நடையாய் வெளியேறினார். அவர் பல இடங்களில் அலைந்து திரிந்து, வழியில் பல பெரியோர்களைத் தரிசித்து, உள்ளம் பக்குவமடைய வேண்டி க்ஷேத்ராடனத்தை மேற்கொண்டார்.

அன்று முதல் உலக இன்பங்களில் அவருக்கு நாட்டம் செல்லவில்லை. துறவு வேட்கையே மிகுந்து தோன்றியது.

''சத்யம் மாதா பிதா ஞானம்
தர்மோ ப்ராதா தயா ஸகி
சாந்தி: பத்நீ க்ஷமா புத்ர:
ஷடேதோ மம பாந்தவா:''

என்று தாம் முன்பு பெரியோர் மூலம் கற்ற நீதிசாஸ்திர ஸ்லோகத்தையே தமது வாழ்க்கையின் லட்சியமாகப் பூண்டு, துறவு நெறியைக் காட்டும் குருவை நாடிப் பல இடங்களைத் தரிசித்துக் கொண்டு, ஏதோ ஒரு ஜோதி வழிகாட்ட, இளைஞர் தம் 11 ஆம் பிராயத்தில் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார்.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே''

என்று தாயுமான சுவாமிகள் கூறியுள்ளபடி, புண்ணிய க்ஷேத்திரமாகிய பண்டரிபுரத்தில் குருவின் அருள் இவருக்குக் கிடைத்தது.

அத்வைதத்தின் ஒளி எங்கும் பரவி ஒளிருமாறு ஸ்ரீ பகவத்

பாதாசாரியர்களான ஆதிசங்கரர், பாரத நாட்டின் சில பகுதிகளில் சில மடங்களை நிறுவினார்கள். அவற்றில் ஒன்று பதரிநாத் என்னும் தலத்திலுள்ள ஜோதிர் மடம். ஸ்ரீ சுப்ரமண்யம் யாத்திரை செய்து வந்த காலத்தில், ஜோதிர் மடத்தின் தலைவராக இருந்தவர் ஸ்ரீ சிவரத்னகிரிஸ்வாமிகள். அந்த ஸ்வாமிகள் அப்போது பண்டரிபுரம் வந்து தங்கியிருந்தார்கள்.

சுற்றும் பற்றும் விட்டு, ஐம்புலன்களை அகத்தடக்கி, அல்லலில்லை. அருவினையில்லை, துன்பமில்லை, துயருமில்லை என்ற வைராக்கியத்துடன் யாத்திரை மேற்கொண்டு பண்டரிபுரம் அடைந்த சுப்ரமணியம், வழி நடைச் சோர்வினால் களைப்படைந்து, அந்தவூரில் சந்திர பாகா நதிக்கரையில் அயர்ந்து தூங்கிவிட்டார்,

துயிலும்போது, ஸ்ரீ சிவ ரத்ன கிரிஸ்வாமிகள் அநதத் தலத்துக்கு எழுந்தருளியிருப்பதை ஒரு வயோதிக அந்தணர் மூலம் அறிந்து, ஸ்வாமிகள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றார்.

சென்று, ஸ்வாமிகளைக் கண்டவுடனே காந்தத்தால் கவரப்படும் இரும்பேபோல் தம்மை இழந்து பரவசரானார்.

பின்பு ஒருவாறு தெளிந்து, ''இவரன்றோ சுடர்க்கொழுந்து! தூளக்கிலா விளக்கு! அற்றாரகும் அலந்தார்க்கும் அருள் செய்யும் அருமருந்து! அறங்காட்டி அந்தணர்க்கு அன்று ஆலமர நிழலில் அறம் அருளிச் செய்த அரனார், இந்நாள் மானிட உருவம் தாங்கி எனக்கு அருள் செய்ய வாய்த்தார்!'' என்று விம்மிதமுற்றார்.

பிறகு அருகே சென்று, அன்னாரின் திருவடிகளில் நெடிது வீழ்ந்து, பேச நாவெழாமல் விழிநீர் சோர வணங்கி எழுந்து நின்றார்.

மண்டலம் சேர் மயக்கறுக்கும் மருந்தாகி, அன்புடையாரின் நெஞ்சம் விட்டு நீங்காத எம்மானாகிய ஸ்ரீ சிவரத்னகிரி ஸ்வாமிகள், இளைஞரின் வேட்கையைக் குறிப்பால் உணர்ந்து கொண்டு, தம் அருட்பார்வையால் நோக்கி, ஆனந்த சாகரத்திலே அழுத்தி, நெடுங்கையாலே தடவிக் கொடுத்து, ''இந்த இளைஞன் ஞானியாகி நீண்ட காலம் உலகினுக்குப் பயன்படுக'' என்று இருக்கச் செய்து, கற்பனவற்றைக் கற்றுக் கொள்ளும்படி பணித்தார்.

பல ஆண்டுகள் ஸ்வாமிகளுடன் இருந்து கொண்டு, அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்று, அவர்களுடைய ஆக்ஞையின்படி சில வேத சாஸ்திர பண்டிதர்களிடம் கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுக் கொண்டார்.

இந்நாட்களில் யோக மார்க்கமும் இவருக்குக் கைவரப் பெற்றது. பிறகு ஒருநாளில், ஸ்வாமிகள் ஜோதிர் மடத்தில் இளைஞராகிய சுப்ரமணியனுக்கு ஞானானந்தகிரி என்ற தீக்ஷா நாமத்தைச் சூட்டி, சந்யாசத்தை முறைப்படி வழங்கினார்.

குரு சீடனுக்கு அருள் செய்யும் தீட்சை ஆறுவகைப்படும். அவை வாசகதீட்சை. மானச தீட்சை, சாஸ்திரதீட்சை சட்சுதீட்சை, ஸ்பர்சதீட்சை, யோகதீட்சை என்பன. இந்த ஆறனுள். ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் முதல் நான்கினைப் பண்டரி புரத்திலே குருவைத் தரிசித்த அன்றே பெற்றார்.

சாஸ்திரப் பயிற்சியினுலும் யோகாப்பியசத்தாலும் மற்ற இரண்டு தீட்சைகளையும் இவர் தம் குரு அருளால் பிறகு பெற்ருர்.

ஸ்ரீ சிவரத்னகிரி ஸ்வாமிகளிடம் சந்நியாசம் பெற்ற ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமிகள், இன்று திருக்கோவலூருக்கு ஒரு கல் தொலைவில் ஸ்ரீ ஞானனந்த தபோவனம் என்ற க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கிருர். இவருடைய குருவாகிய ஸ்ரீ சிவரத்னகிரி ஸ்வாமிகள் என்றோ சித்தியடைந்து விட்டார்கள்.

ஸ்ரீ ஞானனந்தகிரிஸ்வாமிகள் இன்றும் காலங் கடந்த மூர்த்தியாகத் திகழ்கிருர். காயகற்பத்தை ஏற்றுக் கொண்டோரின் உடல்போல், சுவாமிகளின் உடல் ஒளிகான்று இலங்குகிறது. இவர் தம் குரு நாதராகிய ஸ்ரீ சிவரத்ன கிரியாருக்குக் குரு பூஜை ஏற்பாடுகளைச் செய்து வருகிருர். அது ஆண்டுதோறும் ஒழுங்காக நடைபெறுகிறது. பிரதி ஆண்டிலும் சித்ரா பௌர்ணமி அன்று நடைபெறுவது அது. ஸ்ரீ சிவரத்னகிரி சுவாமிகள் சித்தியடைந்த திருநாள் இதுவே.

மகான்களின் சேவை அவர்கள் மறைவதுடன் நின்றுவிடுவதில்லை. சிஷ்ய பரம்பரையினர் அந்த சேவையைத் தொடர்ந்து நடத்துகிருர்கள். சிலுவையில் அறையப்பட்ட நாளில் ஏசுநாதர், "என் வேலை முடிந்தது" என்ருர். ஆனல் அவர் தொடங்கிய பணி தொடர்ந்து இன்னும் நடைபெறுகிறது.

துறவு அபிமானம் கொண்டொழுகும் மேதைகள் காட்டுக்கு ஓடிவிடுவது இல்லை. குகையில் வசிப்பவன் ஆகாயத்தை நோக்குகிருன். மக்களிடை வசிப்பவர்கள் பூமியைப் பார்க்கிருர்கள். தங்களுக்காக அவர்கள் செய்ய வேண்டியதுஒன்றுமில்லை. தாங்கள் காஷாயிகளாக இருந்தும், உலக மக்களை உஜ்ஜீவிக்கும் பொருட்டே பல கைங்கரியங்களை மேற் கொண்டிருக்கிருர்கள்.

நித்தியபூஜைகள், பஜனைகள், விசேஷகால குருபூஜை முதலானவை பல படிகளிலே இருக்கும் பக்த கோடிகளுக்காகவே ஏற்பட்டுள்ளன. எந்த மதத்தினரும் இவ்வித பூஜைகளில் கலந்து கொள்ளலாம்.

"ஒன்றே பேரூர்; வழி அதற்கு
ஆறுள"

என்கிருர் திருமூலர். சமரச நிலையையே இவர் வற்புறுத்தியிருக்கிருர்.

"எல்லாம் ஒன்று என்று நினைப்ப
வருக்குத்
தொல்லுலகமெல்லாம் தன்
னுள்ளே தோன்றும்"

என்று சிவஞானசித்தியார் கூறுமாப்போலே, சமரச முடையாருக்கு உலகத்தின் ஒருமைப்பாடு புலப்படும்.

"மேற்கே மெக்கா, கிழக்கே காசி, ஆனல் இராமனும் அல்லாவும் இதயங்களில்" என்கிருர் கபீர்தாஸ். இந்த ஒருமைப்பாட்டுணர்ச்சி நமக்கு வேண்டும்.

இதை நமக்கு வழங்க வல்லவர்கள் ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகள் போன்ற பெரியவர்களே. இவர்கள் எல்லாம் காலரீதிக்கு ஏற்ப உலகில் தொண்டு புரியும்படி இறைவனல் கட்டளை இடப்பட்டு அவதரித்த மகாபுருஷர்கள்.

இவர்கள் வாழ்க! இவர்களுடைய பணி சிறந்து பொலிக! இப்பணிகளில் கலந்து கொண்டு ஆஸ்திக நெறியில் ஈடுபடுகிறவர்கள், நீடூழி வாழ்க சிறந்து!

பிரார்த்தனை

ஸ்ரீ சாரதாமணி தேவியார்

மனந்தளராமல் பிரார்த்தனை பண்ணிக்கொண்டேயிரு. உரிய காலம் வரும்போது பலன் கைகூடும் பண்டைக்கால முனிவரும் ரிஷிகளும் பகவானைக் காணுவதற்காக எத்தனை யுகங்கள் தவஞ் செய்தனர்! தவம் உடனே பலித்ததா? ஒரு கணத்திற்குள் அவரை அடையலாம் என்று நம்புகிறாயா? இப்பிறவியில் அடையாது போயின், அடுத்த பிறவியில் அவரை அடைவாய்; அப்பிறவியிலும் அடையவில்லையாயின், அதற்குப் பின் அடைவாய். பகவானை அடைவது அவ்வளவு எளிதா? ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் எளிதான ஒரு வழியைக் காட்டியுள்ளார்; ஆதலால் எவர்க்கும் பகவானை அடைய இயலும்.

விரதங்கள், பூஜை, யாத்திரை, பணம் சம்பாதித்தல்- இவைகளை யெல்லாம் இளமையிலே செய்தல் வேண்டும். முதுமையிலே உடல் கேட்டையும்; அதனிடத்தில் வலிமை இல்லாது போகும். மனமும் பலங்குறைந்து வரும். அக்காலத்தில் எதைத்தான் செய்ய முடியும்? தவம் பூஜை முதலியவைகளை இளமையிலே பழகுங்கள். உங்கட்கு எதுசெய்ய விருப்பம் இருந்தாலும் சரி, இளமையிலே அதைச் செய்து முடித்துக் கொள்ளுங்கள்; இதுவே தகுந்த பருவம்.

பகவானுடைய நாமத்தை ஒரு நாளைக்குப் பதினையாயிரம் தடவையோ இருபதினாயிரம் தடவையோ ஜெபித்தால், மனம் ஒரு நிலைப்படும். இது உண்மை; எனது சொந்த அனுபவமே இது. முதலில் ஜெபம் பழகி வரட்டும்; அது பலியாது போனால் என்னிடம் குறை கூறலாம். பக்தியோடு ஜெபம் பழகி வரவேண்டும்; ஆனால் இது செய்வதில்லை. ஒன்றும் செய்யமாட்டார்கள்; ஆயினும் ''எனக்கு ஒன்றும் பலிக்கவில்லையே, ஏன்?'' என்று மட்டும் என்னிடம் முறையிடுகின்றனர்.

ஹிருஷிகேஷ் போன்ற ஒரு தனிமையான இடத்தில் நீ ஞான சாதனம் பழகுவாயானால், உனது மனம் உறுதியடைவதைக் காண்பாய். அதன்பின் எவ்விடத்தில் எம்மனிதர் நடுவே வாழ்ந்தாலும், உன் மனம் அதனால் சிறிதும் விகார மடையாது. இளஞ் செடியைச் சுற்றி வேலி அமைத்தல் வேண்டும். ஆனால் அது வளர்ந்து முற்றிய பின், ஆடு மாடுகளால் அதற்கு யாதொரு தீங்கும் நேராது. ஏகாந்தமான ஓரிடத்தில் ஞான சாதனம் பழகுதல் மிகவும் அவசியமானது.

உனக்கு ஞான ஒளி வேண்டிய போதெல்லாம், ஏதேனும் சந்தேகமும் கஷ்டமும் தோன்றும்போதெல்லாம், கண்ணும் கண்ணீரு

மாய்ப் பகவானிடம் பிரார்த்தனை பண்ணுக. பகவான் உன் மன அழுக்குகளையெல்லாம் போக்கி, உனது தாபத்தை ஆற்றி, உனக்கு ஞான ஒளியைச் சொரிவார்.

குண்டலினி சக்தியை (மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் தெய்வீக சக்தியை) எழுப்பாமல் ஞானம் பெற முடியாது. அது மெல்ல மெல்லக் கண் விழிக்கும். பகவானது நாமத்தை ஜெபிப்பதனாலேயே நீ எதையும் பெறுவாய். மனம் அமைதியாய் இல்லாவிடினும், நீ ஓரிடத்தில் அமர்ந்து பத்து லக்ஷம் தடவை மந்திரத்தை ஜெபி. குண்டலினி விழிக்கு முன் அநாஹதத் தொனி கேட்கும். ஆனால பகவானது அருளில்லாமல் எதனையும் சாதிக்க முடியாது.

ஆசனம் பிராணாயாமம் இவைகளைப் பழகுவதில் சிறிது ஜாக்கிரதையாயிரு. வெகு நாள் அந்த அப்பியாசங்களைத் தொடர்ந்து பழகி வந்தால், மனம் உடலை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கலாம். ஆனால் அவைகளை விட்டுவிட்டாலோ அதனால் உடலுக்குக் கேடு விளையலாம். சொல்ப நேரம் பழகுதல் சரி. பிராணாயாமம் ஒரு சிறிது பழகலாம் அதிகமாகப் பழகுவதனால், மூளையும் நரம்புகளும் கொதிப்படையும். மனம் தானே அமைதியடையுமானால், பிராணாயாமம் எதற்காக?

ஞான வாழ்க்கையில் வெகு தூரம் மேலேஏறியவர்களும், தவறித் தாழ்ந்த நிலைக்கு இறங்கி விடலாம். பகவானிடம் முழு மனத்தோடுபிரார்த்தனைபண்ணு. அவரையே எப்போதும் நினைத்துக் கொண்டிரு. அகந்தையை ஒழி. அகந்தை கண்ணை மறைக்கும்போது, மக்கள் தமது சுயேச்சையால் எல்லாக் காரியங்களையும் செய்து வருவதாக நினைத்துக் கொள்கின்றனர். பகவானை அண்டி நிற்பதில்லை. பகவானை நம்பி வாழ்பவரை, அவரே காப்பாற்றுகின்றார்.

எவ்வளவு கடுமையாக ஒருவன் ஞான சாதனம் பழகுகிறானோ, அவ்வளவு விரைவில் அவன் கடவுளை அடைவான். யாதொரு சாதனமும் பழகாவிட்டாலும், முடிவில் அவன் கடவுளை அடைவது திண்ணம். ஆனால்பிரார்த்தனையும் தியானமும் பழகாதவனுக்குக் கடவுளை அடைய நெடுநாள் செல்லும். வேண்டிய உணவுப் பொருள்கள் எல்லாம் முன் இருந்தாலும், சமையல் செய்ய வேண்டும அல்லவா? விரைவில் சமைப்பவன் விரைவில் உண்பான். சிலர் காலையில் உண்பர். சிலர் மாலையில் உண்பர். ஆனால் வேறு சிலர் சோம்பலால் சமைக்காது பட்டினி கிடப்பர்.

சாஸ்திரங்களை வாசிப்பதனால் மட்டும் நம்பிக்கை உண்டாகுமா? மிதமிஞ்சிய படிப்பால் மனம் குழம்பும். கடவுளே மெய், உலகம் பொய்—இதைத் தெரிந்து கொள்ளவே படிப்பு வேண்டும். சில சாமான்களை வாங்கி வா என்று உனக்கு ஒரு கடிதம் நான் எழுதுகிறேன். சாமான்கள் என்னென்ன என்பதைத் தெரியாதவரை, உனக்குக் கடிதம் தேவைதான்; தெரிந்த பின்னும் அது அவசியமா? அச்சாமான்களை நீ வாங்கிக்கொண்டு என்னிடம் வருகின்றனை, கடிதத்தை இரவும் பகலும் வாசித்துக் கொண்டே இருப்பதனால் என்ன பயன்?

மனம் அடங்கியிருக்கும்போது மந்திரத்தை (பகவானது நாமத்தை) ஒருமுறை உச்சரிப்பது, பகவானை விட்டு மனம் அலையும்போது இலக்ஷம் தரம் உச்சரிப்பதற்குச் சமமாகும். நாள் முழுவதும் நாமத்தை ஜெபித்தாலும் சரி, மனம் வேறிடத்தில் இருந்தால் அதிகப் பலன் வராது. உச்சரிக்கும் போதே மனம் அதில் நிலைத்து நிற்கவேண்டும்; அப்போதுதான் பகவானது அருள் உண்டாகும்.

•

கணவரோடு கூடி வாழும் பெண்களே! உலக வாழ்க்கையில் என்ன சுகத்தைக் கண்டீர்கள்? உலக வாழ்வில் இவ்வளவு மோகம் ஏன்? இவ்வளவு மிருகத்தனம் எதற்காக? எவ்வித சுகம் உங்கட்குக் கிடைக்கின்றது? சுத்தமான உயர்ந்த வாழ்வைக் கனவிலேனும் கருதியதில்லையா? இப்பொழுதே உங்களுடைய கணவர்களோடு தங்கைமாரும் அண்ணன்மாரும் போல் வாழ முடியாதா? என்னைப் பின் பற்றி நடந்தால் என்ன? பன்றி போல வாழ்வதில் உங்கட்கு இந்த ஆசை ஏன்? உலகத்தார் படும் துயரம் எனது எலும்பையும் உருக்குகின்றதே!

இளமையிலேயே குடும்ப வாழ்க்கையைத் துறந்து சாதுக்களாக வாழ்கின்றனர் சிலர். இவர்கள் எல்லோரும் தெய்விகக் குழந்தைகளே. மோந்து பார்க்காத மலர்களைப் போல இவர்கள் வாழ்வார்கள். மணம் புரிந்து கொள்ளாமல் சுத்தமாக வாழ்பவன், பகவானைப் பிரார்த்தித்தாலும் சரி, பிரார்த்திக்காவிட்டாலும் சரி, விரைவாகப் பகவானை நோக்கிச் செல்வான். மற்றவர்களோ கால்களும், கைகளும் கட்டுக்கு உட்பட்டவர்கள்; இவர்கள் பகவானைப் பற்றி நினைக்க முயன்றாலும், உலகக் கட்டிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வது கஷ்டமாகும்.

பகவானுக்கு அன்னம் சமர்ப்பிக்க என்ன தெரிய வேண்டும்? பகவானை உனக்குச் சொந்தமான ஒருவராக எண்ணுக. ''வாரும், உமது ஆசனத்தில் அமர்ந்து, உமது ஆகாரத்தை உண்ணும்'' என்று சொல்லி அவரை வேண்டிக் கொள். மேலும் அவர் வந்து விட்டதாகவும், ஆசனத்தில் அமர்ந்திருப்பதாகவும், ஆகாரத்தை உண்பதாகவும் நினை. சொந்தக்காரரை ஒருவரை உபசரிக்க மந்திரம் அவசியமா? உறவினரை விருந்துக்கு வரவேற்பதுபோல செய். நீ எப்படி உபசரித்தாலும் பகவான் அதை ஏற்றுக் கொள்வார்.

மூன்று விஷயங்களைப் பற்றி ஜாக்கிரதையாயிரு. ஒன்று, ஆற்றின் கரைமீதுள்ள வீடு; ஆறு எச்சமயத்திலும் பெருகி, உன் வீட்டை அடித்து விடலாம். இரண்டாவது, ஒரு பாம்பு. நீ அதைக் காணும்போது, மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஏனெனில், இன்ன சமயம் அது வந்து உன்னைக் கடிக்கும் என்பதை அறிய முடியாது. மூன்றாவது, ஒரு சாது. அவருடைய ஒரு நினைவோ ஒரு சொல்லோ, குடும்பத்தில் வாழ்பவனைத் துயரத்துக்கு உள்ளாக்கலாம் என்பதை நீ அறியாய். ஒரு சாதுவைக் காணும்போதெல்லாம் மரியாதையாய் நடத்தல் வேண்டும். அலக்ஷியமாகப் பேசி அவரிடம் அவமதிப்பைக் காட்டாதே.

o

வினா - விடை

வினா—1: ஆத்மஞானம் அடைவதற்குரிய எளிதான வழியாது?

விடை: மனத்தை அமைதிப் படுத்துவதுதான் ஆத்ம ஞானத்தை அடைவதற்குரிய ஒரேவழியாகும். அதைத் தவிர, வேறு இரண்டாவது வழி கிடையாது. நாம் செய்கின்ற பூஜைகள், ஜெபிக்கின்ற மந்திரங்கள், பண்ணுகின்ற சாஸ்திர விசாரங்கள், படிக்கின்ற ஸ்தோத்திரங்கள், இயற்றுகின்ற யக்ஞங்கள், நோற்கின்ற நோன்புகள் ஆகிய எல்லாமே, மனத்தை அமைதிப் படுத்துவதற்கான சாதனங்களேயன்றி வேறல்ல. எந்தவிதமான எண்ணங்களோ எழுச்சிகளோ இல்லாமல், அலையற்ற கடல் போல மனம் அசைவற்று நிற்க வேண்டும். அத்தகைய சாந்தியான நிலையில்தான், ஆத்ம ஞானம் பிறக்கிறது!

வினா-2: நாம் வழிபடுகிற தெய்வம் நம்மிடத்தில் கிருபையோடு இருக்கிறதா இல்லையா என்பதை, நாம்எப்படித்தெரிந்து கொள்வது?

விடை: நாம் வழிபடுகிற தெய்வம் எப்போதும் நம்மிடத்தில் கிருபையோடுதான் இருக்கும். அதைப்பற்றி ஐயப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், நம் உள்ளத்தின் பரிபக்குவக் குறைவால் அந்தக் கிருபையை நம்மால் உணரமுடியாமல் போய் விடலாம். ஆகையால், தெய்வத்தின் கிருபையை அளந்தறிய முயல்வதைவிட, நம் உள்ளத்தின் பரிபக்குவத்தை அளந்தறிய முயல்வதே அறிவுடைமை ஆகும். அந்தப் பரிபக்குவத்துக்குத் தக்கபடி, தெய்வத்தின் திருவருள் நம் உள்ளத்தில் வெளிப்பட்டு விளங்கும்.

நம் இஷ்டதெய்வத்தின் பெயரையோ சரித்திரங்களையோபிறர் கூறக் கேட்கும்போது நம்உள்ளம் உருகுமானால், அந்தத் தெய்வத்தின் கிருபைக்கு நாம் ஆளாகி விட்டோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். உலகியல் விவகாரங்களில் நமக்குச் சுவை குறைந்து, தெய்வத்தைப் பற்றிச் சிந்திப்பதிலும் பேசுவதிலுமே நாம் சுவைகாணத் தொடங்குவோமாயின், நமது இஷ்ட தெய்வம் நம்மை ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதை நாம் உணர்ந்துகொள்ளலாம். நம் உள்ளம் எப்போதும் அமைதியையே விரும்புமாயின், இறைவனின் கருணை நமக்குப்பரிபூரணமாக ஏற்பட்டு விட்டது என்று நாம் மகிழ்ச்சி அடையலாம்!

வினா—3: இன்ப வடிவான இறைவன் நமக்கு ஏன் துன்பங்களைத் தருகிறார்?

விடை: நாம் எல்லாம் அவித்தை அல்லது ஆணவம் என்கிற விஷமூர்ச்சையிலே மூழ்கிக் கிடக்கிறோம். விஷமூர்ச்சையுற்றவனை எழுப்புவதற்காகக் கண்ணிலே கலிக்கம் இடுவது வழக்கம். இறைவனால் நமக்கு அளிக்கப்படுகிற துன்பங்கள், அந்தக் கலிக்க மருந்தைப்

போன்றவை. அவித்தையில் மூழ்கிக்கிடக்கும் ஜீவனுக்கு விழிப்புஉண்டாக்குவதற்காகவே, இறைவன் துன்பங்களைத் தருகிறார்.

''செல்லாஅநின்ற இத்தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' என்கிறார் மணிவாசகப் பெருமான்.

இதற்கு முந்தின 'பிறவிகளில், நாம் கல்லாகவும் புல்லாகவும் கூட இருந்திருக்கிறோம் என்று அவர் கூறுகிறார். இந்தப்பிறவியில் இறைவன் நமக்குத் துன்பங்களையும் இடையூறுகளையும் தந்து உதவாவிட்டால், நாளுக்கு நாள் நாம் நமது ஆத்ம சக்தியை இழந்து, ஜடத்தன்மையில் ஆழ்ந்து, மீண்டும் கல்லாகவும் புல்லாகவும் பிறப்பதற்கான இழி தகுதியை எய்திவிடுவோம என்பது உறுதி. நாம் அதனை எய்தாமல் இருப்பதற்காகவே, இறைவன் நமக்குப்பல்வகையான இன்னல்களைத் தந்தருளுகிறார்.

அது மட்டும் அல்ல. பண்டைக் காலத்திலே, முனிவர்கள் தம் ஆத்ம சக்தியை வளர்த்துக்கொள்வதற்காகக் கடும் தவங்களைப் புரிந்தார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறோம், அல்லவா? தவம் என்பது என்ன? 'உற்றநோய் நோன்றல்' என்கிறார் திருவள்ளுவர். அதாவது, துன்பங்களைத் தாங்கிக் கொள்வதுதான் தவத்தின் ஸ்வரூபம்.

கோடைக்காலத்தில்நெருப்பின் நடுவிலும், குளிர்காலத்தில் நீரின் நடுவிலும் நின்று, முனிவர்கள் தவம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அவர்கள் தாமாகவே கடுந் துன்பங்களை வலிய மேற்கொண்டார்கள் என்பதே அதன்பொருள். அந்தத் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் வலிமைக்கே தபோவலிமை என்று பெயர்.

தபோவலிமை உடையவர்களால் ஒருவரை ஆக்கவும் முடியும் — அழிக்கவும் முடியும் என்கிறார் திருவள்ளுவர். அவர்கள் வேண்டியதை வேண்டிய வண்ணம் அடைவார்கள் என்கிறார் அவர்.

நாம் எல்லாம் அந்த முனிவர்களைப் போல் கடுந்தவங்களைச் செய்யாவிட்டாலும், இறைவனால் நமக்கு மனமுவந்து அளிக்கப் படுகிற துன்பங்களையேனும் நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். அவற்றிலிருந்து தப்பியோடுவதற்கு முயலாமல், அத் துன்பங்களை நாம் ஈசுவரப் பிரசாதம் எனக்கருதிப் பொறுமையோடு அனுவிப்போமானால், அதுவே நமக்குத் தவமாக மாறி, நம்மிடத்திலே தவ வலிமையை உருவாக்கித் தரும். அந்த வலிமையின் மகிமையால், நமக்குப் பிரியமானவர்கள் எல்லாம் நலமாக வாழ்வார்கள். நாம் நினைத்த காரியங்கள் அனைத்தும் இனிதே நிறைவு பெறும்.

எனவே, உலகில் வெற்றிகரமாக வாழ்வதற்காகவேனும், நாம் துன்பங்களைக் கண்டு அஞ்சியோடாமல், அவற்றைப் புன்முறுவலோடு பொறுத்துக் கொள்ளவேண்டும்.

பஞ்ச மகா யக்ஞம்

ஸ்ரீ சுவாமி சிவானந்தா

மனத்தூய்மை பெற இல்லறவாசிகளுக்கென்று ஏற்பட்டுள்ள பஞ்ச மகா யக்ஞத்தைப் பற்றி, ஒரு சில வார்த்தைகள் கூறுகிறேன். மாபெரும் ஐந்து வேள்விகளாவன:-

1. தேவயக்ஞம்: வேதமஹா மந்திரங்களை ஓதிக் கொண்டே தேவர்களுக்குக் காணிக்கை அல்லது நைவேத்தியம் வழங்குதல்.

2. ரிஷியக்ஞம்: வேதங்களைக் கற்றல், மாணவர்களுக்கு வேதங்களைக் கற்பித்தல், ரிஷிகளுக்கு காணிக்கைகளைச் செலுத்துதல் ஆகியவைகளடங்கியவை.

3. பித்ரு யக்ஞம்: தர்ப்பணம், உயிர் நீத்தவர்களுக்குக் காணிக்கைகள், சிராத்தம் அல்லது நம்மை விட்டுப் பிரிந்தவர்களுக்கு வருடாந்திரச் சடங்குகள் முதலியன செய்தல்.

4. பூத யக்ஞம்: பசுக்களுக்கும், காக்கைகளுக்கும், விலங்கினங்களுக்கும் அமுது படைத்தல். இது சமரச அன்பையும், அத்வைத (எல்லோரும் ஓரினம் என்ற) உணர்ச்சியையும் பெருக்க வல்லது.

5. அதிதி யக்ஞம்: செல்விருந்தோம்பி வருவிருந்தளித்துக் கௌரவித்தல்.

ஒவ்வொரு இல்லறவாசியும் இவ்வைந்து வேள்விகளையும் புரிதல் வேண்டும். இதைச் செய்ய ஒருவன் தவறுவானேல், பிரத்யவாய தோஷம் அல்லது புறக்கணிப்பதால் உண்டாகும் பாவத்திற்கு ஆளாவான். தீ மூளும் இடம், நீர்க்குடம், அறுத்தல், அரைத்தல், தேய்க்கும் கருவிகள் — இவைகள் உள்ள இடங்கள் ஐந்திலும், அன்றாடம் உயிருக்கு தீங்கு இழைக்கப்படுகின்றது. இங்கு புரியப்படும் பாவங்கள் யாவும் பஞ்ச மகா வேள்விகளால் களையப்படுகின்றன. பூதங்களையும், ரிஷிகளையும், மக்களையும், தேவர்களையும், பித்ருக்களையும் திருப்திப்படுத்துவதற்கான இவ்வேள்விகளை ஒவ்வொரு மனிதனும் செய்துமுடித்தல் வேண்டும்.


பிதுர்லோகத்தில் பிதுருக்களாகிய நம் முன்னோர்கள் வாழ்கின்றனர். அவர்கள் பொறிபுலன்கள் உதவியின்றியே ஞானப் பார்வையும், கேட்கும் ஆற்றலையும் படைத்தவர்கள். மந்திரங்கள் ஓதப்படும் காலத்து, வானத்திலே பரவியுள்ள மின் ஆற்றலுடன் கூடிய காற்றின் அலைகள், அதிதீவிரமாக இயங்கத் தொடங்குகின்றன. நம் முன்னோர்கள் யாவரும், கேட்கும் ஆற்றல் மூலம் ஒலிகளைக் கேட்டுப் பெருமகிழ்வு கொள்கின்றனர்.

இக் காணிக்கையைச் செலுத்து கின்றவர்களை அவர்கள் போற்று கின்றனர், வாழ்த்துகின்றனர். சிராத்தம் அல்லது திவசம் கொடுக்கும் காலத்து, படைக்கப் பட்ட அமுதின் சாரம் சூரியனின் ஒளிக் கதிர்கள் மூலம் சூரியலோ கத்திற்கு எடுத்துச் செல்லப்படு கிறது. இக்காணிக்கையின் மூலம் இம் மண்ணுலகை விட்டுப்பிரிந்த ஆவிகள் மகிழ்ச்சியடைகின்றன.

ஜெர்பன் நாட்டிலும் கூட, அநேக மக்கள் தர்ப்பணமும், சிராத்தமும் செய்கின்றனர். இத்தகைய காணிக்கைகளின் நற் பயன்களை விஞ்ஞான ரீதியில் பரி சோதித்து, நம்பிக்கை யூட்டும் முடிவுக்கு வந்துள்ளனர். ரிஷி களையும் நம் முன்னோர்களையும் திருப்திப்படுத்த சிராத்தமும் தர்ப்பணமும் செய்வது, இல்லற வாசிகளின் அத்யாவசியமான அல்லது தலையாயகடமையாகும். விபரீத அல்லது வக்கிர புத்தி யுடன் கூடிய தவருன கருத்துக் கொண்டவர்கள்தான், நெறி தவறி, புனிதம் மிக்க சடங்கு களைப் புரியாது புறக்கணித்து விடுகின்றனர். பின்னர்ப் புக்த கணக்குப் போட்டதன் பயனுக அவதிப்படுகின்றனர்.

❋

சத சுலோகி



வேத வேதாந்த
வித்வ ரத்னம்
பிரம்மஸ்ரீ
**ஆர். முத்துகிருஷ்ண
சாஸ்திரிகள்**

[ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள், அத்வைத சித்தாந்தத்தின் சாரமான பொருள்களை உள்ளடக்கி, நூறு செய்யுள்களைக்கொண்ட அற்புதமான நூல் ஒன்றை நமக்கு வழங்கியுள்ளார். அதுவே **சத சுலோகி** எனப்படுவது. தத்துவ ஆராய்ச்சியில் ஆர்வமுடைய பெரியோர்கள் மகிழும் வண்ணம், இந்த நூலுக்கு பிரம்மஸ்ரீ ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரிகள் எழுதியுள்ள எளிய தமிழ் விளக்கம் இந்தஇதழில் ஆரம்பமாகிறது. அன்பர்கள் கருத்தூன்றிப் படித்துப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம். — ஆசிரியர்]

மூவுலகங்களுள் மிக விசித்திரமான பொருள்கள் பல இருப்பினும், ஆத்மஞானத்தை அளிக்கும் ஸத்குருவிற்கு உதாரணமாகச் சொல்லக்கூடிய பொருள் ஒன்றுகூடக் காணப்படவில்லை.

சாதாரணமாக, மற்ற விஷயங்களை போதிக்கின்ற குருக்களுக்கு ஏதாவது ஒரு வஸ்துவை திருஷ்டாந்தமாகச் சொல்லக்கூடுமானாலும், ஒப்பற்ற ஆத்மஞானத்தை

அளிக்கும் குருவிற்கு உதாரணம் எங்கும் புலப்படவே இல்லை.

ஏனென்றால், அப்படிப்பட்ட குரு, தன்னை அண்டிய சிஷ்யர்களுக்கு, நஹி ஞாநேந ஸத்ருசம் பவித்ரமிஹவித்யதே (ஆத்ம ஞானத்திற் கொப்பான புனித மான பொருள்இப்பிரபஞ்சத்தில் இல்லை) என்று ஸ்ரீகீதாசார்யனால் புகழப்பட்ட ஆத்ம ஞானத்தை உபதேசித்து, அவர்களையும் தனக்குச் சமமாகவே— அதாவது ஆத்மஸ்வரூபமாகவே- செய்துவிடுகின்றார்.

''ஸ்பர்சம்'' என்ற ஓர் மணி இருக்கின்றது. அது எப்பொருளுடன் சேருகின்றதோ, அதைச் சுவர்ணமாகச் செய்யும். அதைக் கூட ஸத்குருவிற்கு உதாரணமாகக்கூற இயலாது.

ஏனெனில், அந்த மணி இரும்பைச் சுவர்ணமாகச் செய்யுமானாலும், இரும்பை ''ஸ்பர்சம்'' என்ற மணியாகவே செய்யாது.

ஸத்குரு, தன் சரணங்களில் பணிந்து பணிவிடைகள் செய்யும் சிஷ்யனை, தன் ஸ்வரூபமாகவே பண்ணிவிடுகின்றார். பிரஹ்மஸ்வரூபமான குருவின் உபதேசம் பெற்ற சிஷ்யனும், பிரஹ்மத்தை அறிந்து பிரஹ்மமாகவே ஆகிவிடுகின்றான் என உபநிஷத் கூறுகின்றது.

ஆக, இப்பிரபஞ்சத்தில் உதாரணமாகக் கூறத் தகுந்த பொருளே இல்லாததால், ஸத்குரு ஒப்பற்றவர் ஆவார்.

பிரபஞ்சத்திற்கு அப்பால்பட்ட வஸ்து ஒன்று உண்டு. அதுதான் பரமாத்மா, அல்லது ஈச்வரன். அவரையும் குருவிற்கு உதாரணமாகச் சொல்ல முடியாது.

கீதாசார்யன், ஞானியை ஈசுவரஸ்வரூபமாகவே குறிப்பிடுகின்றார்.

'உபமானமாகக் கூறப்படும் வஸ்து, உபமேயத்தைவிட வேறாக இருக்கவேண்டும். கீதாவாக்கியப்படி, குருவும் ஈசுவரனும் பேதமற்றவர்களாக இருக்கின்றபடியால், குருவிற்கு உதாரணமாக ஈசுவரனையும் சொல்லமுடியாது.

ஆக, மூவுலகங்களுக்கும் உள்பட்ட வஸ்துவோ, அல்லது அப்பால்பட்ட வஸ்துவோ, ஸத்குருவிற்கு திருஷ்டாந்தமாகக் குறிப்பிடத் தகுதியற்றதால், அவர் ஒப்பற்றவர் என்று சித்திக்கின்றது.

சந்தனமரம் இயற்கையாகவே மிகவும் வாசனையுள்ளது. அதைச் சுற்றியுள்ள மரங்கள் அத்துடன் சேர்ந்த மகிமையால் எப்பொழுதும் வாசனையைப்பெற்று, தம் அருகில்வந்தவர்களுடைய தாபத்தையும் போக்கடிக்கின்றன.

அவ்விதமே, ஆசார்யர்களிடமிருந்து பாக்யவசத்தால் ஆத்மஞானத்தைப் பெற்ற சிஷ்யர்களும், தம்மை அண்டியவர்களின் மூன்றுவிதமான தாபத்தையும் பாபத்தையும் தம்முடைய உபதேசங்களால் அடியோடு அழித்துவிடுகின்றனர்.

ஆக, ஆசார்யர்களைப்போலவே அவர்களிடமிருந்து அறிவை பெற்ற சிஷ்யர்களும், தம்மை

அண்டியவர்களை ஸம்ஸார தாபத்திலிருந்து கரையேற்றி விடுகின்றனர்.

மூன்றுவித தாபங்கள்: (1) ஆத்யாத்மிகதாபம் — உடலில் உண்டாகும் துன்பங்கள். (2) ஆதிபௌதிகதாபம்—மற்ற பூதங்களால் (அதாவது, தேள் பாம்பு முதலியவைகளால்) ஏற்படும் துன்பங்கள். (3) ஆதி தைவிக தாபம் — தெய்வாதீனமாக (அதாவது இடி, மின்னல் பூகம்பம், புயல் முதலியவற்றால்) ஏற்படும் துன்பங்கள்.

மூன்றுவித பாபங்கள்: (1) உடலால் செய்யப்படும் பாபங்கள்—பிறரை அடித்தல் முதலியன (2) வாக்கால் செய்யப்படும் பாபங்கள்—பிறரை நிந்தித்தல் முதலியன. (3) மனத்தால் செய்யப்படும் பாபங்கள் — பிறருக்குக்கேடு நினைத்தல் முதலியன.

குருபதேசத்தால் ஆத்ம ஞானத்தைப் பெற்றுவிட்டால், மேற்படி தாபங்களும் பாபங்களும் அழிந்துவிடும். மீண்டும் உண்டாகமாட்டா.

பலஜன்மங்களில் செய்த புண்ணிய வசத்தால்தான், ஆத்ம ஞானம் சித்திக்கும். ஆத்ம ஞானிகளை நாடிச் செல்லுவதுகூட, பாக்ய வசத்தால்தான்!

சிஷ்யர்களின் நிலைமைக்கு ஏற்றபடி, அவர்களுக்குக் கர்மம், பக்தி, ஞானம் முதலியவற்றை ஆசார்யர்கள் உபதேசம் செய்வதற்கு, அவர்களுடைய கருணைதான் காரணமன்றி, வேறு காரணம் கூறமுடியாது.

முதல் முதலில் தத்வத்தை விசாரம் செய்ய ஆரம்பிக்கையில், "ஸத்யம் ஞானமனந்தம் பிரஹ்ம" என்ற சுருதியின்மூலம், ஸத்யமாக இருப்பது ஆத்மா. அஸத்யம் (அதாவது மித்யையாக இருப்பது) அனாத்மா என்று தெரியவருகிறது.

பிறகு விசாரம் செய்கையில், அந்த ஆத்மபிரதீதி (தோற்றம்) யும் இரண்டுவிதம் என்று புலப்படுகிறது.

ஒன்று, தேஹசம்பந்தத்தால் ஏற்படக்கூடிய 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்பது. அதாவது 'நான்' என்று சொல்லக்கூடியது, இந்த பௌதிகமான சரீரமல்ல; இச்சரீரம் எதனால் பிரகாசிக்கின்றதோ, அந்த ஆத்மாதான் என்று ஏற்படுகிறது.

பிறகு, பலவித யுக்திகளைக் கொண்டு, இப்பிரபஞ்சம் முழுவதும் பிரஹ்மத்தைத் தவிர வேறல்ல, பிரஹ்மமேதான் என்ற தோற்றமேற்படுகிறது.

"எது எதிலிருந்து உண்டாகி, எதிலேயே லயிக்கின்றதோ, அது அதைத்தவிர உண்மையில் வேறல்ல" என்ற ஒரு நியாயமுண்டு.

மண்ணிலிருந்து உண்டாகி மண்ணிலேயே லயிக்கும் குடம் முதலியவை, மண்ணைத் தவிர வேறல்ல. அதுபோல் பிரஹ்மத்திலிருந்து உண்டாகி பிரஹ்மத்திலேயே இப்பிரபஞ்சம் லயிக்கிறது என்று உபநிஷத் கூறுகிறது. ஆதலால் பிரஹ்மத்தைத் தவிர பிரபஞ்சம் வேறல்ல என்று சித்திக்கிறது.

ஆத்மா சேதனன் என்றும், ஞானனந்த ஸ்வரூபன் என்றும், உபநிஷத்துக்களின் மூலம்தான் அறிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. அவரவர்களுடைய சொந்த அனுபவத்தாலேயே அறிந்துகொள்ளக்கூடும்.

தேஹம், இந்திரியம், பிராணன் எல்லாவற்றையும் நியமனம் செய்யக்கூடியவன், தேஹம் முதலியவற்றைவிட மாறுபட்ட ஸ்வபாவமுள்ளவனாக இருக்க வேண்டும்.

உலகில் வண்டி, தேர் முதலியவற்றை நியமனம்செய்கின்றவன், அவற்றைவிட மாறுபட்ட ஸ்வபாவமுள்ளவனாக இருப்பதை நாம் காண்கிறோம்.

ஆதலால் தேஹம் முதலிய ஜடபதார்த்தங்களை நியமனம் செய்கின்ற ஆத்மா, தேஹ விலக்ஷணனான சேதனனாகவும் ஞான ஸ்வரூபியாகவும் இருக்க வேண்டுமென்றுதெரிய வருகிறது.

"ஆனந்தமாகத் தூங்கினேன்" என்று விழித்துக்கொண்டவுடன் கூறுகின்றனர். ஸுஷுப்தி காலத்தில் வேறு ஆனந்தம் ஒன்றுமில்லாததால், ஆத்மாவே ஆனந்த ஸ்வரூபம் என்றுதான் கூற வேண்டும்.

எக்காலத்திலும் ஆத்மா ஆனந்தஸ்வரூபமானாலும், ஸுஷுப்திகாலத்தில்தான் அது ஸ்பஷ்டமாக புலப்படுகின்றதாகையால், இவ்வாறுகுறிப்பிடப் பட்டுள்ளது.

ஆத்மஸ்வரூபம் இவ்விதமிருக்கையில், மூடஜனங்கள் மிகவும் வெறுக்கத் தகுந்த உடலையே ஆத்மா என்று அடிக்கடிக் கூறிக் கொள்வது மிகவும் ஆச்சரியம்!

தன் உடலோ, அல்லது பிறருடைய உடலோ, உள்ளே விஷ்டை, மூத்திரம், கபம் இவற்றுடனும், வெளியே எலும்பு, நரம்பு, மஜ்ஜை, மாம்ஸம், இரத்தம், வஸை, தோல், மேதஸ் இவற்றுடனும் கூடியிருப்பதால் மிகவும் வெறுக்கத் தகுந்தது என்பதை, அனைவரும் நன்கு அறிவர். அப்படியிருந்தும் அதை

ஆத்மா என்று கூறிக் கொள்வது தான் மிக ஆச்சரியம்!

ஆத்மா நித்யம், உடல் அநித்யம். ஆத்மா எப்பொழுதும் ஆனந்தமயம், உடலோ எப்பொழுதும் வெறுப்பை உண்டு பண்ணக்கூடியது. ஆத்மா ஞான மயம், உடலோ ஜடம். இவ்வளவு வித்தியாசங்கள் இருந்தும், உடலையே மூட ஜனங்கள் "நான் நான்" என்று சுட்டிக்காட்டுவது ஆச்சரியமல்லவா?

பெரும்பாலும் உலகில் அனைவரும் தம்தம் உடல், மனைவி, பிள்ளை முதலியவர்களே தம்முடைய சுகத்திற்குக் காரணம் எனக் கருதி, அவர்கள் பெருத்திருக்கிறார்களா அல்லது இளைத்து விட்டார்களா என்று பார்த்துப் பார்த்து, அவர்களை இரக்ஷித்தும் வளர்த்தும் வருகின்றனர்.

மிகப் பிரசித்தமான குலத்தில் பிறந்தவர்களும், நன்குசாஸ்திரங்களைக் கற்றவர்களும் கூட, இவ் விஷயத்திலேயே விசேஷமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆக, அவர்கள் ஆயுள்காலம் முழுவதும் செய்யும் காரியம் என்ன? சுருங்கச் சொன்னால் மாம்ஸமீமாம்ஸைதான்.

"தர்மமீமாம்ஸை, பிரஹ்மமீமாம்ஸை" முதலிய சொற்கள், தர்மம், பிரஹ்மம் முதலிய மிகச் சிறந்த விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தலைக் குறிப்பிடு கின்றன.

மேதாவிகள் அச்சிறந்தவிஷயங்களை ஆராய்ச்சி செய்வதில், எவ்வளவு ஊக்கமுள்ளவர்களோ, அவ்வளவு ஊக்கம், மூடர்களுக்கு மாம்ஸத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் காணப்படுகிறது.


புத்ரமித்ரகளத்ராதிகள் எதனால் ஜீவித்தும், தம்தம் காரியங்களைச் செய்தும், அழகுபெற்றும் வளர்ந்து வருகின்றனரோ, அத்தகைய ஸர்வாந்தர்யாமியான ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி, ஒரு பொழுதும் ஆராய்ச்சி செய்வதே இல்லை. இதுதான் மிகஆச்சரியம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் T. ராமனாதன் 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை



அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

எமது குறிக்கோள்

மக்களின் உள்ளத்தில் ஆத்மிக வேட்கையை எழுப்புவதே, "அருள்" பத்திரிகையின் தலையாய குறிக்கோள்.

சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் போன்ற சமயங்கள் அனைத்தையும்; துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் போன்ற சித்தாந்தங்கள் அனைத்தையும்; என்றும் நாம் சமத்துவ நோக்குடனேயே அணுகி வருவோம்.

மக்களிடையே தெய்வபக்தி, அறவொழுக்கம், சாதனையில் ஆர்வம் இவை வளரவேண்டும் என்பதே, எமது ஆசை. அத்துறையில் சிறப்பான பணிபுரிவதற்கான வாய்ப்பையும் ஆற்றலையும், இறைவன் எமக்கு அன்பர்களின் வாயிலாக அருள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	ஜூன்
கருணை 9	சந்தா	15-6-70
ஆனி, சாதாரண	ரூ. 3-60	விலை 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, "அருள்"
4, தணிகாசலம் செட்டித்தெரு, தியாகராயநகர், சென்னை-17.

௨

ஸ்ரீ குமாரவேள் வணக்கம்

வடலூர்

ஸ்ரீ இராமலிங்க வள்ளலார்

கற்றவர் புகழ்நின் திருவடி மலரைக்
கடையனேன் முடிமிசை அமர்த்தி,
உற்றஇவ் வுலக மயக்கற மெய்மை
உணர்த்துநாள் எந்தநாள் அறியேன்!
நற்றவர் உணரும் பரசிவத் தெழுந்த
நல்லருட் சோதியே நவைதீர்
கொற்றவேல் உகந்த குமரனே! தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே!

அழிதரும் உலக வாழ்வினை மெய்யென்(று)
அலைந்திடும் பாவியேன் இயற்றும்
பழிதரும் பிழையை எண்ணுறேல்! இன்று
பாதுகாத் தளிப்பதுன் கடனே!
மொழிதரு முக்கட் செங்கரும் பீன்ற
முத்தமே! முத்தியின் முதலே!
கொழிதரும் அருவி பொழிதருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே!

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்திர
ஸரஸ்வத்யவதூதஸ்வாமிகள் அதிஷ்டானம்
புதுக்கோட்டை

ஸ்ரீமத் ஸத்குரு

சாந்தானந்த ஸ்வாமிகள்

அருள் கூர்ந்து வழங்கிய

ஆசியுரை

''அருள்'' பத்திரிகையைக் கண்டோம். அருள் மயம் ஆனோம்.

திருவருளை வேண்டுபவர்கள், ''அருளை''ப் படித்துத் திருவருளைப் பெற்று உய்யலாம்.

நமது தேசத்திற்கு, ஏன், உலகத்திற்கே, திருவருள் பெருக்கு எடுக்க வேண்டும்.

மக்கள் பாபத்தினுல் மருள் பிடித்துப் பிதற்றி வருகிருர்கள். இந்த சமயத்தில், நமது தமிழகம் எங்கும், உலகிலுள்ள தமிழர்கள் அனைவரும், படித்து உய்ய வேண்டிய ஒருபத்திரிகை ''அருள்'' பத்திரிகையாகும்.

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!

சுபம்